மாபெரும் மலிவு விற்பனை
விபரம் 28ம் பக்கத்தில்

ஜவுளி அகம்
தங்க மாமளிகை
லிங்கம்
ஏசியன் மாக்கற்
Adler Str-5,
44137 Dortmund, Germany
Tel: & Fax: 0231-143811

France: 10FFrs. GB: 90P Germany: 2.50DM Suisse: 2.50SFrs.

ஈழமுரசு

Eelamurasu Weekly

முரசு: 2 12 - 18 செப்டெம்பர் 1996 முழக்கம் : 87

மாபெரும் மலிவு விற்பனை
விபரம் 28ம் பக்கத்தில்

மளிகைப் பொருட்கள்
வீடியோ பிரதிகளுக்கு
லிங்கம்
ஏசியன் மாக்கற்
Adler Str-5,
44137 Dortmund, Germany
Tel: & Fax: 0231-143811

# ரத்வத்தையின் பதவிக்கு ஆபத்து?

சிறீலங்காவின் பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்காவிற்கும் அவரது சகோதரர் ரத்வத்தைக்கும் இடையிலான மோதல் உச்சக்கட்டத்தை அடைந்துவிட்ட நிலையில் ரத்வத்தையை கட்சியை விட்டு நீக்க சிறீமாவோ அம்மையார் தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

கடந்த வாரம் சிறீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த பல பாராளுமன்ற உறுப்பினர்கள் – சிறீமாவோவின் குடும்பத்திற்கு அவதூறு உண்டாக்கிய ரத்வத்தையை சுதந்திரக் கட்சியை விட்டு நீக்கி அவருக்குத் தண்டனை வழங்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருந்தனர். இதையடுத்து அவரை கட்சியை விட்டு நீக்குவது தொடர்பாக சிறீமாவோ அம்மையார் தனது கட்சியின் முக்கியஸ்தர்கள் பலருடன் ஆலோசித்து வருவதாகத் தெரியவருகிறது.

சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த போதிலும் அவரது சமீபகாலத்து நடவடிக்கைகள்; பத்திரிகைகளில் அவர் தொடர்பான வந்த செய்திகளால் கட்சிக்குள்ளும் சிங்கள மக்கள் மத்தியிலும் அவரது செல்வாக்கு பெரிதும் சரிந்துள்ளது.

சந்திரிகாவின் ஆதரவுடன் பதவிக்கு வந்த ரத்வத்தைக்கும் – முல்லைத்தீவு இராணுவத்தளம் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட பின் அவர் எண்ணியிருந்த 'நவீன சாபுமல் குமரையா' கனவு கலைந்துவிட்டது. அனுரா பண்டாரநாயக்கா வேறு அவர் மீது வழக்குத் தொடர முதல் நடவடிக்கையாக பொலிஸ் நிலையத்தில்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## பாராளுமன்ற தெரிவுக்குழுவிலிருந்து ஐ.தே.கட்சி விலகுகிறது

பாராளுமன்றத் தெரிவுக்குழுவிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி விலகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோரளை தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் அரசாங்கத்தால் தாக்கப்படுகின்றனர். அதனைத் தடுத்து நிறுத்துமாறு பல தடவைகள் நாம் அரசிடம் கோரிக்கை விடுத்திருந்த போதும் அரசு அதற்கான நடவடிக்கை எதனையுமே எடுக்கவில்லை. இந்நிலையில் தேசிய ரீதியான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அரசுக்கு ஒத்துழைப்புக் கொடுப்பதில் அர்த்தமேதும் இல்லையென அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதேவேளை ரணில் விக்கிரமசிங்க கருத்துத் தெரிவிக்கையில் தாம் தொடர்ந்தும் தமிழ்க் குழுக்களுடன் பேசிக்கொண்டிருப்பதாகவும் இந்நேரத்தில் நாட்டின் ஒற்றையாட்சிக்கு குந்தகம் விளைவிக்கும் சந்திரிகா அரசின் தீர்வுத்திட்டத்தை ஐ.தே.கட்சி எதிர்க்கும் என்றும் கூறியுள்ளார்

# யாழ். நகரில் மாணவிகளை இராணுவம் வாகனத்தால் மோதியது

கடந்த 07.09.96 சனிக்கிழமை அன்று க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு துவிச்சக்கர வண்டியில் வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவிகளை சிறீலங்கா இராணுவத்தினர், தமது வாகனத்தால் மோதியுள்ளனர். இதில் ஒரு மாணவி அந்த இடத்திலே உடல் நசுங்கி கொல்லப்பட்டுள்ளார். பலர் படுகாய மடைந்துள்ளனர்.

சம்பவதினம் நண்பகல் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் பரீட்சை எழுதிவிட்டு தமது சைக்கிளில் யாழ்ப்பாணம் கண்டிவீதி வழியாக மேற்படி மாணவிகள் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது அங்கே ட்ரக் வண்டியில் வந்த இராணுவத்தினர் அவர்கள் மீது மோதினர். இதில் அரியாலைச் சேர்ந்த தயாநிதி கணநாதன் என்ற 19 வயது மாணவி அந்த இடத்திலேயே பலியானார். அவருடன் வந்த ஏனையோர் படுகாயமடைந்தனர். அவர்களது பெயர்விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

## பொதுஜன முன்னணி அரசு கவிழும் அபாயத்தில்?

சிறீமாவோ தலைமையிலான பொதுஜன முன்னணி அரசு விரைவில் கவிழும் அபாயம் தோன்றியுள்ளதாக சிறீலங்காவின் பொருளாதார ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சிறீலங்காவின் மொத்த வருமானம் 150 மில்லியன் ரூபாவாக இருக்கிறது. ஆனால் இதில் மூன்றில் ஒரு பங்கான 50 மில்லியன் ரூபாயை அரசு போருக்கு செலவு செய்கிறது. போர் விரைவில் முடிவுக்கு வரவேண்டும் என்பதற்காக மக்களும் மிகவும் பொறுமையாக இருந்து வருகின்றனர். விலைவாசிகள் நாளுக்குநாள் உயர்ந்து கொண்டே வருகின்றன. இதனால் மக்கள் பெருமளவு இன்னல்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

ஐக்கியதேசியக் கட்சி தனது 17 வருட ஆட்சிக் காலத்தில் முன்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## புலிகளின் தியாகத்துக்கு தலைவணங்கும் அமைச்சர்

விடுதலைப் போராட்டத்துக்கு தான் மதிப்பளிப்பதாகவும் தங்களையே தற்கொடையாக்கும் கரும்புலிகள் செய்யும் தியாகத்துக்கு தான் தலைவணங்குவதாயும் அமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பிராந்தியத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் கிழக்குமாகாணத்தில் விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் முஸ்லீம்கள் சகஜ வாழ்க்கையை மேற்கொண்டுவருகின்றனர். முஸ்லீம் வியாபாரிகள் முன்னரைப் போல் அல்லாது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சுதந்திரமாக வியாபாரங்களைச் செய்து வருகின்றனர். சுடவே அண்மையில் முஸ்லீம் கிராமமொன்றில் பாடசாலை மாணவர்களிற்கான உபகரணங்களை விடுதலைப் புலி

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## தீர்வுத்திட்ட நகல் குறித்து சந்திரிகாவுடன் பேச ரணில் மறுப்பு

பெரும் அரசியல் பொருளாதார நெருக்கடிக்குள்ளும், குடும்ப நெருக்கடிக்குள்ளும் சிக்கித் தவிக்கும் சந்திரிகா, இனப்பிரச்சினைக்கென தான் வைத்துள்ள தீர்வுத் திட்டத்திற்கு எதிர்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கா ஆதரவைப்பெற்று அதனை நடைமுறைப் படுத்தி தனது இழந்த செல்வாக்கை மீள பெற்றுக் கொள்ள எடுத்த முயற்சி ரணிலின் ஒத்துழைப்புக் கிடைக்காததால் தோல்வியடைந்துள்ளது.

இதற்கென அவர் ரணிலுக்கு தூதனுப்பியபோது சந்திரிகா நேர்மையற்றவர், நம்பிக்கையில்லாதவர், அவரோடு நான் பேச்சுவார்த்தை நடத்தத் தயாரில்லை என்று அவர் கூறிவிட்டார்.

இந்த நிலையில் சந்திரிகா கொழும்புத் தமிழ் குழுக்களை அழைத்து தனது தீர்வுத்திட்டம்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

ஏசியன் என்ரபிறைஸ்
பட்டுவேட்டி, மாறுகரை வேட்டி ,நாலுமுழ வேட்டி, கிப்ஸ் சாரம்,
பெண்களுக்கான அலங்காரப் பொருட்கள், திருமணத்திற்கான அனைத்துப் பொருட்களும் கூறைச்சேலை, பாவாடை, சட்டை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எல்லா நிறங்களிலுமான சட்டைத்துணிகள்
* தங்க நகைகளுக்கு உத்தரவாதமும் பற்றுச்சீட்டும் வழங்கப்படும் *
ASIAN ENTERPRISE
Tel: 01/291 46 52
Fax: 01/291 46 37
Hohl.Str 78,
8004 Zurich.



1- 1996.09.12.jpg

# பிள்ளையார் பிடிக்கக் குரங்கான கதை

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் பிள்ளையார் சிலை செய்ய முயற்சித்தார். அது குரங்குச்சிலையான சோகவரலாற்றை சிறீலங்காப் பத்திரிகைகள் புட்டுப்புட்டு வைக்கின்றன.

முல்லைத்தீவில் ஏற்பட்ட பிரமாண்டமான இழப்பும், தோல்வியும், கிளிநொச்சியில் வெற்றிகரமாக பின்வாங்கவேண்டிய நிர்ப்பந்தம், ஆயுத பொருளாதார உதவி கேட்டுச் சென்ற கொரியப் பயணத்தில் ஏமாற்றம் ஆகியவற்றால் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் படுமோசமாக பாதிக்கப்பட்ட சந்திரிகாவின் பிரதிமை (IMAGE)மீண்டும் கட்டி எழுப்ப சிறிலங்கா வெளியுறவுத்துறை ஒரு பகீரதப் பிரயத்தனத்தை மேற்கொண்டது. பிரபலமான 'ஏசியவீக்' பத்திரிகையின் கட்டுரையாளரான 'எளுக் குளுக்மான்' என்பவரை வலிந்து அழைத்து வசதிகள் செய்து கொடுத்து, ஜனாதிபதி சந்திரிகாவுடன் இருபதுநாள்

பற்றிக் கட்டுரை வெளியிட்டால் அதன் மூலம் அவரது செயல் திறன்பாடுகள் வெளிநாட்டு அரசுகளுக்கு எட்டி பொருளாதார உதவிகளைப் பெறலாம் என்பதே சந்திரிகா அரசின் சிந்தனையாக இருந்தது. ஆனால் கட்டுரையாளர் தமது கருத்தாக எழுதிய 'சந்திரிகா மிகவும் இனிமையானவர். ஆனால் இந்த இனிமை ஒரு நாட்டை ஆள்வதற்கு தகுதியானதாக இருக்க முடியாது.' என்ற வரிகள் அரசின் நோக்கத்தை தவிடுபொடியாக்கியுள்ளது. இந்த வார்த்தைகளே சந்திரிகாவின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றப் போதுமானதாகிறது.

ஏசிய வீக் கட்டுரையாளர் மேலும் சொல்கிறார் 'ஒரு நாள் காலை சந்திரிகா வன்னிடம் அன்று மாலை தனக்கு விசுவாசமுள்ள 150 புத்திஜீவிகளான சட்டத்தரணிகளுக்கு தான் ஒரு விருந்து கொடுக்கப் போவதாகவும் அதில் கலந்து கொண்டு அவர்களின் கருத்துக்க

## சந்திரிகாவின் புலம்பல்

'இந்தப்பயல் (This Chap) நான் எவ்வளவு கஷ்டப் பட்டு தினமும் உழைக்கிறேன் என்பதைப் பார்க்க எல்லா இடங்களுக்கும் என்பின் தொடர்ந்து வந்தார். ஆனால் தனது கட்டுரையின் இறுதியில் நான் ஒரு போதும் ஜனாதிபதியாக வந்திருக்கக்கூடாது என்ற தனது கருத்தை வெளியிட்டுள்ளதன் மூலம் வெளிநாட்டு முதலீடுகளை இங்கு கொண்டுவரும் முயற்சிக்கு பாதகம் செய்துவிட்டார்' என்றார். 'இந்தப்பயலை வெளியுறவுத்துறை பலமாக சிபார்சு செய்ததாலேயே நான் அவரை வரவேற்றேன்' எனக் குறிப்பிட்டபோது, குறுக்கிட்ட நீதியமைச்சர் பீரிஸ் நீங்கள் கூறியதாக அவர் எழுதியதெல்லாம் சரிதானா என்று கேட்க 'நான் சொன்னதாக எழுதியது எல்லாம் சரிதான் ஆனால் அவர் தனது கருத்தை வெளியிட்டுள்ள விதம்தான் மோசமானது' என்று சந்திரிகா கூறியதாக சுரணி மாலா எழுதியுள்ளார்.

தால் இனி அவர் தலையெடுப்பது சிரமம் என்று கூறியதாக ரைம்ஸ் பத்திரிகையின் அரசியல் விமர்சகர் எழுதியுள்ளார்.'

## புலிகளுக்குத் தடை

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வது பற்றி சிறீலங்கா அரசு தீவிரமாக ஆலோசித்து வந்தவேளையில், தற்போது கொழும்பில் நடக்கும் கிரிக்கட் போட்டிகள் முடிந்ததும் தடை அறிவித்தல் வெளிவரும் என கொழும்புப் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டன. இது சம்பந்தமாக கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரங்களின் உணர்வுகள் எப்படியிருக்கும் என நோட்டம் பார்க்கப் பட்டது. இது சம்பந்தமாக சண்டே லீடர் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் 'லண்டனிலிருக்கும் விடுதலைப் புலிகளின் அலுவலகத்தை மூடுவது சாத்தியமில்லை'. பிரித்தானிய தூதுவரக அதிகாரிகளின் கருத்துப்படி விடுதலைப் புலிகள் பிரித்தானியச் சட்டத்தை மீறும் செயல் எதிலும் இதுவரை ஈடுபடவில்லை. எனவே அவர்களது அலுவலகத்தை மூடவேண்டிய அவசியம் பிரித்தானிய அரசுக்கு இல்லை. அது போலவே கொழும்புத் தமிழ்க் குழுக்களும் மக்கள் முன்னணி அரசின் முக்கியஸ்தர்களும் புலிகள் இயக்கத்தை தடை செய்வதோ, வெளிநாடுகளில் அவர்களது செயற்பாட்டை தடை செய்யும்படி கோருவதோ இப்போதைய சூழ்நிலையில் பொருத்தமாகாது எனக் கூறியுள்ளனர். சந்திரிகா அரசில் திட்டமிடல் பிரதி அமைச்சராக இருக்கும் ஜெயராஜ் பெர்னான்டோ பிள்ளை புலிகளை தடைசெய்ய வேண்டும் என்ற சிங்களத் தீவிரவாதக் குரல்களுக்கு அரசு செவிசாய்க்கக் கூடாது. அப்படிச் செய்வது சமாதான முயற்சியை உடைத்துவிடும் என்று கூறியுள்ளதாக தெரிவித்துள்ளது.

## குமார் எழுதிய கடிதம்

அ.இ.காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் விடுதலைப் புலிகளை தடைசெய்வது சம்பந்தமாக அரசு எடுத்த முடிவை ஆட்சேபித்து ஜனாதிபதிக்கு காரசாரமாக எழுதிய கடிதம் ஒன்றை சண்டே ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

மிகக் கடுமையான வார்த்தைகளைப் பிரயோகித்து சந்திரிகாவிற்கு அவர் எழுதிய கடிதத்தில் முல்லைத்தீவுத் தோல்வியின் பின் ஏற்பட்ட தாக்கத்தால் முட்டாள்தனங்களான காரியங்களைச் செய்கிறீர்கள். விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்யப் போவதாக எதிர்பார்க்கப் படுகிறது. உங்கள் கௌரவத்தைக் காப்பாற்ற நீங்கள் எடுக்கும் -இந்தத் தடை முயற்சி எதிர் விளைவுகளையே தரும். சர்வதேச ரீதியில் நீங்கள் ஒரு பிரதிமையை ஏற்படுத்த முயற்சிக்கிறீர்கள். ஆனால் விடுதலைப் புலிகள் இல்லாமல் சமாதானம் ஏற்படாது. அவர்களை தடைசெய்துவிட்டால் நீங்கள் எதிர்பார்க்கும் மற்றத் தமிழ்க் குழுக்கள் கூட உங்களுடன் பேசுவதற்கு வரமாட்டார்கள். அரசியல் தீர்வுக்கு விடுதலைப்புலிகளின் பங்களிப்பு அவசியம் என்பது அவர்களுக்குத் தெரியும். புலிகள் தடை செய்யப்பட்டுவிட்டால் தமக்கு மதிப்பில்லாமல் போய்விடும் என்பது அவர்களுக்குத் தெரியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



## புலிகளின் அடுத்த இலக்கு

தமிழீழ விடுதலைப் புலிகளின் அடுத்த தாக்குதல் மணலாறு, ஜானகபுர, அல்லது வெற்றிலைக் கேணி இராணுவ முகாமாகவே இருக்கும் என இராணுவ புலனாய்வுத்துறை கருத்து வெளியிட்டுள்ளதால் இம் முகாங்களைச் சுற்றி மேலதிக படைகள் குவிக்கப் பட்டுள்ளன. ஆனால் விடுதலைப் புலிகள் போர்த் தந்திரம் அறிந்தவர்கள். இது ஒரு போர்த் தந்திரமே. அவர்கள் இராணுவத்தின் கவனத்தை திசைதிருப்பிவிட்டு வேறு இலக்கைத்தான் தாக்குவார்கள் என பல பத்திரிகைகள் கடந்த வாரம் செய்தி வெளியிட்டன.

சண்டேலீடர் பத்திரிகையின் பாதுகாப்பு நிருபர் புலிகளின் அடுத்த தாக்குதல் திருகோணமலையிலிருந்து 20 கிலோமீற்றர் தூரத்திலுள்ள குச்சவெளி, அல்லது நிலாவெளி இராணுவ முகாங்களாக இருக்கும் என இராணுவப் புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளதாக எழுதியுள்ளார்.

## கொரியப் புளுகு உடைந்தது

சமீபத்தில் தென் கொரியாவுக்கு சென்று பொருளாதார, இராணுவ உதவிகளைப் பெற முயற்சித்து தோல்வியுடன் திரும்பிய சந்திரிகா அம்மையார், விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற கதையாக தென்கொரியாவில் 30 ஆயிரம் சிறீலங்காப் பிரஜைகளுக்கு வேலைவாய்புக் கிடைக்கதான் ஒழுங்கு செய்துள்ளதாக பிரகடனம் செய்தார். ஆனால் இதை மறுத்த கொரியத் தூதுவர் எஸ்.கே. சுங் வருடம் தோறும் 30 ஆயிரம் வெளிநாட்வர்களுக்கு தென் கொரியா வேலை வழங்குவது என்னவோ உண்மைதான். ஆனால் இதில் 1500 பேரே சிறீலங்காப் பிரஜைகளாக இருப்பார்கள் எனத் தெரிவித்துள்ளதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை எழுதியுள்ளது.

# ஏசியா வீக் அம்பலப்படுத்திய சந்திரிகாவின் மறுபக்கம்

இருந்து, அம்மையார் எப்படி நாட்டுக்காக இரவுபகல் உழைக்கிறார். எப்படி ஊண் உறக்கமின்றிப் பாடுபடுகிறார் என அம்மையாருக்கு நற்சாட்சிப் பத்திரம் வழங்கும் வகையில் ஒரு விவரணக் கட்டுரை எழுதும்படி கோரி அவருக்கு சகல வசதிகளும் கொடுக்கப்பட்டன.

எந்தவித சுகபோக வசதிகளை செய்து கொடுத்தாலும் மனச்சாட்சியுள்ள நேர்மையான பத்திரிகையாளன், தன் மனதுக்கு சரி எனப் பட்டதையே எழுதுவான் என்பதை ஏசிய வீக் நிருபர் நிரூபித்துள்ளார். எந்த நோக்கத்துடன் சிறீலங்கா அரசு அவரை அழைத்து எழுதச் சொன்னதோ அதற்கு எதிர் விளைவுகளைத் தரும்படியாக அவரது கட்டுரை அமைந்துவிட்டது. அது தான் 'பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கானகதை'

இக் கட்டுரையின் மூலம் மேற்குலக நாடுகளைக் கவர்ந்து அதலபாதாளத்தில் விழுந்துள்ள சிறீலங்காவின் பொருளாதாரத்தை சீர்படுத்தவும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தூண்டுவதும் என்பனவே சந்திரிகாவின் நம்பிக்கையாக இருந்தது. அந்த நம்பிக்கை எப்படி சிதைந்து சின்னாபின்னமாகியது என்பது ஒரு சோகக்கதை! கொழும்பு சண்டே லீடர் பத்திரிகையின் அரசியல் விமர்சகர் சுரணிமாலா என்ற புனைபெயரில் எழுதும் அதன் ஆசிரியர் வசந்த பின்வருமாறு கூறுகிறார்.

மக்கள் முன்னணி அரசிற்கு சந்திரிகா ஒரு பெரும் சொத்து என முன்பு நாம் சொன்னோம். பின்பு அவர் ஒரு சொத்து அல்ல, பெரும் சுமை என நாம் எழுதியதை ஏசியா வீக் பத்திரிகை கட்டுரையாளர் உறுதிப்படுத்தியுள்ளார். ஒரு வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சந்திரிகாவுடன் 20 நாட்கள் செலவிட்டு, அவரது நல்லாட்சிமுறை, கடும் உழைப்பு

ளைக் கேட்குமாறும் கூறினார். இரண்டு வருடங்களுக்கு முன்பு இந்த செல்வாக்குள்ள சட்ட வல்லுனர்கள், தமது அமோக ஆதரவை சந்திரிகாவிற்கு கொடுத்தவர்கள். விருந்தின் போது அவர்களில் சிலர் என்னைச் சூழ்ந்து கொண்டு.....

சந்திரிகா தனது பிடியைத் தளரவிட்டு விட்டார் என்றார் ஒருவர். இன்னொருவர், சந்திரிகா செயலற்றவராகிவிட்டார், இப்போது எமக்கு அவர் ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறார் என்றார். ஆக தனது விசுவாசிகளான சட்டத்தரணிகள் சொல்வதை கேட்கும்படி சொன்ன சந்திரிகாவிற்கு எதிராகவே அவர்களது கருத்துக்கள் இருந்தன.' ஏசியா வீக் பத்திரிகையின் முன்பக்கத்தில் தனது படத்தை அழகாக பிரசுரித்துவிட்டு, உள்ளே கட்டுரையில் எழுதப்பட்ட கருத்துக்களைப் பார்த்துவிட்டு சந்திரிகா ஆத்திரத்தில் குமுறினார்.

ஒரு நாட்டின் ஜனாதிபதி தன்னைப்பற்றி நாட்டில் உலவும் வதந்திகளை ஒரு வெளிநாட்டு நிருபருக்குச் சொல்வதால் அதுவும் இரகசியமாகத் திருமணம் செய்து கொண்டமை பலருடன் படுக்கையை பங்கிட்டமை, மதுபோதையில் மிதந்தமை போன்ற செய்திகளைச் சொல்வதால் தன்மீது அனுதாபம் ஏற்படும் என சந்திரிகா நினைத்திருக்கலாம். ஆனால் அவரது இக் கூற்றுக்கள் அவர்மீது அசிங்கமான அபிப்பிராயத்தையே உருவாக்கி உள்ளன என்று வேறொரு கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார்.

## ஏசியா வீக்கிற்கு தடை

கிட்டத்தட்ட சண்டே லீடர் சுரணி மாலாவின் கருத்தை ஒட்டியே சண்டே ரைம்ஸ், அரசியல் விமர்சகர் எழுதியுள்ள போதிலும், புதிய ஒரு செய்தியையும் அவர்

# சிதைந்துபோன பிரதிமையால் குலைந்துபோன வெளிநாட்டு உதவிவாய்ப்பு

மாலை 3.00 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வழமைபோல் தாமதமாக வந்த சந்திரிகாவின் வருகையால் 5.20 மணிக்கு ஆரம்பமான வர்த்தகப் பிரமுகர்களின் மகாநாட்டில் ஏசியா வீக் கட்டுரையின் தாக்கம் வெளிப்பட்டது. பல கேள்விகள் எழுப்பப்பட்டன. சந்திரிகா சாதுரியமாக பதிலளித்தாலும் அவை திருப்திகரமாக இருக்கவில்லை. வெளிநாட்டுப் பொருளாதார உதவிகளைப் பெறும் எனது முயற்சிக்கு இந்தக் கட்டுரை பாதகமாக அமைந்துவிட்டது என்பதை சந்திரிகா ஒப்புக் கொண்டார்.

கூறுகிறார். 'உள்நாட்டிலும், தனது பிரதிமையை பெரிதுபடுத்திக் காட்ட ஏசியா வீக் மூலம் எடுக்கப் பட்ட முயற்சி எதிர் விளைவுகளைத் தந்ததால் இப்போது அப் பத்திரிகையை சிறீலங்காவில் தடை செய்ய முயற்சி நடக்கிறது. ஏசியா வீக் கட்டுரையாளர் சந்திரிகா பற்றி அனுதாபமாக எழுதினாலும் பல யதார்த்த உண்மைகளையும் அவர் வெளியிட்டுள்ளார். இது பற்றி சந்திரிகா அரசின் மூத்த அமைச்சர்கள் கருத்துத் தெரிவிக்கையில் இந்தக் கட்டுரை, சந்திரிகாவின் நற்பெயருக்கு களங்கம் விளைவித்து விட்ட

**தொகுப்பு: சர்க்கரவர்த்தி**

## உள்ளதைக் கொஞ்சம் ஒழுங்காக் கதைப்பம்

**இந்தப் பிள்ளை உனக்குப் பிறக்கேல்ல...**
**இல்ல எனக்குத் தான் பிறந்த்து... நீ**
**வாயைப் பொத்து.**
**இல்லாது போனா உன்ரை**
**வண்டவாளங்களையெல்லாம்**
**தண்டவாளத்திலை ஏத்தி ஊர் முழுக்க**
**கொண்டு போவன்.. வாயப் பொத்து.**
**சீச்சீ... உது மாறி வந்ததேயொழிய உன்ரை**
**பிள்ளையில்லை...**
**ரொத்தக் கதைச்சியெண்டால்.. கோட்டுக்குத்**
**தான் போகவேண்டி வரும்...**

தம் எழுத வேண்டாம் எங்கட குடும்பத்தை அவமானப்படுத்திப் போட்டாய் எண்டு அம்மையாரும் திரும்பவும் ஒப்பின் லெற்றர் விட்டிருக்கிறா. நிலைமை இப்பிடியே தொடருது. மானநஸ்டாடு கோரி அம்மானுக்கெதிராக மருமகளை அநுரா வழக்குப் போட யோசிக்கிறோ எண்டும் கேள்வி.

கிலுசு கெட்டதுகள் சந்தியில நிண்டு சீலை உரியிறது மாதிரி... என்ன குடும்பிச் சண்டை எண்டு தெரியு

தைக் கொண்டு வர யுத்தத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளுவம் எண்டு அம்மான் ரதவத்தை சொல்லியிருக்கிறார். முல்லைத்தீவை யோசிச்சாரோ..

**சடையர்**

என்ன நாசமறுப்போ தெரியேல்ல... தேவைப்பட்டால் பேச்சு வார்த்தையும் செய்வம் எண்டும் கூடவே சொல்லியிருக்கின்றார். எப்ப தேவைப்படும் எண்டு அவர் சொல்லேல்ல. அவர் சொன்னது மாதிரி.. இதப போல கன

வளவு பெரும் தொகை இராணுவம் அங்கையிருக்கிறதெண்டது... புலியளுக்குப் பிளஸ் பொயின்ட் மாதிரி. பெரும் வில்லங்கப்படாமல் இஞ்சால் பக்கங்களை கட்டுக்கை கொண்டுவந்திட்டினம். ஆமியப் பொறுத்த மட்டில... இதைப் பிடிக்கிறதெண்டால்... அங்கை விடவேணும் அங்கை. பிடிக்கிறதெண்டால் இங்கை விட வேணும் எண்டது மாறாத கணிதம் மாதிரிக் கிடக்குது.

அது சரி உந்த தீர்வுத் திட்டம் என்னவாம்? சனங்களெல்லாம் மறந்திட்டுதுகள். ஆனால் அம்மையாரும்.. அந்த வலது குறைஞ்ச பிள்ளையை வருந்திப் பெற்றெடுத்த அமைச்சர் பீரிசும் மறக்

# தீர்வு எண்டுறதும் தீர்வுத் திட்டம் எண்டுறதும்.. ஒரு திட்டத்தோட..!

இப்பிடி யாரு சண்டை பிடிக்கிறது..? குடிகார ராசுவும்... கொண்டைக்காரப் பொன்னம்மாவும் சந்தியில நிண்டு தண்ணியடிச்சுப் போட்டு.. தவகிற விளையாட்டோ எண்டு கேட்கப்படாது. இது.. சிறீலங்கா நாட்டின்ரை மேன்மைதகு பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்காவும்.. பாதுகாப்புக்கு பொறுப்பாயிருக்கிற அவரின்ரை தம்பி அநுருத்த ரத்வத்தைக்கும் இடையில நடக்கிற அறிக்கைப் போர். சின்னவன்.. அநுரா பண்டாரநாயக்கா குறித்து இப்பிடி அக்கினி யுத்தம் நடக்குது. கொஞ்சம் நாட்பட்ட செய்தி எண்டாலும் சூடாறாமல் தொடர்ந்து சூடாகவே தொடருது. அநுரா பண்டாரநாயக்கா, அக்கா சிறீமாக்குப் பிறக்கேல்லை... ஆசுபத்திரியில ஆள்மா

தில்லை. இவைதான் நாட்டை ஆளுற பொறுப்பிலையும்.. நாட்டைக் காக்கிற பொறுப்பிலையும் இருக்கினம் எண்டதில சிங்களச் சனங்கள் வெட்கப்படாமல் வெட்கப்படலாம். அது சரி, குடா நாட்டில தமிழ்ச் சனங்களை பூவால சோடிச்சு பன்னீர் தெளிக்கப் போறம். தேரேற்றி சனத்தைத் தெருவெல்லாம் இழுக்கப் போறம் எண்டு சந்திரிகா அம்மையார் ராகம் பாடினதைத் கேட்டிருப்பியள். ஆனால் அங்கே சோகம் தான் கேட்குது. பசி பட்டினி எண்டு ஒரு பக்கம் இருக்க இந்த பிரமசத்தியள் செய்யிற அநியாயம் கொஞ்சநெஞ்சமே. கேட்க கேட்க சதுரம் கொதிக்குது. பெண்பிரசுகளை நாசமறுவார் விட்டு வைக்கிறார்களே. கேட்க ஆர் இருக்கினம் எண்ட திமிர். ஆட்களைப் பிடி

முல்லைத்தீவுகளில.. ஏதாவது ஒரு முல்லைத்தீவு அடுத்து விழுந்தால்.. அந்தத் தேவை வந்தாலும் வரலாம். அல்லது போனா அதற்கு முன்னமும் வரலாம்.

பேச்சுவார்த்தைச் சத்தங்கள கொஞ்சம் கேட்கத்தான் செய்யுது. என்ன காரணம் எண்டு சரியாகத் தெரியுதில்ல. சிங்கள அமைச்சர்கள் சமாதானத்தின் பேரால் ஆர்வம் கொண்டவர்களாக ஆளுக்காள் சமாதானப் பேச்சு வார்த்தையின் அவசியம் குறித்துப் பேசுகினம்.

ஒரு ஆள் சொல்லுறார்.. தேவைப்பட்டால் பேசுவம் எண்டுறார். இன்னொருவர் என்னண்டா அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கான கதவை மூடேல்ல எண்டுறார்.

கிலுசு கெட்டதுகள் சந்தியில நிண்டு சீலை உரியிறது மாதிரி... என்ன குடும்பிச் சண்டை எண்டு தெரியுதில்லை. இவைதான் நாட்டை ஆளுற பொறுப்பிலையும்.. நாட்டைக் காக்கிற பொறுப்பிலையும் இருக்கினம் எண்டதில சிங்களச் சனங்கள் வெட்கப்படாமல் வெட்கப்படலாம்.

நாட்டம் நடந்திருக்குது எண்டு அநுராவில உள்ள ஆத்திரத்தில அம்மான் இப்பிடிப் போட, உனக்குத் தேவையில்லாத வேலை, அது எங்கட உள் வீட்டுப் பிரச்சனை... என்ரை பிள்ளையள் எல்லாம் வீட்டிலதான் பிறந்ததுகள்.. ஒருவரும் ஆசுபத்திரியில பிறக்கேல்ல ..வாயை மூடிக் கொண்டு சும்மாஇரு எண்டு சிறீமா அம்மா ஒரு ஓப்பின் லெற்றர் விட்டவா. ஆரோ தூண்டித் தான் அக்கா இப்பிடி ஆத்திரப்பட்டு.. அவசரக் கடிதம் விட்டுட்டா... எண்டு சொல்லி அம்மான் அக்காவுக்கு ஆறுதல் கடிதம் எழுத... இனிக் கடிதம் கிடி

றது அடிக்கிறதும்.. முடிக்கிறதுமாய் தங்கட அற்புதமான சமாதான யாத்திரையை சந்திரிகாவின்ரை நாசகாரப் படை நடத்திக் கொண்டிருக்கிது. கோயிலை இடிக்கிறாங்கள்.... குடியளை எழுப்புறாங்கள்.. பள்ளிக்கூடம் புகுந்து படைத்தளம் அமைக்கிறாங்கள். இப்பிடித்தான்.. அமைதிச் சூழ்நிலையையும் சுமுக சூழ்நிலையையும் ஏற்படுத்த அம்மையாற்ற படை கடுமையாக உழைக்குது.

இதுக்கிடையில... தாங்கள் முன்னமே திட்டமிட்டது மாதிரி... சாமாதானத்

அது சரி பேச்சுவார்த்தை நடக்கிறதெண்டாலும்... போர் நிறுத்தம் வாறதெண்டாலும்.. விடுதலைப் புலியள் சொல்லுவினம் பங்கர்களை விட்டு பக்குவமாய் வெளியில வந்து.. பழையபடி, கூட்டுக்குப் போங்கோ எண்டுவினம். இது சாத்தியப்படுமோ எண்டது தான் பிரச்சனை. என்ன செய்யிறது..? இருந்தாலும் பிரச்சினை. போனாலும் பிரச்சினையெண்டால் என்ன செய்யிறது. குடாநாட்டில ஐம்பதினாயிரத்துக்கும் மேல இராணுவம் இருக்குது. அவையவின்ரை தீவனங்களை கொண்டேச் சேர்க்கிறதெண்டால் பெரும்பாடு. அவ்

னம் இல்லை. பாராளுமன்றத் தெரிவுக்குழுவில அலச அலசெண்டு அலசினதுக்குப் பிறகு எப்பிடியும் அடுத்த வருடம் பாராளுமன்றத்தில மூண்டில் இரண்டு வாக்குகள் பெற.. திட்டத்தை சபையில் முன்வைப்பம் எண்டு போன கிழமை சத்தியம் செய்த பீரிஸ்... எதிர்க்கட்சியளின்ரை ஆதரவைப் பெறுகிறது அவ்வளவு கஸ்டமான காரியமில்லை எண்டும் சொன்னவர். அதுக்குள்ள என்ன நாசமறுந்த நினைப்போ தெரியேல்ல.. இந்தக் கிழமை சொல்லுறார்..

### ஓர் அலசல்

திட்டத்தை நடைமுறைப்படுத்த மூண்டில் இரண்டு ஆதரவில்லையெண்டாலும் அரசாங்கம் தன்ரை திட்டத்திலை விடாப்பிடியாய் நிண்டு தன்ரை துணிச்சலை வெளிப்படுத்தும் எண்டும் சொல்லுறார். பாராளுமன்றத்திலை மூண்டில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெறுகிறது முடியாத காரியம் எண்டது எல்லாருக்கும் தெரிஞ்ச சமாச்சாரம். அப்பிடியும் ஆதரவைத் திரட்டுறதெண்டால்.. தமிழுங்கள் இங்கை இருக்கேலாது.. அவங்களுக்கு நாடில்லை.. நாடோடியள் எண்டு தீர்மானம் நிறைவேற்ற வேணும். சரி இப்பிடி மோட்டுவளத்துக்கு தீர்மானம் போட்டா... அதுக்கும் எதிர்க் கட்சியளின்ரை ஆதரவு கிடைக்கும் எண்டு நினைக்கிறியளே.. நிச்சயமாய்க் கிடைக்காது. ஏன் அப்பிடி.. அவை இங்க இருக்கலாம்.. அங்க எழும்பலாம் எண்டு கருத்துச் சொல்லி குழப்பத்தான் செய்வினம். அரசியல் எண்டால்.. இது சகசம்தானே. அது சரி அரசாங்கம் ஒரு பக்கத்திலை எதிர்க் கட்சியள் ஒருபக்கம் நிண்டுகயிறிழுக்கிற களமாத்தான் பாராளுமன்றம் இருக்குது இருக்கப் போகுது. இதில.. தீர்வு.... தீர்வுத் திட்டம்.... நல்ல வசுக்கோப்பு நடக்குது.


பாரிஸ் லாசப்பலில்
உங்களுக்குத் தேவையான அரிசி வகைகள் முதற்கொண்டு கடல் உணவுப் பொருட்கள் போன்ற அனைத்து மளிகைப் பொருட்களும் நம்ப முடியாத மலிவு விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்
மக்கள் கடை (இது உங்கள் கடை உங்கள் தேவைகளுக்கான கடை)
மிகமிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள...
59, Rue Louis Blanc, 75010 Paris. Métro: La Chapelle

# ஜெயலலிதா முன் பிணை பெறத் துடிப்பது ஏன்?

## கருணாநிதி கேள்வி

தன்மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்கள் உண்மை இல்லை எனில் ஜெயலலிதா முன் பிணையில் வெளியே வரத் துடிப்பது ஏன் என்று கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி திருச்சியில் நேற்று நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்.

அப்போது, அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அளித்த பதில்கள் வருமாறு:

**கேள்வி: நகரசபை, பஞ்சாயத்து தேர்தலையொட்டி தி.மு.க. கூட்டணியில் புதிய கட்சிகள் சேர்க்கப்படுமா?**

**பதில்:** தி.மு.க. கூட்டணியில் புதியதாக சேர விரும்பும் கட்சிகளுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம், கருத்து தி.மு.க. விற்கு பொதுவாக உள்ளது.

ஆனால் இதுபற்றி கூட்டணியில் உள்ள தமிழ் மாநில காங்கிரஸ், தேசிய லீக், பார்வார்டு பிளாக் ஆகிய கட்சிகளுடன் கலந்து பேசி முடிவு எடுக்கப்படும்.

தி.மு.க. கூட்டணியில் சேர விருப்பம் தெரிவித்து பாட்டாளி மக்கள் கட்சி கடிதம் எழுதி இருக்கிறது. வீரப்பன் தலைமையில் இயங்கும் எம்.ஜி.ஆர். மன்றம் சார்பில் நேரில் வந்து பேசசுவார்த்தை நடத்தி இருக்கிறார்கள்.

**பாட்டாளி மக்கள் கட்சி**

**கேள்வி: பாட்டாளி மக்கள் கட்சியை தி.மு.க. கூட்டணியில் சேர்த்துக்கொண்டால் தமிழ் மாநில காங்கிரசார் எதுவும் பிரச்சினையை ஏற்படுத்துவார்களா?**

**பதில்:** இது பற்றி இப்போது எதுவும் சொல்ல இயலாது. கூடி விவாதிக்கும் போது எல்லாவற்றையும் பேசி முடிவு செய்வோம்.



**இந்தியன் வங்கி விவகாரம்**

**கேள்வி: இந்தியன் வங்கி 1,300 கோடி விவகாரத்தில் மூப்பனாரையும் சம்பந்தப்படுத்தி பேசுவதால் நடக்க இருக்கும் நகரசபை பஞ்சாயத்து தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு பாதிப்பு ஏற்படுமா?**

**பதில்:** மூப்பனார் இதற்கு திருச்சியில் பதில் கூறி இருக்கிறார். அதற்கு மேல் நான் எதுவும் கூறுவதற்கு இல்லை.

ஆனால், இந்தியன் வங்கியில் ரூ. 1000 கோடிக்கு மேல் முறைகேடுகள் நடந்து இருப்பதாக செய்திகளைத்தான் பார்த்தேன். தி.மு.க.வை பொறுத்தவரை அந்த வங்கியில் டெபாசிட் செய்து இருந்த 8 கோடியை எடுத்து வேறு வங்கியில் டெபாசிட் செய்துவிட்டோம்.

**கேள்வி: இந்தியன் வங்கி விவகாரத்தில் சம்பந்தப்பட்ட ஒரு தனியார் நிறுவனம் அண்ணா அறிவாலயத்தின் முகவரியைக் கொடுத்து இருக்கிறதே.**

பதில்: அந்த தனியார் நிறுவனத்திற்கும், அண்ணா அறிவாலயத்திற்கும் (தி.மு.க.) எந்தச் சம்பந்தமும் இல்லை. முன்பு அண்ணா அறிவாலயத்தில் அந்த தனியார் நிறுவனத்தினர் வாடகைக்கு இருந்தார்கள். தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டவுடன் அவர்கள் காலி செய்துவிட்டு போய்விட்டார்கள்.

**விவசாயிகள் பாதிக்க விடமாட்டோம்**

**கேள்வி: காவிரி நீர் பிரச்சினையில் தமிழக விவசாயிகளையும், கர்நாடக விவசாயிகளையும் அழைத்துப் பேசினால் சுமூகமான தீர்வு காண வழி ஏற்படும் என்று மூப்பனார் கருத்துத் தெரிவித்து இருக்கிறாரே?**

**பதில்:** இந்தக் கருத்து குறித்து கலந்து பேசித்தான் முடிவு எடுக்கவேண்டும்.

தமிழகத்திற்குத் தேவையான தண்ணீரைப் பெறுவதற்கு கர்நாடகத்துடன் வரையறுக்கப்பட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு சுமூகமாகப் பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறோம். இதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு தரவேண்டும். அப்போதுதான் சுமூகமான தீர்வு ஏற்படும். காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் எந்தவிதத்திலும் பாதிக்க விடமாட்டோம்.

**நிர்வாகம் சீர்குலையாது**

**கேள்வி: ஊழல் சம்பந்தமாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கைதுசெய்யப்படுவதால் நிர்வாகத்தில் சிக்கல்கள் ஏற்படும். எந்த வேலையும் காலதாமதமாக நடைபெறும் என்று கூறப்படுகிறதே?**

**பதில்:** இது கற்பனையான குற்றச்சாட்டு. ரூ. 30 தொடக்கம் ரூ. 50 வரை லஞ்சம் வாங்கும் அரச குமாஸ்தாவை கைதுசெய்து வழக்குப் போடும்போது, ரூ 30 கோடி தொடக்கம் 40 கோடி ரூபா என்று ஊழலில் சம்பந்தப்பட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருக்கமுடியுமா? ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்த நாகராஜனே கைதுசெய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.



**முன் பிணைக்கு முயற்சிப்பது ஏன்?**

**கேள்வி: கு.ப. கிருஷ்ணன் இன்னும் பிடிபடாமல் இருக்கிறாரே. பொலிசார் உரிய நடவடிக்கை எடுத்து கைதுசெய்யத் தயங்குகிறார்களா? அல்லது வேறு காரணங்கள் மறைந்து உள்ளனவா?**

**பதில்:** அமைச்சராகவே இருந்தவரே இப்படி ஓடி, ஒளிந்து பதுங்கிக்கொண்டு இருக்கிறார். பொலிசார் உரிய நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அதில் குறைசொல்ல வழியில்லை.

ஆனால், செல்வகணபதியை கைதுசெய்தவுடன் ஜெயலலிதா அவசர அவசரமாக அறிக்கை வெளியிட்டார். அதுமட்டுமல்ல, தான் முன்பிணையில் வர வேண்டும் என்றும் துடிக்கிறார். ஊழல் செய்த முன்னாள் அமைச்சர்கள் ஓடி, ஒளிந்து கொள்வதும், முன்னாள் முதலவர் முன் பிணை பெறத் துடிப்பதும் இதைப்பற்றி எல்லாம் என்ன சொல்வது என்றுதான் தெரியவில்லை.

**அவசரப்பட்டு கைதுசெய்ய முடியாது**

**கேள்வி: ஊழல் வழக்குகள் மற்ற சில வழக்குகளில் ஜெயலலிதா முதல் குற்றவாளி என்று குறிப்பிட்டும் இன்னும் கைதுசெய்ய தயக்கம் காட்டுவது ஏன்?**

**பதில்:** விசாரணை பூர்த்தியாகாமல் எதையும் அவசரப்பட்டு செய்ய முடியாது. சில வழக்குகளில் கைது செய்யாமலும், விசாரணை நடத்தப்படலாம். கைதுசெய்தும் நடவடிக்கை எடுக்கப்படலாம்.

இதனால் நடவடிக்கையை விட்டுவிட்டோம் என்று அர்த்தம் ஆகாது. யாராக இருந்தாலும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டே தீரும்.

**ஐக்கிய முன்னணி ஆட்சி திருப்தி இல்லை.**

**கேள்வி: மத்தியில் ஐக்கிய முன்னணியின் செயல்பாடுகள் திருப்திகரமாக இல்லை என்ற கருத்து கூறப்படுகிறதே?**

**பதில்:** ஐக்கிய முன்னணியின் செயல்பாடுகளில் என்னைப் பொறுத்தவரை முழுமையான திருப்தி இல்லைத்தான்.

ஆனால், நாட்டு நலனில் அக்கறை உள்ளவர்கள், தேவகவுடா தலைமையும், ஐக்கிய முன்னணி அரசும் நீடிக்க வேண்டியது அவசியம் என்றும், கட்டாயம் என்றும் உணர்ந்து இருக்கிறார்கள்.

அலமாட்டி அணைப்பிரச்சினையில் கமிட்டியில் உள்ளவர்களில் ஒருவர் என்ற முறையில் என்னுடைய கருத்தை தெளிவாக சந்திரபாபு நாயுடுக்கு எழுதியிருக்கிறேன்.

அலமாட்டி அணைப் பிரச்சினையால் நாட்டுக்கும், மாநிலங்களுக்கு இடையேயும் எந்த ஒரு பிளவு, பாதகமான விளைவுகள் ஏற்பட்டு விடக்கூடாது என்பது என் கருத்து.

**கைது செய்ய தயக்கமா?**

**கேள்வி: நகரசபை - பஞ்சாயத்து தேர்தல் வரும் இந்தச் சமயத்தில் ஜெயலலிதாவை கைது செய்ய அரசு தயங்குகிறது என்று கூறப்படுகிறதே?**

**பதில்:** யூகங்களுக்குப் பதில் சொல்ல இயலாது. ஜெயலலிதா சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்க தனி கோர்ட்டு அமைப்பது குறித்து அரசு ஆலோசனைதான் செய்து வருகிறது. முடிவு செய்துவிட்டதாக சொல்லுவது சரியல்ல.

# காந்தியின் அஸ்தி யாருக்கு?
# சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு

ஒரிசாவில் கட்டாக் நகரில் உள்ள ஸ்டேட் பாங்கின் தலைமை அலுவலகத்தில் மகாத்மா காந்தியின் அஸ்தி பாதுகாக்கப்பட்டு வருகிறது. கடந்த 46 ஆண்டுகளாக அங்கு வைக்கப்பட்டுள்ள அஸ்தி கலசத்திற்கு காந்தியின் கொள்ளுப் பேரன் துஷார் அருண் காந்தி உரிமை கொண்டாடி வருகிறார். இந்தப் பிரச்சினை சுப்ரீம் கோர்ட்டு வரை சென்றுள்ளது. வழக்கின் முடிவுக்காக காந்தியின் வாரிசும், வங்கி அதிகாரிகளும் காத்திருக்கின்றனர்.

கடந்த மார்ச் மாதம் ஒரிசா வந்த துஷார் அருண் காந்தி தனது கொள்ளு தாத்தாவின் அஸ்தி ஸ்டேட் பாங்கில் இருப்பது அறிந்து அதைப்பெற முயன்றிருக்கிறார். காந்தி மறைந்த சமயத்தில ஒரிசா முதல்வரின் செயலாளராக இருந்தவர் இந்த அஸ்தி கலசத்தை வங்கியில் வைத்துச் சென்றுள்ளதால், மாநில அரசின் அனுமதியின்றி யாருக்கும் அதனைத் தரமுடியாது என்று கூறி வங்கி அதிகாரிகள் கைவிரித்துவிட்டனர்.

எனவே, இந்தப் பிரச்சினையில் தலையிட்டு தமக்கு நியாயம் வழங்க வேண்டும் என்று துஷார் அருண் காந்தி சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதிக்கு கடிதம் அனுப்பினார். இந்தக் கடிதத்தையே மனுவாக எடுத்துக்கொண்டு கடந்த ஜூலை மாதம் தலைமை நீதிபதி ஒரிசா அரசுக்கும் ஸ்டேட் பாங்க் நிர்வாகத்திற்கும் நோட்டீஸ் அனுப்பினார். 6 வாரங்களுக்குள் இது தொடர்பாக பதில் அனுப்ப வேண்டும் என்றும் இந்த மாதத்தின் மூன்றாவது வாரத்தில் விசாரணை தொடங்கும் என்றும் கோர்ட்டு தெரிவித்துள்ளது.

காந்தியின் அஸ்தி கலசத்தை ஒரு பிரச்சினையாக்க விரும்பவில்லை எனவும், இந்த விவகாரத்தில் சுப்ரீம் கோர்ட்டு முடிவு எதுவோ அதை ஏற்க வங்கி தயாராக இருப்பதாகவும் ஸ்டேட் பாங் தலைவர் பி.ஜி. ககோதர் கூறியுள்ளார். காந்தியின் அஸ்தி யாருக்கு? வாரிசுக்கா அல்லது வங்கிக்கா என்பது விரைவில் தெரிந்துவிடும்.

KANNA Imports & Exports Ltd.
(New Ambiha Supermarket)
198 Archway road, London N6 5B13 (Archway கோவிலுக்கு அருகாமையில்)
இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான, உங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும்
மலிவாகவும் விரைவாகவும் உங்கள் வியாபார நிலையங்களுக்கு (ஐரோப்பிய நாடுகள் அனைத்திற்கும்) விநியோகிக்கப்படும்
தொடர்புகளுக்கு: Tel: & Fax: 0181-348 3356
(ADV)

12- 1996.09.12.jpg

# சுக்ராம் ஊழலுக்கு பின்னணியில் மறைந்துள்ள 'பெரிய மனிதர்'

முன்னாள் தொலைதொடர்பு மந்திரி சுக்ராம் ஊழலுக்கு பின்னணியில் 'பெரிய மனிதர்' மறைந்துள்ளார். எனவே பாரா ளுமன்றக் குழு அமைத்து விசா ரியுங்கள் என்று வ.கம்யூனிஸ்டு எம்.பி. பாராளுமன்றத்தில் வற் புறுத்தினார். முன்னாள் மந்திரி சுக்ராம் தொலைபேசி துறை யில் கோடி கோடியாக ஊழல் செய்ததாக கூறப்பட்டது. இது தொடர்பாக சி.பி.ஐ. அதிகாரி கள் அவரது வீட்டில் சோதனை நடத்தினர். அப்போது 3 கோடியே 66 லட்சம் ரூபாய் பணம் அவரது வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டது.

### ஊழலுக்கு உடந்தை

தொலைப்பேசித்துறை ஊழல் தொடர்பாக நேற்று பாராளு மன்றத்தில் சூடான விவாதம் நடைபெற்றது. அப்போது வ.கம் யூனிஸ்டு உறுப்பினர் குருதாஸ் தாஸ்குப்தா பாரர்ளுமன்றத்தில் பேசியதாவது:

தொலைபேசித் துறையில் நடைபெற்று உள்ள ஊழல் சாதாரனமானது அல்ல. மிகப் பெரிய அளவில் ஊழல் நடை பெற்று உள்ளது. இதில் முன் னாள் மந்திரி சுக்ராம் மட்டும தனியாக ஈடுபட்டார் என பதை நம்பமுடியாது.

இந்த ஊழலின் பின்னணி யில் பெரிய மனிதர் இருப்பதற் கான வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்றன. கடந்த ஆட்சி யின்போது நடைபெற்ற ஊழ லில் நிச்சயம் பின்னணியில் சக்தி வாய்ந்த சிலர் இருந்திருக் கக்கூடும்.

### பின்னணி சக்திகள்

இந்த ஊழலில் மேலும் பல அபாயகரமான மனிதர்களும் சம்பந்தப்பட்டு இருக்க வாய்ப்பு இருக்கும் என்றே நம்புகிறேன். போபர்ஸ் ஊழலின் பின்னணி யில் சில பெரிய புள்ளிகள் இருப்பது போல, சாக்கரை இறக்குமதி ஊழலின் பின்னணி யில் சில பெரிய மனிதர்கள் இருந்தது போல இந்த தொலை பேசித்துறை ஊழலுக்கும் நிச்ச யமாக பின்னணியில் பெரிய சக்தி கொண்டவர்கள் இருக் கக்கூடும்.

### குழு அமைத்து விசாரணை

எனவே, இந்த ஊழல் குறித்து விசாரிக்க தனியாக பாராளுமன்ற குழு அமைக்க வேண்டும். அந்த குழு ஊழல் குறித்து தீர விசாரிக்க வேண் டும். மேலும் விசாரணையின் முடிவை பாராளுமன்றத்தின் வாயிலாக பொதுமக்களுக்கு தெரியப்படுத்தவேண்டும்.

தொலைபேசித் துறை ஊழ லில் சம்பந்தப்பட்டு உள்ள அனைவர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது இந்த ஊழல் குறித்து சி.பி.ஐ. அதிகாரிகளும் அமு லாக்கப் பிரிவு அதிகாரிகளும் விசாரணை நடத்தி வருகின்ற னா. அவர்கள் நியாயமான விசாரணை நடத்த வேணடும். அவர்கள் பயமற்ற முறையில் விசாரணை நடத்துவதற்கு வழி வகை செய்யப்படவேண்டும்.

### இவ்வாறு அவர் பேசினார்.

பாராளுமன்றத்தில் வ.கம்யூ னிஸ்டு உறுப்பினர் குருதாஸ் தாஸ்குபதாவின் பேச்சுக்கு உறுப பினர்கள் கரவொலி எழுப்பி வரவேற்பளித்தனர். எதிர்க் கட்சி உறுப்பினர்களும் அவரது பேச்சுக்கு ஆதரவளித்தனர்.

ராஜ்யசபை எதிர்க்கட்சி தலைவர் சிக்கந்தர் பக்த் பேசியதாவது:

தொலைபேசித்துறை ஊழல் குறித்து விசாரணை நடத்த பாராளுமன்றக் குழு அமைப்ப தில் எங்களது பாரதீய ஜனதா கட்சிகு ஆட்சேபனை இல்லை. ஆனால் ஊழலில் தொடர்பு கொணடுள்ள அனைவரையும் கண்டுபிடித்து அவர்களை தண்டிக்க வேண்டும் என்பதே எங்களது கட்சியின் வேண்டு கோளாகும்.

இதற்கு முன்னரும் பல முறை ஊழல் புகார்கள் குறித்து விசாரிக்க பாராளுமனற குழு அமைக்கப்பட்டு உள்ளது. ஆனால், அந்த விசாரணைக ளால் எந்தவித பயனும் ஏற்பட வில்லை. இதுவரை தொடங்கப் பட்ட பாராளுமன்ற குழுவுக் கான விதி அந்த வகையிலேயே அமைந்து இருந்தது. மேலும் ஊழலை விசாரித்த பாராளு மன்ற குழுவின் பரிந்துரைகள் இதுவரை நிறைவேற்றப்பட்ட தில்லை. எனவே ஊழல் செய் தவர்கள் தண்டிக்கப்பட வேண் டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

பாராளுமன்றத்தில் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக சுக்ரா மின் தொலைபேசித்துறை ஊழல் குறித்து விவாதம் நடைபெற் றது. விவாதத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்களும் பாரதீய ஜனதா உறுப்பினர்களும் சுக்ரா மின் ஊழல் குறித்த விசாரணை வேகப்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர். காங்கி ரஸ் கட்சி உறுப்பினர்கள் இந்த பிரச்சினைக்கு எதிராக எதுவும் பேசவில்லை.

சுக்ராமின் மகள் ரிட்டு சர் மாவும் நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் அவர் உடல்நலக் குறைவு கார ணமாக நேற்று விசாரணைக்கு ஆஜராகவில்லை.

சி.பி.ஐ. அதிகாரிகள் சுக்ரா மிற்கு சொந்தமான 4 வங்கிக ளின் லாக்கர்களின் சாவிகளை பறிமுதல் செய்து உள்ளனர். சுகாரமின் நெருங்கிய உறவினர் ஒருவரின் வங்கி லாக்கரை அதிகாரிகள் விரைவில் சோத னையிட உள்ளனர். மற்ற உறவி னர்கள் வீடுகளிலும் அதிரடி சோதனை நடக்கிறது.

# அ.தி.மு.க. கொடி, சின்னம் யாருக்கு? உயர் நீதிமன்றத்தில் வழக்கு

கொடி, சின்னம் யாருக்கு என்பதை தேர்தல் கமிஷன் தான் விசாரித்து முடிவெடுக்க வேண்டும் என்று ஐக்கோர்ட் டில் கண்ணப்பன் மனு செய் துள்ளார்.

அ.தி.மு.க. கட்சிப் பெய ரையோ, கொடியையோ, தேர் தல் சின்னத்தையோ மற்றவர் கள் பயனபடுத்தக் கூடாது என்று ஜெயலலிதா வழக்குத் தொடுத்துள்ளார்.

அதற்கு பதில் மனுத் தாக் கல் செய்திருந்த முன்னாள் அமைச்சர் கண்ணப்பன் மீண் டும் ஒரு இணைப்பு மனுத்தாக் கல் செய்துள்ளார்.



அதில் கூறப்பட்டு இருப்ப தாவது:

கட்சி சின்னம், கட்சி கொடி பற்றிய முடிவை தேர்தல் கமி ஷன்தான் விசாரிக்க வேண்டும். அது குறித்து தேர்தல் கமிஷன் விசாரிக்க இருக்கிறது. எனவே ஜெயலலிதாவின் மனுவை தள் ளுபடி செய்ய வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

முன்னாள் அமைச்சர்கள் கே.கே.எஸ்., எஸ்.ஆர்.ராமச்சந்தி ரன், குழந்தைவேலு மற்றும் சைதை. துரைசாமி, ஐசரி கணே சன், ஆர்.எஸ். முரளிதரன், ஜெ. ராமச்சந்திரன், கோவைத்தம்பி, இ.என். பெருமாள்சாமி, எப். எம். ராஜரத்தினம் ஆகியோர் ஜெயலலிதா தாக்கல் செய்தி ருந்த வழக்கில் பிரதிநிதிகளாக தங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அந்த வழக்கை விசாரித்து வரும் 4-வது உதவி நகர சிவில் கோர்ட்டு நீதிபதி ராஜமாணிக்கத்திடம் ஒரு மனு தாக்கல் செய்துள் ளார்கள்.

### சர்வாதிகாரி ஆட்சி

அதில் கூறப் பட்டிருப்பதா வது:

சர்வாதிகார ஆட்சி நடத்தி மக்கள் விரோதக் கொள்கைக ளைக் கொண்டு ஊழல் புரிந்து கட்சித் தொண்டர்கள், தலை வர்கள் ஆகியோரின் ஆதரவை இழந்தவர் ஜெயலலிதா.

எனவே, 21.08.96 அன்று அ.தி. மு.க. பொதுக்குழுவைக் கூட்டி ஜெயலலிதாவை பொதுச்செய லாளர் பதவியிலிருந்தும், கட்சி யின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்கிவிட் டோம்.

ஜெயலலிதா திட்டமிட்டு யாரையும் தூக்கலாம் என்று செயல்பட்டார். எதிர்ப்பவர் களை அழித்திடும் நோக்கத் தோடு செயல்பட்டார்.

### ஜெயலலிதா ஏற்பாடு

அரசியல் தலைவர்களான ப.சிதம்பரம், சுப்பிரமணியசாமி, போன்றோரைத் தாக்கியதும் வக்கீல்கள் சண்முகசுந்தரம், கே.எம். விஜயன், தலைமைத் தேர்தல் அதிகாரி சேஷன் ஆகி யோர் மீது தாக்குதல் நடாத் தப்பட்டதும் ஜெயலலிதாவின் ஏற்பாட்டில்தான்.



கட்சியிலிருந்து நீக்கப்பட்ட ஜெயலலிதா கட்சி சின்னத் தையோ, கொடியையோ பயன் படுத்தக் கூடாது என்று வழக் குத் தொடுக்கத் தகுதியற்றவர்.

எனவே, இந்த வழக்கில் எங் களையும் பிரதிவாதிகளாக சேர்த்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரிக்கும் 4-வது உதவி நகர சிவில் கோர்ட் டில் ஜெயலலிதா போட்ட மனு மீது சிறிது நேரம் வாதம் நடைபெற்றது. இந்த வழக்கு மீதான விசாரணை இன்னும் தொடர்ந்து நடைபெறுகிறது.

# ஐக்கிய முன்னணியில் எந்தப் பிரச்சினையும் இல்லை

## தேவகவுடா கூறுகிறார்

ஐக்கிய முன்னணியில் எந் தப் பிரச்சினையும் இல்லை என்று தேவகவுடா கூறினார்.

ஜனாதிபதி மாளிகையில் 'கபிர் புரஸ்கார்' விருது வழங் கும் விழா நடைபெற்றது. ஜனா திபதி சங்கர்தயாள் சர்மா விரு துகளை வழங்கினார்.

அந்த விழாவில் பிரதமர் தேவகவுடாவும் கலந்துகொண் டார். விழா நிறைவடைந்த பின்னர், பிரதமர் தேவகவுடா நிருபர்களுக்குப் பேட்டியளித் தார்.

அப்போது அவர் கூறியதா வது:

ஐக்கிய முன்னணியில் எந் தப் பிரச்சினையும் இல்லை. ஐக் கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளை ஒருங்கி ணைப்பதற்காக வழிகாட்டும் குழு அமைக்கப்பட்டு உள்ளது.

எனவே வழிநடத்தும் குழு வின் முயற்சியினால் ஐக்கிய முன்னணி ஆட்சி எந்தவித பிரச்சினையும் இல்லாமல் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றது.

வழிகாட்டும் குழுவுக்கென்று நிரந்த செயலகம் அமைக்கு மாறு கேட்கப்பட்டு வருகிறது. அது குறித்து இன்னும் நான் முடிவு எடுக்கவில்லை. எனவே இப்போதைக்கு அதுகுறித்து எதுவும் சொல்ல முடியாது.



இவ்வாறு அவர் கூறினார்.

ஐக்கிய முன்னணி ஆட்சியில் அங்கம் வகிக்கும் கம்யூனிஸ்டு கட்சிகள் வழிகாட்டும் குழு வுக்கு நிரந்தர செயலகம் அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன.

அவ்வாறு நிரந்த செயலகம் அமைத்து செயல்பட்டால் தான் கூட்டணி கட்சிகளுக்குள் இணக்கம் ஏற்பட அதிக வாய்ப்பு கிடைக்கும் என்று கம்யூனிஸ்டு கட்சிகள் கருதுகின்றன. அவ் வாறு அமைக்கப்படும் செயல கம் ரேஸ் கோர்ஸ் சாலையில் உள்ள பிரதமர் அலுவலகத்தி லேயே அமைக்கப்பட்டால் வச தியாக இருக்கும் என்றும் இடது சாரிக் கட்சிகள் கருதுகின்றன.

வழிகாட்டும் குழுவுக்கு செய லகம் அமைப்பது குறித்து மத் திய உள்துறை மந்திரி இந்திர ஜித் குப்தா கருத்து தெரிவித் துள்ளார். அவர் கூறும்போது, இந்த செயலகம் வெகு நாட்க ளுக்கு முன்னரே அமைக்கப் பட்டு இருக்க வேண்டும். ஆனால் இன்னமும் நடைமு றைப்படுத்தப்படாமல் இருக்கி றது. தற்போது சிலர் இதுகு றித்து கேட்டுள்ளனர். எனவே, இப்போதாவது உடனடியாக வழிகாட்டும் குழுவுக்கு செயல கம் அமைக்க வேண்டும் என்று இந்திரஜித் குப்தா தெரிவித்தார்.

# கிழக்கில் வலிமை பெறும் புலிகளின் படையணிகள்

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களை உள்ள டக்கிய கிழக்கு மாகாணத்தில் அண்மைக் காலமாக விடுத லைப் புலிகள் தமது பலத்தை அதிகரித்துள்ளனர். கிழக்கின் பல பிரதேசங்களை தமது கட் டுப்பாட்டின் கீழ் கொண்டுவந் துள்ளனர். இந் நிலையில் அண் மையில் கிழக்கு சென்று விடுத லைப் புலிகளைச் சந்தித்து திரும்பிய இராணுவ ஆய்வாள ரும், விமர்சகருமாகிய 'தாரகி' அவர்கள் 'சண்டே ரைம்ஸ்' கொழும்பு ஆங்கிலப் பத்திரி கையில் இவ்வாரம் கிழக்கின் இன்றைய நிலைகளை விபரித் துள்ளார். அதன் சுருக்கம் பின் வருமாறு.

புலிகள் மட்டக்களப்பு - அம் பாறை மாவட்டங்களை ஒரு இராணுவ நிர்வாகப் பிராந்திய மாக மாற்றி அமைத்துள்ளனர். புலிகளின் பிராந்தியத் தளபதி யாக கருணா இயங்குகின்றார். அவரை ஏனைய தோழர்கள் அம்மான என அழைக்கின்ற னர். பிராந்திய அரசியல் பிரி வுத் தலைவராக துரை இயங்கு கின்றார். கிழக்கு மாகாணத்தில் கருணாவுடன் ஒன்றாகப் போரிட்டவர் விசு. இவர் தற்போது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு பொறுப்பாளராக உள்ளார் மட்டக்களப்பு - அம் பாறை இராணுவ புலனாய்வுப் பொறுப்பாளர் ரமணன்.

மட்டக்களப்பு மாவட்ட இராணுவப் பொறுப்பாளராக ரமேசும் அம்பாறை மாவட்ட இராணுவப் பொறுப்பாளராக பிரபாவும் இயங்குகின்றனர்.

புலிகளின் நிர்வாகக் கட்டு மானத்தின்படி முன்னர் படு வான்கரை பிராந்தியம் 4-9, வாகரை - வாழைச்சேனை 4-6, அம்பாறை மாவட்டம் 4-8, சிறிய காட்டுப்பகுதி முகாங்கள் - குடும்பிமலை, தொப்பிக்கலை - பெய்ரூட் தொகுதி நிர்வாக அலகுகளாக பிரித்து பெயரி டப் பட்டதுடன் அதற்கேற்ப

2. **விஜயகாந் படைப்பிரிவு (மட்டக் களப்பு மாவட்டத்தின் முன்ன ணிப் போராளி. சென்ற ஆண்டு கிரானில் வீரமரணமடைந்தவர்.)**
3. **விநோதன் படைப்பிரிவு (இது கிழக்கு மாகாணத்தில் ஆயிரத் துக்கு மேற்பட்ட போராளிக ளைக் கொண்ட மிகப்பெரிய படைப்பிரிவு. வடக்கிலிருந்து நடவடிக்கைகளை மேற்கொண் டுவிட்டு தற்போது கிழக்குக்குத் திரும்பியுள்ளது. விநோதன் என்ற போராளி கட்டுமுறிவு விசேட இராணுவ படைப்பிரிவை தாக்கி அழிக்கப்பட்ட போது தலைமைதாங்கி வீரமரணம டைந்தவர்.)**

பொதுவாக எல்லாப் படைப் பிரிவுகளிலிருந்தும் போராளி களை இணைத்து உருவாக்கப் பட்ட படைப்பிரிவு 'ஜெயந்தன் பிரிகேட்' என அழைக்கப்படுகி றது. கிழக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் ஜெயந்தன் பிரிகேட் தற்போது வன்னியில் முகாமிட் டுள்ளது. விடுதலைப் புலிகளின் அதிசக்தி வாய்ந்த இராணுவப் பிரிவாக இது உள்ளது. முன் னர் அம்பாறையின் பொறுப்

1993இல் பூநகரி முகாம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போது கிழக்கிலிருந்து போரா ளிகளை வடக்குக்கு எடுக்க வேண்டியிருந்தது. தற்போதைய நிலமை அப்படி இல்லை.

முடுக்கிவிடப் பட்டுள்ளது.

சூரியக்கதிர்III இன் போது சிவில் நிர்வாகத்தில் கூடுதல் கவனம் செலுத்தாமல் இரா ணுவ அபிவிருத்தியாலும் அத



எனத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளால் கிழக் கில் பல ஆட்சோப்பு மையங் கள் திறக்கப்பட்டுள்ளன. தமி ழீழ பெருண்மிய மேம்பாட்டு

னைப் பலப்படுத்துவதிலுமே கூடுதல் கவனம் செலுத்தினர். இருந்தாலும், முன்னர் மட்டக் களப்பு முழுவதும் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்தபோது வயற் சொந்தக் காரர்கள் பயி

படையினரின் முகாங்கள் உட் பட 44 இராணுவ முகாங்கள் மூடப்பட்டுள்ளன. இவற்றுள் போரதீவு, பழுகாமம், அம்பலத் தடி, அம்பலாந்துறை, 40ம் கொலனி, 39ம் கொலனி, தும் பங்கேணி, புலுகுனாவி, கொக் கட்டிச் சோலை, மகிழடித்தீவு போன்ற முகாங்கள் அடங்கும்.

சிறீலங்கா இராணுவம் வடக் கில் தாக்குதல்களை மேற் கொள்வதற்கு ஆட்பற்றாக்குறை காரணமாக கிழக்கிலிருந்து படையினரை வடக்குக்கு எடுக்க வேண்டியதாலும் இம் முகாங்கள் மூடப்பட வேண் டிய நிலை தோன்றியது. தொட ராக சில தனித் தனி முகாங் களை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்துள்ளனர். ஆனா லும் அரசாங்கம் தொடர்ந்தப டியே இருக்கும் இராணுவ இழப்புக்களுக்கு மத்தியிலும் இம் மாவட்டத்தை தனது கட் டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளவே முயற்சிக்கிறது.

அரசாங்கத்தைப் பொறுத்த வரை வெலிகந்த, வாழைச் சேனை பிரதான விநியோகப் பாதையை தனது கட்டுப்பாட

**புதிய நிர்வாக கட்டுமானத்தின் படி மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் கோட்டம் என அழைக்கப்படுகிறது. இவற்றுக்கு தனித் தனியாக இராணுவப் பிரிவுகள் அமைக்கப் பட்டிருந்தாலும் இப் பகுதியில் மூன்று விசேட தாக்குதல் பிரிவுகள் இயங்குகின்றன.**

பாளராக இருந்த ராம் என்பவ ரின் கீழ் இயங்கும் ஜெயந்தன் பிரிகேட் விடுதலைப் புலிகளின் இரண்டாவது மரபு ரீதியான படைப்பிரிவாக இயங்குகிறது. முதலாவது மரபு ரீதியான படைப்பிரிவு சொர்ணம் தலை மையில் இயங்கும் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு.

பிராந்திய அரசியல் பிரிவு தலைவரான துரை கூறும்போது, கிழக்கில் மிகக் குறுகிய காலத்

திறுவனத்தின் அலுவலகம் கர டியனாறு பகுதியில் உள்ளது. ஈழப்போர்II இல் இந் நிறுவனம் வன்னிப் பெருநிலப் பரப்பில் பெரியளவில் இயங்கவில்லை. ஆனால் தற்போது அங்கு கிடைக் கும் உள்ளூர் வழங்களைப் பயன்படுத்தி அபிவிருத்திக் கான பணிகள் வன்னி எங்கும்

ரிடுவதற்கு தடை செய்யப் பட்ட ஏராளமான நெல்வயல் கள் தற்போது இராணுவம் வெளியேறியபின் நெற்செய் கைக்காக பயன்படுத்தக்கூடிய நிலை தோன்றியுள்ளது.

மட்டக்களப்பில் எஸ்.ரி.எப் எனப்படும் சிறீலங்காவின் விசேட இராணுவ அதிரடிப்

டினுள் வைத்திருக்க முடிகி றது. ஆனாலும் தற்போதைய கணிப்பீடுகளின்படி புலிகள் இந்த பிரதான விநியோகப் பாதையை முடிந்தளவுக்கு தடை செய்வதில் வெற்றிகண்டுள்ள னர். இதேவேளை, இராணுவத் துக்கான மனிதவலு மிக மிகக் குறைவாகவே உள்ளதால் இரா

## விசாலகன் படைப்பிரிவு விஜயகாந்த் படைப்பிரிவு விநோதன் படைப்பிரிவு விசேட தாக்குதல் பிரிவுகளாக இயங்கி வருகின்றன

இயங்கியும் வந்தது.

ஆனால் தற்போது புதிய நிர்வாக கட்டுமானத்தின் படி மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் கோட்டம் என அழைக்கப்படுகிறது. இவற்றுக்கு தனித் தனியாக இராணுவப் பிரிவுகள் அமைக்கப் பட்டிருந் தாலும் இப் பகுதியில் மூன்று விசேட தாக்குதல் பிரிவுகள் இயங்குகின்றன.

1. **விசாலகன் படைப்பிரிவு (ஜோய் எனவும் அழைக்கப்பட்ட இப் போராளி நெக்திகைக் குளத்தில் வீரமரணமடைந்தவர்.)**

தில் எமது இராணுவப் பிரிவு பாரிய முன்னேற்றம் அடைந் துள்ளது. மட்டக்களப்பில் சிறீ லங்கா இராணுவத்தைத் தாக்கி பின்வாங்க வைத்ததில் நாம் வெற்றியடைந்திருக்கிறோம். 'செடபவரை II' இல் அதனை நாம் நிரூபித்துள்ளோம். முல் லைத்தீவு தாக்குதலிலும் நாம் பெரும்பங்கு வகித்திருக்கி றோம். தற்போதைய நிலையில் வடக்கில் ஒரு பெரும் தாக்கு தலை நடாத்தும் அதேநேரம் கிழக்கிலும் ஒரு பெரும் தாக்கு தல் நடாத்த எம்மால் முடியும்.

டோட்மூண்ட் பிறைட்டன் ஜுவல்லறி
றெக்ஸ்ரைல்ஸ் & வீடியோ
ஆகிய விற்பனை நிலையத்தின்
மலிவு விற்பனை 10.09.96 முதல் 05.10.96 வரை
மலிவு விலைப் பொருட்களில் உதாரணத்திற்கு சில

100 கிராம் மோரி மிளகாய் 99 பெனிக்
450 கிராம் HORLICKS போத்தல் 4.95DM
1 கிலோ வறுத்த அரிசிமா 2.95DM
500 கிராம் வறுத்த பெட்டி, போத்தல் தூள் 4.45DM
20 கிலோ Tilda புறோக்கன் பஸ்மதி அரிசி 24.90DM
Audio Lby 1.95 DM முதல் 3.95DM வரை

RAMY, PYRAMID உட்பட அனைத்து வகை CD களும் 6.90DM முதல் 12.90DM மட்டுமே
ஒரிஜினல் வீடியோ பாட்டுக் கொப்பிகள், ஒரிஜினல் வீடியோ தமிழ் படங்கள் யாவும் 7.90DM முதல் 14.90DM மட்டுமே.
1 பவுண் தங்கநகை (வரி, கூலி உட்பட பும்மேமொடல் தவிர்ந்து) 195DM

* பட்டுப் புடவைகள் றெடிமேட் ஆடைகள், எவர்சில்வர் பாத்திரங்கள் அனைத்தும் மலிவு விலையில்
* மூவாயிரத்துக்கும் அதிகமான தமிழ் வீடியோ படங்கள் வாடகைக்கும், விற்பனைக்கும் கிடைக்கும்
ஜேர்மனியில் எப் பாகத்திற்கும் பொருட்களைப் பெற விரும்புபவர்களுக்கு தபாலில் NACHNAME மூலம் உடன் அனுப்பிவைக்கப்படும்.
திருமண, பிறந்தநின அழைப்பிதள்கள், T.V, வீடியோ திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

BRIGHTAN VIDEO & ASIA SHOP JEWELLERY & TEXTILES
OESTERMARSCH 27/37, 44145 DOUTMUND - Tel: 0231 819431, 838703 Fax: 0231-811858
ADV

Tamileelam Archive

# விரதச் சாப்பாட்டை மறைத்துச் சாப்பிட்ட இந்துக்கள்

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

வரலாற்றுத் தொடர்

34

ஒலிவேரா காலத்தில் யாழ்ப்பாண மக்கள் அதிகளவிற்கு கிறிஸ்தவர்களாக மதம் மாறியதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

1. யாழ்ப்பாண இந்து சமூக அமைப்பில் நிலவிய கறாரான அடிமைத்தனம்.
2. கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு மட்டுமே அரசபதவிகள் வழங்கப்படுமென ஒலிவேரா அறிவித்தமை.

ஒலிவேராவின் காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த இந்து சமூக அமைப்பில், மீனவர்களும், அவர்களுக்குக் கீழ் நிலையிலிருந்த ஏனைய சாதியினரும், அவர்களுக்கு மேலிருந்த சாதியினரது அடிமை, குடிமைகளாகவே கணிக்கப்பட்டனர். சமூகத்தில் அவர்களுக்கு எந்த அந்தஸ்தும் கிடையாது. பரம்பரை பரம்பரையாக அவர்களது எஜமானர்களுக்கு அடிமைச்சேவகம் செய்வது ஒன்று தான் அவர்களுக்குரிய கடமையாக வகுக்கப்பட்டிருந்தது. உழைப்பதற்குக் கூலி கிடையாது. சொந்த நிலம் வாங்கும் உரிமை கிடையாது. அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட புறம்போக்கு ஒதுக்குப்புற நிலத்திலல்லாது, வேறு நிலங்களில் குடியிருக்கும் உரிமை கிடையாது. ஏட்டறிவு பெறமுடியாது. தங்களது எஜமானர்களுக்கு முன்நின்று தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு நியாயம் கேட்க முடியாது.

இவையெல்லாம் அவர்கள் முற்பிறப்பில் செய்த பாவத்தின் பயனாக அவர்களுக்குக் கிடைத்த பலாபலன், அதாவது முற்பிறப்பில் அவர்கள் பாவம் செய்ததால், இப்பிறப்பில் இழிசாதியினராகப் பிறந்து விட்டார்களென்று வியாக்கியானம் சொல்லப்பட்டது. இப்பிறப்பில் அவர்கள், தங்கள் எஜமானர்களின் மனங்கோணாது அவர்களுக்கு உழைப்பதன் மூலம், அதாவது ஏன் எதற்கு என்று கேட்காமல் அடிமைச் சேவகம் செய்வதன் மூலம் மறுபிறப்பில் உயர்சாதியில் பிறக்கலாம் என்று அதற்குப் பரிகாரமும் சொல்லப்பட்டது.

யாழ்ப்பாணத்திற்கு முதலில் கிறிஸ்தவ மதப் பிரச்சாரம் செய்ய வந்த பிரான்சிஸ்கன் சபையினர், இந்த சமூக முரண்பாட்டை சரியாகப் புரிந்து வைத்துக்கொண்டு, தங்களது மதமாற்று பிரச்சார நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். 'கஷ்டப்பட்டுப் பாவம் சுமக்கிறவர்களுக்கு விடுதலையளிப்பவர் யேசுநாதர். அவர் அன்புமயமானவர். அவர் யாரிடத்திலும் பாகுபாடு காட்டுவதில்லை. பகைவனிடத்திலும் அவர் அன்பு செலுத்தும்படி சொன்னவர். அவர் எல்லாத் துன்பங்களிருந்தும் நமக்கு விடுதலையளிக்கக் கூடியவர்' என்று இவர்கள் இந்த மக்கள் மத்தியில் பிரசாரம் செய்தார்கள். அதோடு அவர்களுடைய அழுக்கடைந்த சேரிப்புறங்களைத் தேடிச்சென்று அவர்களைத் தொட்டு ஆசீர்வதித்து ஆறுதலும் சொன்னார்கள்.

இவையெல்லாம் உண்மையிலேயே அந்த மக்களுக்கு மெய்சிலிர்க்க வைக்கும் நிகழ்ச்சிகளாக இருந்தன. ஒரு இந்து மத குரு தெருவில் வந்தால் அவர்கள் எட்டடி தூரம் தள்ளி நின்று, தோள் துண்டை எடுத்து சுக்கத்தில் வைத்துக்கொண்டு கூனிக் குறுகி நின்று மரியாதை செலுத்தவேண்டியிருந்தது. வயது குறைந்தவர்கள் கூட வயது முதிர்ந்த இவர்களை வாடா போடா என்று ஒருமையில் அழைத்ததையும், வசவு வார்த்தைகளால் திட்டியதையும் விதிப் பயன் என்று எதிர்ப்பேதும் காட்டாமல் ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. மாறாக, கிறிஸ்தவ மதகுரு ஒருவர், அதுவும் வெள்ளைக்காரர் தங்களுடைய அழுக்கான குடிசைகளைத் தேடி வந்து, தங்களிடம் அன்பொழுகப் பேசி, தங்களைத் தொட்டு ஆசீர்வதித்து, தன்னுடைய கோயிலுக்கு வருமாறு தங்களை அழைத்த செயலானது, அந்த மக்களைப் பொறுத்தவரை, அவர்களது வாழ்வில் கிடைத்தற்கரிய பெரும் பேறாக இருந்தது. தங்களுக்கு இந்தப் பெரும் பேற்றை அளித்த கிறிஸ்தவ குருவை தங்களது இரட்சகராகவும், தங்களுக்கு விடுதலையளிக்க வந்த தெய்வீக மனிதராகவும் அவர்கள் கருதினார்கள். இதனால் பிரான்சிஸ்கன் சபை எதிர்பார்த்ததை விட அதிகளவு மக்கள் குடும்பம் குடும்பமாகவும், கிராமம் கிராமமாகவும் அவர்களது மதத்தில் சேர ஆரம்பித்தனர்.

**போர்த்துக்கேயருக்கு எதிராகப் போராடி, அவர்களுடைய இந்துமத அழிப்புக்கு எதிராகப் போராடி இழந்த யாழ்ப்பாண அரச உரிமையை மீட்பதற்குப் பதில் ஒலிவேராவிடமிருந்து அரச உயர் பதவிகளைப் பெற்று தங்கள் சமூக அந்தஸ்தை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதற்காக பலர், தாங்களும் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்துகொண்டார்கள்.**

அக் காலத்தில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப முதல் முதலில் ஐரோப்பாவிலிருந்து வந்த பிரான்சிஸ்கன் சபையோடு, யேசு சபை, டொமினிக்கன் சபை என்ற வேறு இரண்டு அமைப்புக்களும் குடாநாட்டுக்கு வந்திருந்தன. இந்த மூன்று அமைப்புக்களினதும் நடவடிக்கைகள் ஒன்றோடு ஒன்று குறுக்கிட்டு முரண்பாடுகளைத் தோற்றுவிக்காத வகையில், பிரான்சிஸ்கன் சபை கரையோரக்கிராமங்களிலும், யேசு சபை தரைப்பகுதிக் கிராமங்களிலும், டொமினிக்கன் சபை யாழ்ப்பாண நகரத்திலும் தங்களுடைய மதப் பிரச்சார, மதமாற்ற நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு ஒலிவேரா அனுமதியளித்திருந்தான். இந்த மூன்று சபைகளும் செயலாற்றுவதற்கு தேவைப்பட்ட நிதியையும் அவனே வழங்கி வந்தான்.

குடாநாட்டில் முதல் கிறிஸ்தவத் தேவாலயம் கி.பி. 1602ம் ஆண்டு பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த கண்ணாடிப் பாதிரியார் என்று அழைக்கப்பட்ட பேதுரு து பெத்தான்கோர் (PEDRO DE BETANCOR) என்பவரால் ஊர்காவல்துறையில் கட்டப்பட்டது. முதலில் சிறியதாக கட்டப்பட்ட இத் தேவாலயம் பின்னர் கி.பி. 1614ல் அப்போது யாழ்ப்பாண அரசனாயிருந்த எதிர்மன்னசிங்கப்பரராசசேகரனால் தானமாக அளிக்கப்பட்ட நிலத்தில் - மிகப் பெரியதாகக் கட்டப்பட்டது. அதன் பின்பு ஒலிவேரா ஆட்சியில் - கி.பி. 1621க்கும் 1623க்கும் இடைப்பட்டகாலத்தில் தற்போது அற்புதமாதா என்று அழைக்கப்படும் - வெற்றிமாதா கோவில் யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்டது. இந்தக் கோவிலைக் கட்டியவர்கள் பிரான்சிஸ்கன் சபையினர். இவர்கள் இதேகாலத்தில் புத்தூர், பருத்தித்துறை, சாவகச்சேரி, கட்டைவேலி, வேலணை, அல்லைப்பிட்டி, இளவாலை ஆகிய இடங்களிலும் கிறிஸ்தவக் கோவில்களைக் கட்டியுள்ளனர். கொழும்புத்துறையில இவர்களால் கட்டப்பட்ட சென். சுவாம் கோவிலே பின்னர் கண்டிக்குளிக்கு மாற்றப்பட்டது. இவற்றைவிட மன்னாரிலும் இவர்களால் 5 தேவாலயங்கள் கட்டப்பட்டன.

யேசுசபையினர் முதன்முதலாக கி.பி. 1627க்கு முன் காரைநகரில் ஒரு தேவாலயத்தைக் கட்டினார்கள். அதன்பின் வட்டுக்கோட்டை, சங்கானை, பண்டத்தரிப்பு, தெல்லிப்பளை, மயிலிட்டி, அச்சுவேலி, புலோப்பளை, சுண்டிக்குளம், முகமாலை, தம்பகாமம் ஆகிய 10 ஊர்களிலும் 10 கோவில்களைக் கட்டினார்கள். இக்காலத்தில் கிளாலிக் கரையில் முகமாலைக் குருவின் மேற்பார்வையில் இருந்த ஒரு சிறு தேவாலயத்தில் பல அற்புதங்கள் நிகழ்ந்ததாகவும், அநேகர் அந்த தேவாலயத்திற்கு யாத்திரை போனார்கள் என்று யேசு சபையினர் எழுதி வைத்துள்ளனர்.

ஒலிவேராவின் காலத்தில் உருவாகிய அநேகமான கிறிஸ்தவ தேவாலயங்கள் அங்கிருந்த இந்து ஆலயங்களை இடித்துத் தள்ளியபின் அவையிருந்த இடத்தில் கட்டப்பட்டவையாகும். சாவகச்சேரியில் வாரிவனஈஸ்வரன் கோவிலும், மானிப்பாய் மருதடி விநாயகர் கோவிலும், நல்லூர் யமுனாரிக்கரையில் நல்லூர் கந்தசாமி கோவிலும், இருந்த இடத்திலேயே அவை இடிக்கப்பட்ட பின் தற்போதுள்ள கிறிஸ்தவத் தேவாலயங்கள் கட்டப்பட்டன. அதுபோல் புத்தூரிலுள்ள புராதன தமிழ் பௌத்த விகாரை இடிக்கப்பட்ட பின்பும் கோப்பாயிலுள்ள தமிழர் அரண்மனை இடிக்கப்பட்ட பின்புமே அங்குள்ள கிறிஸ்தவக் கோவில்கள் கட்டப்பட்டன.

கி.பி. 1621ம் ஆண்டு இந்து மதத்தை கடைப்பிடிப்பதையும் இந்து விக்கிரங்களை வைத்து வழிபடுவதாயும் ஒலிவேரா தடைசெய்ததால் - உண்மையான இந்துக்களாக இருந்த நடுத்தர மக்களும் கீழ்த்தட்டு மக்களும் பெரும் பாதிப்புக்குள்ளானார்கள்.

கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து ஞானஸ்நானம் பெறுபவர்களுக்கே - அரசபதவிகள் என்று அறிவித்ததால் யாழ்ப்பாணக் குடாநாட்டு சமூக அமைப்பின் மேற்தட்டுப் பிரிவிலிருந்தவர்களுக்கு பெரிய நெருக்கடி ஒன்று ஏற்பட்டது. ஏற்கனவே - அவர்களால் சமூக ரீதியாக ஒடுக்கி வைக்கப்பட்டிருந்த மீனவர்களும், ஏனைய அடிமட்ட சமூகத்தினரும் பெருமளவுக்கு கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்துவிட்டதால் அரச பதவிகள் அவர்களுக்கு சென்று விடும் என்று அவர்கள் அஞ்சினார்கள். அவ்வாறு அரச உயர் பதவிகளுக்கு அவர்கள் வந்துவிட்டால் தமது சமூக அந்தஸ்த்து தகர்ந்துவிடும் என்ற பயம் அவர்களுக்கு ஏற்பட்டது.

போர்த்துக்கேயருக்கு எதிராகப் போராடி, அவர்களுடைய இந்துமத அழிப்புக்கு எதிராகப் போராடி இழந்த யாழ்ப்பாண அரச உரிமையை மீட்பதற்குப் பதில் ஒலிவேராவிடமிருந்து அரச உயர் பதவிகளைப் பெற்று தங்கள் சமூக அந்தஸ்தை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதற்காக பலர், தாங்களும் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்துகொண்டார்கள். இவ்வாறு மதம் மாறிப் பதவி பெற்ற பலர் - கிறிஸ்தவ முறைப்படி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டாலும் - அவர்களது கட்டளைப்படி ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் தவறாது தேவாலயத்திற்கு சென்று வந்தாலும் - இரகசியமாக தங்கள் வீடுகளில் - நடராஜா - பிள்ளையார் - முருகன் விக்கிரகங்களை வைத்து வழிபட்டு வந்ததாகவும், அமாவாசை விரதம், பிரதோச விரதம், வெள்ளிக்கிழமை விரதம் ஆகியவற்றை அனுஷ்டித்து வந்ததாகவும் வரலாற்றுக்குறிப்புகளில் காணப்படுகிறது.

ஆனால், இந்து மதத்தையே முற்று முழுதாக நம்பிய மேற்தட்டு மக்களில் ஒரு சிறு பகுதியினரும், பெரும்பாலான நடுத்தர மக்களும், குறைந்தளவு கீழ்த்தட்டு மக்களும் - ஒலிவேராவின் ஆட்சியில் பெரும் கஷ்டங்களுக்கு உள்ளானார்கள். இவர்கள் தாங்கள் வழிபட்ட இந்துக்கோயில்களிருந்த விக்கிரகங்களையெல்லாம் கிணறுகளுக்குள் போட்டுவிட்டும், நிலத்துக்குள் புதைத்துவிட்டும், சில மரங்களை விக்கிரகங்களுக்கான குறியீடாக வைத்துக்கொண்டும், வீட்டின் ஒரு அறையை அல்லது தங்களது காணியின் ஒரு மூலையை வழிபாட்டுக்குரிய இடமாக விக்கிரகங்களோ - பூசைப்பொருட்களோ எதுவுமே இல்லாமல் - கோவிலாக நினைத்துக்கொண்டு வழிபாடு நடாத்திவந்தார்கள்.

ஒலிவேரா எங்காவது இந்த வழிபாடு நடக்கிறதா என்பதை அறிய நாடு முழுவதும் ஒற்றர்களை நியமித்திருந்ததால் இந்த மக்கள் விரத காலத்தில் சாப்பிட்ட இலைகளை வெளியில் எறிந்தால் - பிடிபட்டுவிடுவோம் என்பதற்காக தங்கள் வீட்டுக் கூரைகளுக்கும் வேலிகளுக்குள்ளும் இரகசியமாக செருகிவந்தார்கள். தேவாரம், திருவாசகம், கந்தபுராணம், இராமயணம், மகாபாரதம் முதலான இந்து மத ஏடுகள் எல்லாம் நிலத்துக்குள் புதைத்து வைத்தே அவ்வப்போது எடுக்கப்பட்டன.

- நக்கீரன்

சிறுகதை

# பிரிவு



அடர்த்தியாக மரங்கள் நிற்கும் காடு.

இலையுதிர்ந்த மரங்கள் வெறுமையாக - முழியாக நிற்கின்றன.

காட்டின் கரையொன்றில் பழுப்பேறிய வாங்கிலொன்று, அதன்மேல் வாழ்ந்துவிட்ட அலுப்பில் வானத்தை பார்த்தவண்ணம் ஒரு மனிதவுயிர்: கிழடு.

காட்டிற்கும் அம் மனிதவுயிருக்கும் பிரித்துக் காட்ட முடியாதளவு ஒற்றுமை.

மழை பொழிந்தது.

வேகமாக மனது நோகத்து டித்தது. எப்பவுமே மழையைக் கண்டால் ஆனந்தப்படும் மனது இன்று; நோகத் தொடங்கியது. விளங்கப்படுத்த முடியாத அளவுக்கு வலியுணர்வை மனது விதைத்தது. கிழவன் மசியவில்லை.

ஒரு நொடிப்பொழுது. ஒரேயொரு நொடிப்பொழுது.

வலியை உந்துதல் வேகமாக்கியது. வேகத்திற்குள்

முடங்கிய உணர்வுகள், காட்டையும் - வானத்தையும்,

மாறி மாறிப் பார்க்க வைத்தது. கிழவனை.

அகோரமான, விகாரத்தை மனது உற்பத்தி பண்ணத் தொடங்கியது. ஒரு கணமானாலும் மூச்சுக்காற்றை நிறுத்தி விடலாம். ஆனால் இந்த மனதை - மன வலையை யாரால் நிறுத்தமுடியும்?

ஏதேதோ கூறியது.

"யாருக்கு வேண்டும்?

காலம் போய்விட்டது.

இனியென்ன வேண்டிக்கிடக்குது?

இன்றோ நாளையோ? இப்பவும் கூட தயார்தாம்.

ஆனால் மனசு விரும்பினாலும் வரவேண்டுமே!!"

முழுமையைபோட்டு பிராண்டிப் பிராண்டி போதாக்குறைக்கு தலைவேறு புண்ணாச்சு. அப்படியிருந்தும் கிழவன் விடுவதாகவில்லை.

"ஒன்றைப் பற்றினால் அதையுமுங்குப்பியாய் பிடித்திடணும்."

அப்படித்தாம் எண்ணுகிற கிழவன்.

முடிந்தால் பற்றிக் கொள்வது இல்லையென்றால் மீண்டும், முழுமை - தலையைப் பிராண்டுவதுதாம்.

காற்று அவலச்சூழலை விசாலப்படுத்தியது.

வெக்கையை நிலம் தாராளமாக வாரியிறைத்து வயிற்றெரிச்சலைக் கிளப்ப, நாலு பக்கமும் கிழவனின் கண்கள் பிதுங்கிவிரிந்தன.

"இன்னும் .... இன்னும்.... இதற்குத்தானோ?....

ஏன், இப்படியொரு வேதனை?

எனக்கு மட்டும்தானோ!

எவ்வளவு காலத்துக்கு?

யாரறிவார்?"

போதாக்குறைக்கு மழைவேறு கிழவனைப் புண்படுத்தியது.

மீண்டும், தலைப்பிரண்டல். கிழவனுக்கிது தொட்டில் பழக்கம் போல.....

மூக்குவேற தன்பங்கிற்கு உழைச்சலைக் கொடுத்தது.

"உட்காந்த இடத்தைவிட்டு ஒழும்பிடாலாம்." ஆனால், கிழவனுக்கு முடியவில்லை.

யாருக்காக இவ்வளவு தூரம்?

கட்டையைக் கிடப்பில் போடாமல் காலாற நடப்பதேன்?

இன்னும் வேண்டுமா?

அப்பாடா இனிமேல் தொடரப்படாது!

தொடரும் பொழுதெல்லாம் துன்பம்தாம். வயிறு புகைக்க ஆரம்பித்தது.

நீயிருந்தால் வயிறு சிரிக்கும். இருந்தபோதெல்லாம் இப்படியில்லை.

ஒரு வார்த்தை, ஒரேயொரு வார்த்தை,

அழகாகப் பேசியிருக்கலாம்.

உன்னைவிட்டு இவ்வளவு தூரம் வந்தபின்புதாம் புரிய வேண்டுமென்று தலைவிதிபோல.

தோழுக்குமேலாயில்லை, தலைக்கு மேலேயே வளர்ந்தாச்சு.

இனியென்ன நான், போயிடலாம்!

போய்ட்டாய்.

நான், தவிக்கிறேன்.

தலைக்கு மேலே வளர்ந்து என்ன பிரயோசனம்?

கடைசி காலத்திலைகூட கைகுடுக்கினமில்லை. வடிவா நாலுவார்த்தை பேசும்படியும் எழுதும்படியும் ஆக்கியாச்சு.

இது கடமை.

கட்டில் ஆசைக்குத்தாம் என்றிருக்கப்படாது. அதற்கப்பாலும் சென்றிடணும்.

சென்றாச்சு. இனிப்பயமில்லை.

இனியும் உன்ர வரவு தாமதிக்கப்படாது. வந்திட்டால், சீமாட்டியும் கூடவே சென்றிடலாம்.

காட்டைக் கூடப்பார், அவள் முகம்:!

அலாதியாகப் பதிந்துள்ள காட்சி. இலையுதிர்ந்த இந்த காட்டின் விஸ்தாரணம் ஓட்டிவைத்தது போல் அவள், முகத்தைத்தாமே காட்டுகிறது?

பயப்பிடாதேயென்ற பாவி நான்!

சோறு போகாட்டாலும் பரவாயில்லை. உங்களோட கொஞ்சக்காலமாவது இப்படியே கிடந்துட்டுப் போகிறேன்.

கண்ணைக் குளமாக்கினாள்.

முன்கூடியே அறிஞ்சிட்டாள். எல்லாம் காசுக்காத்தாம். மனிதவுயிர் போனாலும் பரவாயில்லை, காசு... காசு.... தூ .... மிருக உலகமே!

என்பதாயிரம் இந்தியக்காசு உயிரைக்குடிக்க!

ஏன்?

புரியவில்லை.

பிரமையாக இருக்குமோ?

இருந்தாலும் பரவாயில்லை?

அவளைப் பற்றி எதுவாலும் ஏற்கலாம்.

கடற்கரையை நோக்கிப் போனாலும் நீரில் மிதக்கிறாள். காட்டிலும் பறந்தோடுகிறாள்; நெஞ்சிலும் நெருடுகிறாள்.

ஏன்?

என்னை ஆட்கொண்டுவிட்டாளா?

இரண்டு. இரண்டேயிரண்டு போதுமென்றாள்.

இணங்கிட்டேன்.

இப்போ. நான்மட்டும்தாம்.

அவளில்லை.

அதுகள்..... தனிக்கூட்டில்.

என்கூடு... சாம்பலாகேல்லை. ஆனால், துடிப்பில்லை.

உயிர்த்துடிப்பில்லை.

ஒப்பிரேசன் வேண்டாமென்றாள்.

இல்லை. பிள்ளைகள் - செய்யப்பணம் அனுப்புதுகள். நல்ல ஆஸ்பத்திரி - விஜயா ஆஸ்பத்திரி. இது மட்டார்சில் பெரியாஸ்பத்திரி

அவள் இருந்திருப்பாள். கொஞ்சக்காலம் இன்னும். வாழ்ந்திருப்பாள்.

கொலைக்காரங்கள். காசிற்காக... முடியாதெண்டால் விட்டிருக்கலாம். அறுத்துப்போட்டு கதையளக்கிறாங்கள்.

கிழவன் விழிகள் பனித்தன. கூடவே, மக்களுடன் போனில் பேசியது ஞாபகத்திற்கு வந்தது.

அம்மா போயிட்டாள்.

வாங்கடா இந்தியாவுக்கு.

ஐயோ.... அப்பா.... அம்மா.... எங்கட அம்மா.... ஓ...!

அப்பா. விசா இல்லையப்பா. இங்கிருந்து வரமுடியாதப்பா ஜேர்மன் அரசு எதுவும் செய்யமுடியாதெண்டு கைவிரிச்சிட்டுது... அப்பா. என்னப்பா செய்ய?

கைவிட்டுதுகள்.

நாடும் போச்சு. நடுத்தெருவுக்கு வந்தாச்சு.

இனியெங்க?

அன்னிய மண்ணில் எவ்வளவு காலத்துக்கு?

அந்தவுயிர் வாங்கிவிட்டு எழும்பமுயன்றது. முடியவில்லை. இருள் சூழ்ந்துகொண்டு காட்டையும், தெருவையும் ஒருமைப்படுத்தியது. குளிர்காற்று மெலிதாக அவ்வுயிரைத் தொட்டு விலகிக்கொண்டிருந்தது. நிசப்தமயமாக காலம் போய்க் கொண்டது.

நீண்ட இடைவேளைக்குப் பின், அவ்வுயிர் வாங்கிலில் இருப்பதை மறந்தது.

"அப்பூ.... அப்பூ.... ஒழும்புங்களேன்."

"யாரு பிள்ளை?"

"ஏன், இங்கிட்டு இவ்வளவு தூரம்?"

"தூரப்போய்விடத்தான்."

"ஆச்சியில்லையெண்டா?"

'..............'

"ஓங்கட பிள்ளையள் ஜேர்மனியிலிருந்து வரமாட்டாங்களா?"

எல்லாம் கைவிட்டுதுகள்.

"தேவல்லை. நாங்களிருக்கிறம். எவ்வளவு காலத்துக்கு?"

"ஓங்க உசிருபோகும் வரை, நாங்க..... அழுகிறீங்களா? இந்த யாழ்ப்பாணக் கிழவனுக்காக அழுகிறீங்களா?"

"இல்லை."

"அப்ப?"

"மனுசருக்காக, நம்மளப்போல மனுசருக்காக. ஒரு ஜீவனுக்காக."

"அப்படியா?"

'என்ரபிள்ளையளுக்கு இப்படித் தெரியல்லையே! அவங்கள் வரயில்லையே. அம்மாகாறியின்ர இழவு வீட்டுக்கும் வரயில்லையே!'

'காசு தந்தாங்களே! அம்மாக்காறிக்கு ஆப்பிரேசனுக்கு பறந்தடிச்சு அனுப்பினாங்களே தாத்தா!!'

காசா பிள்ளை? அம்மா போயிட்டாளே! அவங்கள், பாக்கம விட்டுட்டாங்களே!!'

'தாத்தா, நேரமாச்சுத் தாத்தா, ராவு பத்தாச்சு. இம்மட்டு நேரமா இங்கிட்டு இருப்பது கூடாது தாத்தா. வாங்களேன் வீட்டில போய்ப் பேசவம்.'

'பிள்ளை கொஞ்சம் புடியடியம்மா கட்டையை ஒழும்புவம்.' கிழவன் தள்ளாடிக் கொண்டான். இருட்டு, எதுவும் அவன் விழிக்குத் தென்படவில்லை. துணையோடு வீடுசேர்ந்தான். வாடகைக்காரனின் குழந்தைகள் நல்லது தான்...... மாசா மாசம் குடுக்காட்டி அவன் விடமாட்டானே.

'எவ்வளவு காலத்துக்குதான்.'

'கட்டிய மாடுகளையும், வீடு வாசலையும் யார், யாரு அங்க அனுபவிக்கிறார்களோ தெரியாது. இஞ்ச நான் வாடகை வீட்டில... அம்மாடி கூடக் கூட்டிக்கொண்டு போவண்டி.'

'இந்த வீட்டில.... இந்த மூலையில தானே கடைசியா உக்காந்து இருந்தாய். இப்ப போயிட்டாய்.'

'இனி நான்....?'

'அதுகள்...?'

கிழவனுக்கு எல்லாம் கேள்விக்குறியாக இருந்தது. வீட்டு வாசலிலிருந்து ஒரு குரல்:

'தாத்தா.... தாத்தா, அப்பா ஓங்களோட சாயந்தரம் கதைக்கனுமெண்டு இருந்தாராம், ஓங்களைக்காணேல்லையாம். விடியக்கதைக்கனுமாம் எங்கேயும் போயிடாதேங்க.'

கிழவன் காதில் எதுவும் விழவில்லை.

அவன் தூங்கிறான்; அது தற்காலிகத் தூக்கம் தாம்.

ப.வி.சிறீரங்கன்

16- 1996.09.12.jpg

# தென் ஆபிரிக்கச் சினிமா

## மபந்த்சுலா / திருடன்

தென் ஆபிரிக்க இன ஒதுக்கல் பற்றி சர்வ தேசிய அளவில் அறியப்பட்ட ஒரு படம் 'காந்தி' பட இயக்குனர் ரிச்சாட் அட்டன்பரோவின் 'ஸ்டீவ் பீக்கோ' (STEVE BITCO) வெள்ளை இனவெறிக்கெதிராகப் போராடி வெள்ளை நிறவெறிப் பொலிசினால் அடித்துக் கொலை செய்யப்பட்ட மனித உரிமைப் போராளி ஸ்டீவ் பீக்கோ. இவர் குறித்து நிறைய தென்னாபிரிக்க நாடோடிப் பாடல்கள் உள்ளன. பிரபல மனித உரிமைப் பாடகர் பீட்டர் கேப்ரியலின் 'பீக்கோ_ பீக்கோ_' பாடல் உலகப் பிரசித்தி பெற்றது. ரிச்சார்ட் அட்டன்பரோவின் படம் பற்றிய விமர்சனத்தில் அப் படம் கறுப்பு மனித உரிமையாளரின் வாழ்வைச் சொல்வதைவிடவும் வெள்ளை வழக்கறிஞனின் போராட்டத்தைச் சொல்வதையே மெய்படுத்தியிருந்தது எனபது சுட்டிக்காட்டப்படுகின்றது.

பிரச்சினை கறுப்பு மனிதர்களின் அன்றாட வாழ்வனுபவம், போராட்டம் பற்றியதாக இருந்தபோதிலும் வெள்ளைத் தாராளவாதியொருவனின் வழியிலேயே அப் பிரச்சினை பார்க்கப்பட்டிருந்தது. இப் பார்வைக்கு முற்றிலும் மாறான ஒரு படம். வரலாற்று ரீதியில் முதல் பிரதான படமாகத் திகழும் படம் 1988-இல் வெளியான 'மபுந்த்சுலா' எனும் படம். தமிழில் திருடன் என்றோ ரௌடி என்றோ இதற்கு அர்த்தம் கொள்ளலாம். படத்தின் கதை கறுப்பரான தோமஸ் மொகுத்லேன் (Thomas Mogotlane) உடையது. இயக்குனர், வர்க்கப் போராட்டத்திலும் கம்யூனிஸ்ட் அரசியலிலும் நம்பிக்கை கொண்ட வெள்ளையர், ஒலிவர் ஸ்மித் புகழ்பெற்ற விவரணப்பட இயக்குனர் இவர். இந்தப் படம் ஐரோப்பிய நாடுகளில் வீடியோவிலும் கிடைக்கிறது. இந்தப் படம் இன ஒதுக்கல் எதிர்ப்புப் படங்களில் ஒரு மைல் கல் என்று இன்றளவும் பாராட்டப்படுகிறது.

80-களில் நிலவிய தென் ஆபிரிக்க நகர்ப்புற அரசியல் எழுச்சிகளையும் அன்றாட போராட்டங்களையும், சிறைகளின் நிலவரங்களையும், இளைஞர்களுக்குள் நிலவிய ஒழுக்க மீறல் மற்றும் அராஜகத்துக்கான அரசியல், பொருளியல் காரணங்களையும் 'மபந்த்சுலா' படம் விளக்கிச் செல்கிறது.

தெம்பா (Themba) தான் படத்தின் மையப் பாத்திரம். தெம்பா தாய், தந்தையற்ற அனாதைப் பையன். சாதாரண பாஷையில் சொன்னால் பேட்டை ரௌடி, திருடன், பொறுக்கி. திருட்டுத்தான் அவனது தொழில். பைகளைப் பறித்துக் கொண்டு ஓடுதல், துணிக்கடைக்குள் புகுந்து திருடுதல், சூதாடுவோரிடம் மிரட்டிப் பணம் பறித்தல், கத்தியைக் காட்டி மிரட்டி காரியம் சாதித்தல், குடித்துவிட்டு இரவு விடுதிகளில் ஆடித் திரிதல் இதுதான் அவனது வாழ்வு. வன்முறையால் விளைந்த அராஜகம். அராஜகமே வாழ்முறை.

**தெம்பா (Themba) தான் படத்தின் மையப் பாத்திரம். தெம்பா தாய், தந்தையற்ற அனாதைப் பையன். சாதாரண பாஷையில் சொன்னால் பேட்டை ரௌடி, திருடன், பொறுக்கி. திருட்டுத்தான் அவனது தொழில். பைகளைப் பறித்துக் கொண்டு ஓடுதல், துணிக்கடைக்குள் புகுந்து திருடுதல், சூதாடுவோரிடம் மிரட்டிப் பணம் பறித்தல், கத்தியைக் காட்டி மிரட்டி காரியம் சாதித்தல், குடித்துவிட்டு இரவு விடுதிகளில் ஆடித் திரிதல் இதுதான் அவனது வாழ்வு.**

காலையில் எழுந்து நியதிப்படி வேலைக்குப் போய் இறுதியில் 'ஏதுமற்று' வாழ்வோர்போல் வாழ அவனுக்கு விருப்பமில்லை. அவனுக்கு ஒரு காதலி. வெள்ளை எஜமானி வீடொன்றில் வீட்டு வேலைக்காரி. சதா இவனை வேலைக்குப்போகச் சொல்லி வற்புறுத்துகிறாள். அடிக்கடி வெள்ளை எஜமானி இல்லாத வேளையில் அவளிடம் வந்து காசு கேட்டுச் சாப்பிட்டுவிட்டு மிரட்டி பணம் பறித்துப் போவது அவன் வாடிக்கை.

அவ்வாறு ஒருநாள் வரும்போது வீட்டு எஜமானியும் அங்கு வந்துவிட, தெம்பாவுக்கும் எஜமானிக்கும் வாக்குவாதம் முற்றி, எஜமானி தெம்பாவின் மீது நாயை ஏவுகிறாள். தெம்பா பெரிய கற்களை எடுத்து கண்ணாடிக் கதவை உடைத்துவிட்டு ஓடிவிடுகிறான். தெம்பாவின் காதலி, அதுவரை தான் செய்த வேலைக்கான கூலிகூட கொடுக்கப்படாது உடனடியாக வேலை நீக்கம் செய்து விரட்டப்படுகிறாள்.

வேலை நீக்கம் செய்யப்பட்டவள் தெம்பாவின் வீட்டு எஜமானியின் மகன் ஜானி மூலம் இன ஒதுக்கலுக்கு எதிரான தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் இயக்கமொன்றின் கூட்டத்திற்குச் செல்கிறாள். அரசியல் கூட்டமொன்றில் சாத்வீதவாதிகளுக்கெதிராக போராட்டப் பாதையைத் தேர்ந்து கொள்ளும் அத் தோழன் ஜானி தொடர்ந்து நகரெங்கும் நடைபெறும் போராட்டங்களில் பங்கு பெறுகிறான்.

தெம்பாவின் காதலிக்கு உதவ முன்வரும் தொழிற்சங்க இளைஞனொருவன், அவளை எஜமானியின் வீட்டுக்குச் சென்று சம்பளம் கோருமாறு சொல்கிறான். அங்கு செல்லும் தெம்பாவின் காதலியை விரட்டும் எஜமானி, போலீசைக் கூப்பிடுவேன் என்கிறாள்.

இந்தச் சூழ்நிலையில் நகரெங்கும் இன ஒதுக்கலுக்கு எதிரான போராட்டம் வன்முறை வடிவமெடுக்கின்றது. வெள்ளை இராணுவமும் பொலீசும் ஆயுத ரீதியிலான ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுகிறது. இளைஞர்கள் தெருக்களில் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். ஜானி காணாமல் போய்விடுகிறான். தொழிற்சங்க இளைஞன் போலீசால் தேடப்பட்டு தலைமறைவாகிறான். தெம்பாவின் காதலி அவனோடு தொடர்ந்து செல்கிறாள்.

**இந்தச் சூழ்நிலையில் நகரெங்கும் இன ஒதுக்கலுக்கு எதிரான போராட்டம் வன்முறை வடிவமெடுக்கின்றது. வெள்ளை இராணுவமும் பொலீசும் ஆயுத ரீதியிலான ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுகிறது. இளைஞர்கள் தெருக்களில் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். ஜானி காணாமல் போய்விடுகிறான்.**

தெம்பாவுக்கு காதலி மறுபடி வேண்டும். ஜானியையும் தேடிப்போகிறான். ஜானியை எங்கு தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. தொழிற்சங்க இளைஞனைத் தேடி தன் காதலியைச் சந்திக்கப் போகிறான் தெம்பா. தொழிற்சங்கவாதியைத் தேடி வரும் போலிஸ் தெம்பாவைப் பின்தொடர்ந்து வந்து இருவரையும் தூக்குகிறார்கள்.

தொழிற்சங்கவாதியும், தெம்பாவும், ஜானியின் தாயும் யதேச்சையாக நடைபெறும் இளைஞர்களின் எழுச்சி ஊர்வலமொன்றின் இடையில் பங்கு பெறுகிறார்கள். ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்தி கலைந்து போகுமாறு கூறிக்கொண்டு கவச வாகனங்களில் ஆயுத போலிஸ் வருகிறது போலிசிற்கும் ஊர்வலத்தினருக்கும் மோதல் வெடிக்கிறது. போலிசின் துப்பாக்கிச் சூட்டில் ஜானியின் தாய் கொல்லப்படுகிறாள். ஜானியும் கொல்லப்பட்டுவிட்டான்.

தெம்பாவும் தொழிற்சங்கவாதியும் போலிசினால் துரத்தப்படுகிறார்கள். போலிசுடன் ஏற்படும் கைகலப்பில் தொழிற்சங்கவாதி தப்பிவிட தெம்பா கைது செய்யப்பட்டு சிறைக்குக் கொண்டு வரப்படுகிறான்.

படம் இரண்டு காட்சிகளின் தொடர்ச்சியாக, ஒரே காலத்தில் மாறிமாறி வரும் காட்சிகளாக நிகழ்கிறது.

தெம்பாவின் பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் படத்தின் முதலிலிருந்து பாதிப்படம் வரை காட்டப்படுகிறது. அதே பொழுதில் தெம்பாவை போலிஸ் விசாரிக்கும் காட்சிகளும் வருகிறது. அவன் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்கள் சிறைவைக்கப்பட்டிருக்கும் கொட்டடியில் அடைக்கப்படுகிறான்.

ஒரு திருடனும், சமூகக் குற்றங்கள் செய்பவனுமான அவனிடம் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்கள் பற்றி விசாரிக்க என்ன இருக்கிறது? தொழிற்சங்கவாதியின் இருப்பிடத்தைக் கண்டு பிடிப்பதற்கும் அவனுக்கும் என்ன சம்பந்தம்?

திரைக்கதை மூன்று காலத் தாரைகளாக நிகழ்கிறது.

1. **தெம்பாவின் உதிரிப்பாட்டாளி வாழ்வு**
2. **சிறைக் கொட்டடியில் கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களில் உண்ணாவிரதம், சர்வதேசிய கீதம், அரசியல் சொற்பொழிவுகள்.**
3. **தெம்பா மீதான விசாரணை, அவனுக்கும் வெளியில் நிகழும் சமூக எழுச்சிகளுக்கும் உள்ள படிப்படியான வாழ்நிலை அனுபவங்களின் வழி அவன் அடையும் அரசியல் பிரக்ஞைக்குமான உறவு.**

திரைக்கதையின் செய்தி தெளிவானது:

உதிரிப் பாட்டாளியின் வாழ்வும், வாழ்வு நிலை அனுபவங்களும், அவனைச் சுற்றிய மனிதர்களின் அனுபவங்களும் எவ்வாறு அவனை போராட்டப் பிரக்ஞை உள்ளவனாக ஆக்குகிறது.

தெம்பா நைச்சியமாக தொழிற்சங்கவாதியின் இருப்பிடத்தைக் காட்டிக் கொடுக்குமாறு கேட்கப்படுகிறான். 'நீ நல்லவன், ஏன் இந்த கம்யூனிஸ்டுகளோடு உனக்கு உறவேற்பட்டது? சொல்லிவிடு. உனக்கு உடனே விடுதலை' என்று நைச்சியமாகக் கேட்கிறார்கள். மறுக்கிறபோது நிர்வாணப் படுத்தி சித்திரவதை செய்கிறார்கள்.

ஜானி காணாமல் போகிறான். கொல்லப்படுகிறான். ஜானியின் தாய் கொல்லப்படுகிறாள். தன் காதலி வேலைக்கான கூலி மறுக்கப்படுகிறாள். தன்னைச் சுற்றிலுமான போராடும் நேர்மையான மனிதர்கள் ஒடுக்கப்படுகிறார்கள்.

சிறையதிகாரி தானே ஒரு அறிக்கை தயார் செய்துகொண்டு தெம்பாவை அதில் கையொப்பமிட வற்புறுத்தி பேனாவை கையில் திணிக்கிறான்.

தன் வாழ்வு, தன் வாழ்வோடு சம்பந்தப்பட்ட மனிதர்களின் பல்வேறு மனிதர்களின் சாவு, துன்பம், நேர்மையான போராட்ட உணர்வு போன்றவற்றை மனத்திரையில் பார்க்கும் தெம்பா சிறையதிகாரியை நோக்கி உறுதியாகச் சொல்கிறான்.

'முடியாது'

தென் ஆபிரிக்க மக்களின் போராட்டப் பாடல் வெறுமையான கறுப்புத் திரையில் எழ படம் முடிகிறது.

தென் ஆபிரிக்கச் சூழலை மையமாக வைத்து தாராளவாத வெள்ளையர்களால் தயாரிக்கப்பட்ட படங்கள் நிறைய வந்திருக்கிறது. The dry white Season, Cry, the Beloved country, Amok, Coming Africa போன்றவை அப் படங்கள். இதில் ரிச்சார்ட் அட்டன்பரோவின் Cry Freedom பரவலாக வீடியோக்களில் கிடைக்கிறது.

இந்தப் படங்களில் இருந்தெல்லாம் வித்தியாசமான படம் மபந்த்சுலா. இனஒதுக்கலை எதிர்த்துப் போராடுபவர்களின் பார்வையிலிருந்து, கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களின் பார்வையிலிருந்து பேசும் படம் மபந்த்சுலா.

உதிரிப் பாட்டாளிகளின் வாழ்நிலை அனுபவம் புரட்சிகர வர்க்கப் பிரக்ஞையை எட்டுவது பற்றிய படம் மபந்த்சுலா. இந்தச் செய்தியே மபந்த்சுலா படத்தை மற்றப் படங்களில் இருந்து வித்தியாசப் படுத்தி நிலைக்கவைக்கிறது.

யமுனா ராஜேந்திரன்

# நவசீனத்தின் மக்கள் தலைவர் மாவோ சேதுங்



1957 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் "மக்களிடையே உள்ள முரண்பாடுகள் சரிவரக் கையாள்வது குறித்து" என்ற தலைப்பில் மாவோ பேருரை ஒன்றை நிகழ்த்தினார். அதில் சோசலிச சமூகத்தில் உற்பத்திக் கருவிகளின் உரிமை என்பது சோசலிசத் தன்மை வாய்ந்ததாக மாற்றியமைக்கப்பட்டபின் அந்த சோசலிச சமூகத்தில் ஏற்படக்கூடிய முரண்பாடுகளை ஆழமாக ஆராய்ந்தார்.

மக்களிடையே உள்ள முரண்பாடுகள் இரு வேறு தன்மை வாய்ந்த, இரு வேறு வகைப்பட்ட முரண்பாடுகளாக அவர் பிரித்தார். ஒன்று பகமை நிறைந்த முரண்பாடு; இது மக்களுக்கும் அவர்களுடைய எதிரிக்குமிடையேயான முரண்பாடாகும். மற்றொன்று பகமையற்ற முரண்பாடாகும்; இது மக்கள் தம்மிடையே உள்ள முரண்பாடு என்று பிரித்துக் காட்டிய மாவோ, சீனத்தின் அரசியல் வாழ்வில் இந்த முரண்பாடுகள் ஒரு பிரதான பிரச்சனை என்றும் அதைச் சரியாக கையாள்வது அவசியம் என்று வெளிப்படையாக சுட்டிக் காட்டினார்.

அரசியல் துறையில் நீண்ட காலத்திற்கு சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் இதர ஜனநாயகக் கட்சிகளும் இருக்க வேண்டிய அவசியம் உள்ளது. ஒரு புதிய சமூகத்தின் தேவைகளைச் சமாளிக்கும் பொருட்டு பரஸ்பர மேற்பார்வை என்ற வழியைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கும். கலைகள் மற்றும் விஞ்ஞானிகளின் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் பொருட்டு ஒரு செழுமை மிக்க சோசலிசக் கலாச்சாரத்தை மலரச் செய்வதன் மூலம் "நூறு பூக்கள் பூக்கட்டும், நூறு கருத்துக்கள் மலரட்டும்" என்ற கொள்கையை கட்சி கடைப்பிடிக்க வேண்டும் என்றும் மாவோ கருதினார்.

1958 இல் கட்சி மற்றும் அரசாங்க வேலையின் கவனமானது தொழில்நுட்பப் பிரச்சனை குறித்தும் சோசலிச நிர்மாணம் குறித்தும் திருத்தப்பட வேண்டும் என்று மாவோ கூறினார். அவ் ஆண்டு பிற்பகுதியில் 'மாபெரும் பாய்ச்சல்' என்ற இயக்கத்தை மாவோ துவக்கினார். இது உற்பத்தியைப் பெருக்குவதற்கு கிராம மக்கள் 'கம்யூன்களில்' அணிதிரட்டப்பட வேண்டும் என்பதாகும். மாவோவின் இந்தத் திட்டம் தோல்வி கண்டதோடு கட்சியையும் நாட்டையும் "இடதுசாரித் தவறுகளுக்கு" இட்டுச் சென்றது. வெகு விரைவிலேயே இந்தத் தவறுகளை உணர்ந்துகொண்ட மாவோ அதைத் திருத்த நடவடிக்கை எடுத்தார்.

இது குறித்து சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான டெங்-ஷியோ- பிங் பின்வருமாறு கூறுகிறார்; 'மாபெரும் பாய்ச்சல் இயக்கமானது தவறானதாக இருந்தது. ஆனால் அது முற்றிலும் மாவோவின் தவறல்ல. அவரைச் சுற்றி இருந்தவர்களும் பொறுப்பாவார்கள். யதார்த்த விதிகளுக்கு நேர் எதிராக அதாவது பொருளாதாரத்தை ஒரே அடியில் உயர்த்துவது என்ற முயற்சியில். நாங்கள் இறங்கினோம். எங்களுடைய அகநிலை விருப்பங்கள் யதார்த்த விதிகளுக்கு எதிராகப் போனதால் இழப்புக்கள் தவிர்க்க இயலாதவையாகப் போயின. இதற்கான முதன்மையான பொறுப்பு தலைவர் மாவோவைச் சார்ந்தது என்றாலும், நாங்கள் அந்தத் தவறை புரிந்து கொள்வதற்கு சில மாதங்களுக்கு முன்னரே மாவோ அதைப் புரிந்து கொண்டு திருத்துவதற்கான வழியையும் முன்வைத்தார்'.

மாவோ 1959 ம் ஆண்டு சீன மக்கள் குடியரசுத் தலைவர் பதவியில் இருந்து விலகினார். தன் கவனம் முழுவதையும் கட்சிப் பணிகளிலேயே செலுத்தினார். அதைத் தொடர்ந்து லியோ- சோ- சி மக்கள் குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1960-ம் ஆண்டுகளின் முற்பகுதியில் உலக கம்யூனிஸ்ட் இயக்கத்திற்குள் எழுந்த திரிபுவாதப் போக்குகளுக்கு எதிரான போராட்டத்தில் மாவோவும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் முன்னின்றன. ஆனால் அவ் ஆண்டுகளின் பிற்பகுதியில் சீனத்தின் உள்நாட்டு நிலமையைக் குறித்தும் வெளிநாட்டு நிலமை குறித்தும் 'கலாச்சாரப் புரட்சி' என்ற இயக்கம் சீனாவில் உருவானது. இதனால் சீனம் ஒரு பெரும் அரசியல் கொந்தளிப்பைக் காணவேண்டிய நிலை ஏற்பட்டது. இதைப் பயன்படுத்திக் கொண்டு சீனப் படையின் தளபதியாக இருந்த லின்-பியோவும், மாவோவின் மூன்றாவது மனைவி சியாங்சிங்கும் அராஜகப் பாதையில் திரும்பிவிடவும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணிப் பங்கை அழிக்கவும் சதி செய்தனர். இவர்களால் சீனாவின் பல தலைவர்கள் கட்சித் தலைமையில் இருந்து விலக்கப்பட்டார்கள். லியோ சோ சி சீன மக்கள் குடியரசின் தலைவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டு சிறை வைக்கப்பட்டார். நால்வர் கும்பலைக் கொண்ட இந்தக் குழு அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்றது.



சீனாவுக்கு நாசம் விளைவித்த இந்தக் கொள்கையானது பத்தாண்டு காலம் நீடித்தது.

ஒரு கட்டத்துக்குப் பிறகு இந்த இயக்கம் தவறான பாதையில் போவதைக் கண்ட மாவோ அதைத் திருத்துவதற்கு பெரும் முயற்சி செய்யவேண்டி ஏற்பட்டது. கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினராக இருந்த அவரின் மனைவியே இதில் சம்மந்தப்பட்டிருந்ததாலும், நோய்வாய்ப்பட்டு சரிவரப் பேச இயலாத நிலையில் இருந்த மாவோ உண்மை நிலையை தெரிந்துகொள்ள முடியாததாலும், கட்சியின் உண்மையான தலைவர்கள் அவரை அவ்வப்போது சந்திக்க முடியாததாலும் இந்தத் தவறைத் திருத்தும் பணி மிகச் சிரமத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டி இருந்தது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சீனச் செஞ்சேனையில் இருந்த உண்மையான கம்யூனிஸ்ட்டுகள் எடுத்த நிலைப்பாட்டாலும் கலாச்சாரப் புரட்சி என்ற எதிர் புரட்சி இயக்கம் தோல்வியடைந்தது.

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

இந்தப் பின்னணியில் 1976ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 9 ம் திகதி மாவோ இயற்கை எய்தினார்.

ஏகாதிபத்தியவாதிகளின் சூழ்ச்சி காரணமாக அபினி மயக்கத்தில் ஆழ்த்தப்பட்டிருந்த சீன மக்களை, யுத்த பிரபுக்களின் பண்ணையடிமைகளாக வாழ்ந்துகொண்டிருந்த கோடானுகோடி சீன மக்களை அவைகளில் இருந்து விடுவித்து, வறுமையையும் பட்டினியையும் ஒழித்து நிலப் பிரபுக்களின் சுரண்டலுக்கு முடிவு கட்டிய மகத்தான மனிதரான மாவோ சேதுங் மறைந்தபின் அவரது உடல் பெய்ஜிங் நகரில் உள்ள டியனான்மென் அரங்கில் வைக்கப்பட்டது.

மாவோ ஒரு சிறந்த மார்க்சிய மேதை; போர்த் தந்திர வல்லுனர்; சிறந்த எழுத்தாளர்; மக்களிடமிருந்து கற்றுக்கொண்டு மக்களுக்கு சேவை செய் என்று வலியுறுத்திய மக்கள் தலைவர். அவர் மிகவும் நேசித்தது உண்மை, எளிமை, சேவை. அவர் மிகவும் வெறுத்தது பொய்மை, பகட்டு, ஆடம்பரம். அவர் ஒரு சிறந்த கவிஞர்.

மூடநம்பிக்கையிலும், அறியாமையிலும், வறுமையிலும் ஆழ்த்தப்பட்டுக் கிடந்த சீன மக்களுக்கு விழிப்பூட்டி, மயக்கத்திலிருந்து மீட்டெடுத்து புதிய சீனாவை உருவாக்கிய சிற்பி. மார்க்சிய லெனினிய தத்துவத்தை கற்று அதை சீனாவின் நிலமைகளுக்கேற்றாற்போல் பிரயோகித்து, அந்த தத்துவத்தை சீனாவின் ஆளும் தத்துவம் என்ற நிலைக்கு உயர்த்தியவர் மாவோ சேதுங்.

*சீனச் சிற்பி மாவோ சேதுங் இன் இருபதாவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி என். ராமகிருஷ்ணன் எழுதிய 'நவீன சிற்பி மாவோ சேதுங்' என்ற நூலிலிருந்து இக் குறிப்பு பிரசுரிக்கப்படுகிறது.*

## கிடைக்கப் பெற்றோம்



### காலச்சுவடு

இதழ் 14 ஜூன் 96
தனி இதழ் 20 இந்திய ரூபா
ஆண்டுச் சந்தா
80 இந்திய ரூபா
வெளிநாட்டுச் சந்தா
300 இந்திய ரூபா

தொடர்பு முகவரி:
காலச்சுவடு
151 கே.பி.சாலை,
நாகர்கோயில் 629001,
தமிழ்நாடு, இந்தியா.

### கனவு



இதழ் 26 ஜூலை 96
சினிமாச் சிறப்பிதழாக
வெளிவந்திருக்கும் இவ்விதழ்
ஈழமுரசில் யமுனாராஜேந்திரன்
எழுதிய குருதிப்புனல், இந்தியன்
கட்டுரைகளை மறுபதிப்புச்
செய்துள்ளது.
தனிப்பிரதி 8 இந்திய ரூபா
தொடர்பு முகவரி:
சுப்ரபாரதி மணியன்
8.707சீ பாண்டியன் நகர்
திருப்பூர் 641602
தமிழ்நாடு, இந்தியா.



### சதங்கை

காலாண்டிதழ்
இதழ் 9
ஜூலை-ஓக்ஸ்ட்-செப்டம்பர்
தனிப்பிரதி 10 இந்திய ரூபா
ஆண்டுச்சந்தா
40 இந்திய ரூபா
தொடர்பு முகவரி:
சதங்கை அலுவலகம்
53..2 பாண்டியன் தெரு
கவிமணி நகர்,
நாகர்கோவில் 629002;
தமிழ்நாடு, இந்தியா.

### கேப்பியார்

சமூக கலை இலக்கிய இதழ்
இதழ் 41ஜூலை ஓகஸ்ட் 96
தனி இதழ் 5 இந்திய ரூபா
ஆண்டுச் சந்தா
30 இந்திய ரூபா
தொடர்பு முகவரி:

ஆசிரியர் கேப்பியார்
பரணியுறத்தலவிளை
களியக்காவிளை - 629 153
குமரிமாவட்டம், தமிழ்நாடு





### கோடாங்கி

ஜனவரி ஜூன் 96
தலித் இலக்கிய காலாண்டிதழ்
தனி இதழ் 25 இந்திய ரூபா
ஆண்டுச் சந்தா
100 இந்திய ரூபா

தொடர்பு முகவரி:
கோடாங்கி
434 கட்டப்பொம்மன் தெரு
பெரம்பூர்
சென்னை 600039

18- 1996.09.12.jpg

# யார் அழுதால் எவருக்கென்ன — அவர்தம் துயரம் வித்து 'காட்' எடுத்தால் போதும்

உதுகளுக்கு ஐயோ எண்டு இரங்கினால் ஆறுமாதப் பாவம் எண்டு சொல்லுறவை. இஞ்சை எங்கடை ஆக்கள் சிலபேரின்ரை எடுப்புச் சாய்ப்புக்களையும் போக்குவரத்தையும் கொஞ்சம் உன்னிப்பாய் பார்த்தால் அப்படித்தான் நினைக்க வேணும் போல கிடக்குது.

ஏதோ சந்தடி சாக்கில பஸ் ஓடினதெண்டு கொழும்புக்கும் ஏரோப்ளேன் ஓடினதெண்டு பேர்லினுக்குமா வந்தாக்கள்தான். நாங்கள் கனபேர் வந்ததுதான் வந்தம், வந்தும் சும்மாவே இருந்தம் ஐயோ... ஆத்தே.. அங்கை வெட்டிறான் கொல்லுறான் சுடுகிறான் எண்டு ஒப்பாரிவைச்சு அழுது குழறி மூக்குச் சிந்தி கையில விசாவும் கிடைச்சு இப்ப காலமும் போட்டுது. வரேக்கை ஆள் ஆள் என்னென்ன சொன்னாங்கள் எண்டதை இப்ப கனபேர் மறந்து போனம். அப்ப என்ன பாடுபட்டெண்டாலும் இஞ்சை இருந்திடவேணும் - மனுசி பிள்ளை - குடும்பம் - சொந்த பந்தங்களை கூப்பிட வேணும் எண்டு வலு அக்கறையா இருந்த படியால், அங்கை ஆமிக்காரன்ரை அட்டூழியங்கள் உக்கிரமடையேக்குள்ள இஞ்சை நாங்கள் நிண்டு ஆர்ப்பாட்டம், ஊர்வலம், பேரணி எண்டு ஆளும் பெருமாச் சேர்ந்துநிண்டம். இப்பதான் அநேகமா குடும்பங்களே இஞ்சை வந்துசேர்ந்திட்டுது. இனியும் சும்மா வேலை வெட்டியை விட்டிட்டு ஊர்வலங்களுக்குப போறதெண்டுறது வெறும் விசர்வேலை என்டதுதான் இவையின்ரை கருத்தாய் இருக்குது போல கிடக்குது.

இப்ப அண்மைக் காலங்களிலை இஞ்சை நடந்த ஊர்வலங்களைப் பார்க்கேக்குள்ள, இஞ்சை உள்ள சனமெல்லாம் அங்கை உள்ள சனத்தை மறந்து போட்டுதுகளோ எண்டுதான் நினைக்கவைக்குது.

அதிலையும் மற்ற வெளிநாடுகளை விட பிரான்சில இருக்கிற சனம்தான் எப்பவும் வலு பிசிபோல இருக்குது. இப்ப போன கிழமைகூட ஒரு ஒன்றுகூடல் நடந்தது. வந்தசனம் எப்படியும் ஒரு ஆயிரத்துக்குள்ளதான் நிண்டது. ஆனால் மொத்தமா கிட்டத்தட்ட முப்பது, முப்பத்தைந்தாயிரம் தமிழ் பெருங்குடி மக்கள் இருக்கிறதாத் தான் சொல்லுகினம். அப்படியெண்டால் மிச்சம் 30 ஆயிரம் பேருக்கும் என்ன நடந்ததெண்டு தெரியேல்லை.

மற்ற சில நாடுகள் போல இஞ்சையும் 3 மாதம் ஆறுமாதம் விசாக் குடுத்து இந்தா பார் பிடிச்சு அனுப்புறன் அந்தா பார் புடிச்சு அனுப்புறான் எண்டு பிரெஞ்சு கவுண்மேந்தும் ஒரு புலூடா எண்டாலும் விட்டால் தான் ஐயையோ புடிச்செல்லே அனுப்பப் போறாங்கள். எண்டு வெருண்டு குழறியடிச்சுக் கொண்டு வருவினமாக்கும். பின்னையென்ன மற்ற நாடுகளிலையும் எங்கட சனங்கள் தானே இருக்குதுகள். ஊரிலை பாதிக்கப்படுகிற சனத்துக்காக எத்தினை ஆயிரம் சனம் நெருக்கியடிச்சுக் கொண்டு குரல் குடுக்க வருகுதுகள். இஞ்சை ஊர்வலத்துக்கு மட்டும் போகாமல் விடுகிறதுக்கு அப்பிடி என்ன இடிவிழுந்த காரண காரியம் கனவில இருப்பம்.

பொழுது போக்குக்குகள் இல்லையெண்டால் சிலபேருக்கு காலை, மாலை, மதியம் எண்டு மூண்டுநேரமும் வருத்தத்துக்கு பத்தியம் சாப்பிட்ட மாதிரி வீடியோ பார்க்கிறதை பிழையெண்டு நான சொல்லேலலை. அவைக்கு நேரமிருக்குது. லைவ்வை என்ஜோய் பண்ணுகினம். பாரிசில கிட்டடியில ஒரு ஆர்ப்பாட்ட ஒன்றுகூடல் ஒண்டு நடந்தது அநேகமாக எல்லாருக்கும் தெரியும்.

## ஆருக்குச் சொல்லி அழ?

இருக்குதெண்டு எனக்கெண்டால் ஒரு இழவும் விளங்கேல்லை.

அங்கை வன்னியெண்டாலென்ன, யாழ்ப்பாணமெண்டால் என்ன தமிழன் எண்டால் சோறு இல்லை; தண்ணி இல்லை; மருந்தில்லை; வீடுவாசலில்லை; எண்ணை தண்ணியில்லை. இல்லையெண்டத விட குடுக்கப்படாது எண்டு சிறீலங்கா கவுண்மேந்து மறிச்சு வைசசிருக்குது.

இஞ்சை எங்கடை சனம் வயது வேறுபாடு, ஆண் பெண் வேறுபாடு இல்லாமல் பிரெஞ்சு மொழி படிக்கப் போற பள்ளிக்கூட மொண்டிருக்குது. ஒண்டில்லை கனக்க இருக்குது. ஆனால் நாங்கள் படிக்குறதுக்கு எங்களுக்கு காசுதாற பள்ளிக்கூடம் ஒண்டிரண்டுதான் இருக்குது. அவங்கள் சம்பளம் தந்தாவது எங்களைப் படிப்பிச்சுப் போடுவம் எண்டு

**புறோக்கின் பசுமதி அரிசியையும், முருங்கைக்காயையும் வாங்கிக் கொண்டு போகேக்குள்ள 'காதல் தேசம்' வீடியோ கசட்டையும் வாங்கிக் கொண்டுபோக மறக்கிறேல்லை. சொந்தத் தேசம் சுடுகாடாய் போனாலென்ன... கொண்ட முதலில நட்டமே வரப் போகுது?**

நாண்டிக்குளத்துக்கு போற சனத்துக்கு ஆமிக்காரன் மாட்டுச்சாணி அள்ளி தீத்தி அனுப்புறான். நோய்நொடி வந்தால் மருந்தில்லாமல் சனம் சாகுது. பாம்பு பூச்சி கடிச்சால் மருந்தில்லை. விசர் நாய் கடிச்சால் மருந்தில்லை. இதுக்குள்ள ஆமிக்காரரும் தங்கடை பங்குக்கு தமிழ சனததை கடிச்சு வைக்கிறாங்கள். அங்கை என்ன நடக்குதெண்டு தெரியாட்டிலும் பறவாயில்லை. எல்லாம் உடனுக்குடனை எல்லாருக்கும் தெரியுது. ஆனால் இஞ்சை இருக்கிற நாங்கள், புறோக்கின் பசுமதி அரிசியையும, முருங்கைக்காயையும் வாங்கிக் கொண்டு போகேக்குள்ள 'காதல் தேசம்' வீடியோ கசட்டையும் வாங்கிக் கொண்டுபோக மறக்கிறேல்லை. சொந்தத் தேசம் சுடுகாடாய் போனாலென்ன... கொண்ட முதலில நட்டமே வரப் போகுது? நாங்கள் காதல் தேசத்துக் முயற்சிக்கிறாங்கள். நாங்கள் எங்கை படிப்பைப் பற்றி யோசிக்கிறது. பள்ளிக்குப்போனால் சம்பள மெண்டதுக்காக அங்கைபோய் வாங்கை தேச்சுப்போட்டு வாறதுதான் அநேகம். பள்ளிக்குப் போகாட்டில் காசு தரமாட்டான் - போனால் டயனாவும் சாள்சும் டிவோஸ் எடுத்ததைப் பற்றி - சிநேவிக்கு அம்மாக்காரி மாப்பிளை தேடுறதைப் பற்றி - பிரபு தேவா கலியாணம் கட்டினது பொய்யோ மெய்யோ, அடுத்தமுறை கலியாண வீட்டுக்கு சல்வார்கமீஸோ சாரியோ உடுக்கலாம் எண்டெல்லாம் அதி முக்கியமான கவாரிசயமான பட்டி மன்றங்கள் எல்லாம் நடத்தலாம். பொழுதும் வலு பம்பலாய் போகும். போகாட்டில் காசும் நட்டம் பொது அறிவுக்கும் நட்டம். அதாலை என்னதான் உயிர்போற அலுவல் இருந்தாலும் தமிழ் சனம் படிக்கிற பள்ளியள் (சம்பளம்தாற) எப்படியும் கலகலவெண்டிருக்கும்.

அங்கை லட்சக்கணக்கான சனம் அகதிகளாய் போன பிறகும் சந்திரிகாவின் கவுண்மேந்து மனிதாபிமான ரீதியில அடிப்படை வசதிகளைக்கூட குடுக்க விடாமல் தடை செய்யிறதோடை காடு கரம்பைகளுக்கை ஒதுங்கின சனத்தையும் குண்டு போட்டு அழிச்சுக் கொண்டிருக்கிறதைக் கண்டிச்சு எல்லா நாட்டிலையும் நடந்த மாதிரி பிரெஞ்சு நாட்டிலையும் ஒரு ஆர்ப்பாட்ட ஒன்று கூடல் நடந்தது. பிரெஞ்சுக்காரன் பள்ளிக்கூடம் நடத்தினாலும் எங்கடை சனத்தின்ரை பிரச்சினையை அறிஞ்சு அண்டைக்கு பள்ளிக்கூடத்தையும் அரை நேரத்தோட மூடியிருக்கினம்.

அவங்களே பெரிய மனது பண்ணி நீங்கள் போய் ஊர்வலத்தில கலந்து கொள்ளுங்கோ எண்டு சொல்லி விட்டாப் பிறகும், ஒரு குறிப்பிட்ட கொஞ்சப்பேர்தான் அங்கை வந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. மற்றவை? அவைக்கென்ன அண்டைக்கு லீவுதான். இவங்கடை ஊர்வலத்தாலை பள்ளிக்கூடத்தால தாற அரைநாள் சம்பளம் போட்டுதெண்டு மூக்கால அழுதவையும், போறதுதான் போறன் நேரத்தோட போய் ஒரு படக்-கொப்பி எடுப்பம் எண்டு வீடியோக் கடைக்கு வந்து ஏமாந்ததோட திரும்பினவையும் (ஊர்வலத்துக்கு என தமிழ் கடைகளும் அன்டைக்கு. அரைநேரம் பூட்டு) தான் கனபேர்.

விதை நெல்லு மூட்டையைத் திண்டு எலி கொழுத்தமாதிரி, ஊரிலை சிறீலங்கா அரசாங்கம் செய்யிற அநியாயத்தையும், அக்கிரமத்தையும் சொல்லி ஒரு அகதி மட்டையை எடுத்த நாங்கள்... இப்ப... எல்லாத்தையும் மறந்து போனமாதிரி ஒரு நடிப்புக்காட்டி, எங்களுக்கும் அதுக்கும் சம்மந்தம் இல்லாத மாதிரி ஒதுங்கிப்போய் பின் கதவால எட்டிப்போய் 'நஷனாலிடி' கேட்டு வளர்த்த நாய் மூஞ்சையைப் பார்த்த மாதிரி இஞ்சை பார்த்துக் கொண்டு திரியிறம்.

எது எப்படியிருந்தாலும் எங்கடை சனம் எங்கையும் எப்படியும் பிழைச்சுக் கொள்ளும். ஓம்! இப்ப இஞ்சை சந்தோஷமா வாழுறமெண்டால், அது அங்கையுள்ள சனங்கள் படுகிற வேதனையையும், துன்பத்தையும், துயரத்தையும் வித்து வாங்கினதுதான். விற்பனையெண்டால் சும்மா விற்பனையில்லை, ஏல விற்பனை. இனி ஆர் அழுதால் என்ன.. ஆர் சிரிச்சால் என்ன அவரவருக்கு அவர்கள் பிரச்சினை பெரிசெல்லே! அது சரி... உந்த சம்பளம் தந்து பாஷை படிப்பிக்கிற பள்ளிக்கூடம் எங்கை கிடக்குதெண்டு நாலும் கனநாளா கேட்டுக் கொண்டு நாயா பேயா அலையிறன் ஒருத்தரும் சொல்லீனமில்லை. ஏனுங்கோ.... மெய்யோ...! உங்களுக்கு தெரிஞ்சால் அந்த அட்ரஸை எனக்கும் ஒருக்கால் தருவியளே! சில்... வூ... பிளே...!

**ஆசைத்தம்பி**


# ORIENT TEXTILIEN & SCHMUCK

*KOENIGSWALL 16 (AM FBF), 44137 DORTMUND - TEL: 0231-162377 - FAX: 49-231-147836*

* ஜேர்மனியில் தங்க நகைகளின் தரத்திற்கும், தேர்விற்கும் தனிச் சிறப்பு பெற்ற ஸ்தாபனம் சிங்கப்பூர் விலையில் S D 158,
* ஆடைகளின் நிரந்தர மலிவு விலைகள்: பனாறிஸ் சாறி 79; மைசூர் சில்க் 85; பட்டபிளை சாறி 25; குப்தா சாறி DM25; பஞ்சாபி DM 26; பட்டுவேட்டி DM 35, * கனம், தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள் , * புத்தம் புதிய டிசைன்களில் அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய ஆபரண செட் DM 119, * உங்கள் பழைய பவுணிற்கு குறைந்த கூலியில் உடனடியாகவே புதிய நகைகள் மாற்றிப் பெறுவதற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்!

தரம்! உத்தரவாதம்!! அதிக தேர்வு!!! மலிவு!!!!

தரமான பொருட்களை தரமற்ற பொருட்களுடன் ஒப்பிடாதீர்கள்

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.
**RCS PARIS**
B 399 673 110 (95B01491)
**Directeur de la publication:**
P. Velupillai
**Redacteur:**
K. Kesenthiran
**Impression:**
IMPRIMERIE MEAULLE
**நிர்வாகி:**
ப. வேலுப்பிள்ளை
**ஆசிரியர்:**
க. கஜேந்திரன்

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பாரிஸ்:
TeL: 40 37 63 63
Fax: 40 37 64 64
ஜேர்மனி:
NIRMALARAJAN
Tel: 041333896
டென்மார்க்:
S.E. MAHENDRAN
SPURVE VEJ-20,
7200 GRINSTED.
Tel + Fax: 75310546
சுவிஸ்:
மக்கள் கடை
Tel: 01-271 7374
நேசன் - 077 696592
லண்டன்:
ஜெயந்தன்:
Tel: 0956908145
இத்தாலி:
S. திம்லைவாசன்
VIA DANTE - 296, PALARMO
Tel: 03473358290
நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527
நெதர்லாந்து:
ராஜவர்த்தனன்
Tel: 0223 680462

விற்பனைக்கு
PEAUGOT
405 GRD
டீசல் (ஆண்டு 90)
விலை 22000 FF
தொடர்புகளுக்கு:
48 48 39 64

## குடாநாட்டில் பரீட்சை எழுதிய மாணவர்கள் மீது படையினர் தாக்குதல்

கடந்தவாரம் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் க.பொ.த உயர்தரப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்த போது, அதைக் குழப்பும் விதத்தில் சிறீலங்கா பாதுகாப்புப் படையினர் பல்வேறு தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

காங்கேசன்துறை கடற்பரப்பில் நிலைகொண்டிருந்த கடற்படையினர் பண்ணாகம், வட்டுக்கோட்டை, சித்தங்கேணி பகுதிகளை நோக்கி தொடர்சியான எறிகணைத் தாக்குதல்களை நடத்தினர். மண்டைதீவுக் கடலில் நிலை கொண்டிருந்த கடற்படையினர் யாழ்ப்பாண நகரத்தின் மீது எறிகணைத் தாக்குதல்களை நடத்தினர்.

பரீட்சை நடந்து கொண்டிருந்த நேரத்தில் இந்தத் தாக்குதல் நடைபெற்றதால் மாணவ, மாணவிகள் அச்சசத்தின் காரணமாக ஒழுங்காகப் பரீட்சை எழுதமுடியாமல் போனதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வட்டுக்கோட்டை, சித்தங்கேணி, யாழ்ப்பாண நகரப் பகுதிகளில் பரீட்சை நடைபெற்ற மண்டபங்களுக்கு மிக அருகில் கடற்படையினரின் எறிகணைகள் விழுந்து வெடித்துள்ளன. இதனால் பரீட்சார்த்திகள் பரீட்சை வினாத் தாள்களை அப்படியே விட்டுவிட்டு பரீட்சை மண்டபத்தைவிட்டு ஓடிய சம்பவங்களும் நடைபெற்றதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### ரத்வத்தையின்...

முறைப்பாடு கொடுத்துவிட்டார்.

இந்நிலையில் கடந்த இருவாரமாக சிறீமாவுக்கு அவருக்குமிடையில் கடிதப் போர் ஒன்று நடந்து வந்தது. சுதந்திரக் கட்சியில் இன்னமும் செல்வாக்குப் பெற்றவராக இருக்கும் சிறீமாவோ அம்மையார் - தனது மகனை இழிவுபடுத்தி தனது குடும்பத்திற்கு மாசுகற்பித்த ரத்வத்தையின் கர்வத்தை அடக்குவதற்காக அவரைக் கட்சியை விட்டு நீக்க முயன்று வருகின்றார் என்றும் அவ்வாறு ரத்வத்தை சுதந்திரக் கட்சியிலிருந்து நீக்கப்படும் பட்சத்தில், தற்போதுள்ள அரசியல் சட்டப்படி அவரது பாராளுமன்றப் பதவி பறிபோய் விடலாம் என்றும் அதனால் அவர் மந்திரிப் பதவியையும் இழக்க வேண்டி வரும் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### பொதுஜன...

னோக்கி நகர்த்திவிட்ட சிறிலங்காவின் பொருளாதாரத்தை பொதுஜன முன்னணி அரசு இரண்டு ஆண்டுகளில் சிதைத்துவிட்டது.

யாழ்ப்பாணத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதாகக் கூறி புலிகளை யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேற்றி கொழும்புக்கும், மட்டக்களப்புக்கும் பரவ வழி செய்துள்ளது. இதனால் புலிகள் மத்தியவங்கி, துறைமுகம் போன்றவற்றின் மீது தாக்குதல்களை மேற்கொண்டு பலத்த பொருளாதார இழப்புக்களை ஏற்படுத்தியுள்ளனர். இது ஒரு பக்கமாக இருக்க, அரசு தொடர்ந்தும் போருக்கு பெருந்தொகைப் பணத்தை செலவு செய்து வருவதால் பொருளாதாரத்தால் பலவீனமடைந்துவரும் அரசு கவிழும் அபாயம் தோன்றியுள்ளதாக அவ் ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

## திருமலை — யாழ் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

முல்லைத்தீவு முகாம் தாக்குதலுக்குப் பின் நிறுத்திவைக்கப்பட்டிருந்த திருமலை - யாழ் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.

இந்த கப்பல் சேவை ஆரம்பித்ததைத் தொடர்ந்து காயமடைந்த நோயாளிகளுக்கான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் கொழும்பு கொண்டு செல்வதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

இக் கப்பற் சேவை ஆரம்பிக்கப்பட்டதையடுத்து அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தெரிவிக்கையில், திருமலை - யாழ் போக்குவரத்துக்கென தாரகி என்ற கப்பல் வாடகைக்கு பெறப்பட்டுள்ளது. மேக்ஸ் சுஜிந்த என்ற சரக்குக்கப்பலொன்றும் ஆட்களை ஏற்றிச்செல்ல பயன்படுத்தப்படுகிறது.

இதைவிட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஜாவாகோல்ட் என்ற கப்பல் ஒன்றையும் வாடகைக்கு அமர்த்தி பயன்படுத்தவுள்ளது எனவும் தெரியவருகிறது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### புலிகளின்....

கள் வழங்கியுள்ளன என கொழும்புப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### தீர்வுத்திட்ட...

அமுல் படுத்தப்பட வேண்டும் என்றால், ரணிலுடன் பேசி அவரை அதற்கு ஆதரவு தெரிவிக்க சம்மதிக்க வைக்க வேண்டும் என கூறியதாகச் சொல்லப்படுகிறது.

சந்திரிகாவின் கோரிக்கையை ஏற்கமறுத்த அவரைப் பகைத்துக் கொள்ள விரும்பாத தமிழ்க் குழுக்கள் அரைகுறை மனத்தோடு ரணிலை அணுக முற்பட்டபோது அவர் அவர்களை சந்திக்காமலே நீங்கள் தரகுவேலை பார்க்கவேண்டாம் என்று கறாராகக் கூறிவிட்டதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உங்கள் திருமண விழாக்களுக்கும், பிறந்தநாள் கொண்டாட்டங்களுக்கும் அலங்கரிக்கப்பட்ட கேக் [நீங்கள் விரும்பிய வடிவில்] வகைகளை, Riche கேக்குகளை அழகாகவும், மலிவாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியது;
42 08 86 26
குறிப்பு: இதன் மூலம் கிடைக்கும் பணம் முழுவதும், தமிழீழத்தில் பாதிக்கப்பட்ட பெண்களின் புனர்வாழ்வு இல்லமான உதயதாரகைக்கு, தமிழ் பெண்கள் அமைப்பு பிரெஞ்சுக் கிளையினரால் அனுப்பிவைக்கப்படுகின்றது.

பாரிஸ் 18-ல் கடை வாடகைக்கு
Chateau Rouge அல்லது Marcadet Poissonniers ற்கு அண்மையில் 30, Rue de la Ghouat, Paris 18-இல் றெஸ்ரோரன்ற் தவிர்ந்த நீங்கள் விரும்பிய வியாபார ஸ்தலம் அமைக்கக்கூடிய 25M² இடவசதி கொண்ட கடை உடன் வாடகைக்கு உண்டு வாடகை 2750 F H.T
Bail 3, 6, 9 வருடங்களுக்கு
சகல தொடர்புகளுக்கும் சிவா
(மாலை 7 மணி முதல் இரவு 10 மணிவரை)
Tel: 46 71 66 91 / Mobil Tel: 09 91 12 66.

## பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் வேந்தன்

தமிழீழம் வசாவிளானைச் சேர்ந்த கதிரமலை – சுதா, தம்பதிகளின் செல்வப் புதல்வன் மாஸ்டர் வேந்தன் தனது 3 வது பிறந்தநாளை 15.09.96 ஞாயிற்றுக்கிழமை, பிரான்ஸ் – Clichy sous Bois-ல் உள்ள தனதில்லத்தில் அன்பு அப்பா, அம்மா, அன்டிப் பெரியண்ணா சுதர்ஸன், அன்பு அக்கா சுபாஷினி, அன்பு ஆசையண்ணா கஜேந்திரன் ஆகியோருடன் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார்.

இவரை தமிழீழத்திலுள்ள அப்பப்பா, அப்பம்மா, ஐயா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா குடும்பத்தார், சித்தப்பாமார்கள் குடும்பத்தினர், தயா அன்ரா சித்தா குடும்பத்தார், பிரான்சிலுள்ள அன்புப் பெரியம்மா, சந்துருமாமி, அன்பு அண்ணா கபிலர், லண்டனிலுள்ள அன்பு சின்னமாமா ராஜேந்திரம் மாமி, சுவிஸிலுள்ள அன்புச் சித்தப்பா சுஜன், அண்ணா, மச்சான் மற்றும் சுவிஸ் அண்ணாமார்கள், அன்ரா அக்காமார்கள், குட்டித்தம்பி சேந்தன், நண்பர்கள் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருளால் சகல செல்வங்களும் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டுகாலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

K.Kathiramalai
3, All .P.et.M. Curie, 93390 Clichy Sous Bois
T.P: 43 88 96 22.

லாச் சப்பலில் குறைந்த செலவில் நிறைந்த பிரயாண சேவை

Errances Travels
Fax: 42 09 53 39 - Li: 075 95 01 37
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°:-La Chapelle ou Louis Blanc
தொடர்புகளுக்கு: நாதன் (தமிழில்)

Tél: 42 09 70 00

à partire de

| | | | |
|---|---|---|---|
| Bombay | 3,900 Frs. | Londres | 650 Frs. |
| Delhi | 3,900 Frs. | New york | 2,400 Frs. |
| Bangkok | 3,350 Frs. | Montreal | 2,400 Frs. |
| Colombo | 4,150 Frs. | Oslo | 2,010 Frs. |
| Singapour | 3,350 Frs. | Toronto | 2,700 Frs. |
| Kualalumpur | 3,400 Frs. | Nepal | 4,820 Frs. |
| Madras | 4,750 Frs. | | |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது




# செச்செனியாவில் நிரந்தர அமைதி மக்கள் தெருவெங்கும் ஆனந்தக் கூத்து!

செச்செனியப் போருக்கு தீர்வு காணப்பட்டு விட்டது. அல்லது தற்போதைக்காவது அமைதி திரும்பி விட்டது என்பது உறுதியாகிய கணத்தில் இருந்து செச்செனிய மக்கள் ஆனந்தக் கூத்தாடுகின்றனர். சர்ச்சைக்குரிய ரஷ்ய பாதுகாப்பு ஆலோசகர் ஜெனரல் லெபெட் தனது அரசியல் பாதையில் ஒரு மகத்தான வெற்றியை ஈட்டியுள்ளார்.

செச்செனியாவில் அமைதி தொடர்பான அவரது உடன்படிக்கைக்கு பிரதமர் செர்னோ



மிர்டின், ஜனாதிபதி பொறிஸ் ஜெல்சின் உட்பட எல்லாத் தரப்பிலுமே மகத்தான ஆதரவு கிடைத்துள்ளது. சமாதான உடன்படிக்கையின் படி ரஷ்யத் துருப்புக்கள் அங்கிருந்து வெளியேற ஆரம்பித்து விட்டன. துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் நின்று விட்டன.

செச்செனியாவின் அரசியல் அந்தஸ்து தொடர்பாக அதாவது செச்செனிய சுதந்திரம் தொடர்பாக சர்வசன வாக்கெடுப்பு ஒன்று இன்னும் ஐந்தாண்டுகளில் நடைபெறுவது உறுதியாகி வருகின்றது.

செச்செனியாவில் போரை எதிர்த்தமைக்காக பொறிஸ் ஜெல்சினால் பதவி நீக்கப்பட்டவர் ஜெனரல் லெபெட். இவ்வருட ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து ஜெல்சினுக்கும், ஜெனரல் லெபெட்டுக்கும் மீண்டும் உறவுகள் மலர்ந்தன.

இம்மாத இறுதியில் ஆபத்தான இதய சத்திரசிகிச்சைக்குள்ளாக இருக்கும் பொறிஸ் ஜெல்சினின் இடம் தற்போதைக்கு பிரதமர் செர்னோமிர்டினிடமே வழங்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க சதி வலையை உணரும் "தியனன்மென்" போராட்ட தலைவர்கள்

1989-ம் ஆண்டு தியனன்மென் சதுக்கத்தில் ஜனநாயகக் கிளர்ச்சிப் போராட்டத்தை நடாத்திய மாணவர் தலைவர்கள் தமது போராட்ட வழிமுறைகளில் பல ஊடுருவல்கள் இருந்ததை உணர ஆரம்பித்துள்ளனர்.



இவ் வகையில் அப் போராட்டத்தை முன் நின்று நடாத்திய மாணவர் தலைவர்களான Song Qiang மற்றும் Zhang Xiaobo ஆகிய இரு தலைவர்கள் "The china That Can Say No" என்ற தலைப்பில் ஒரு நாவலை எழுதி வெளியிட்டுள்ளார்கள். அந் நாவலில் அமெரிக்காவுக்கும், பிரித்தானியாவுக்கும் எதிரான வாசகங்கள் தாராளமாகக் காணப்படுகின்றன எனவும் மேலும் இவை சீனாவில் மனித உரிமை, சீனாவின் சர்வதேச வர்த்தக உறவுகள் தொடர்பாக கொண்டுள்ள கண்ணோட்டம் சதி நோக்கம் கொண்டவை என்பதை சுட்டிக் காட்டுவதுடன் சீன மக்கள் தமக்கென ஒரு அடையாளத்தை கடைப்பிடிக்கப்பட வேண்டியது அவசியம் என்பதும் தெளிவாக்கப்பட்டுள்ளது.

மேலும் தாய்வான் விடயம் தொடர்பாக அந் நாவலில் குறிப்பிட்ட எழுத்தாளர்கள் தாய்வானின் தனிநாட்டுக் கோரிக்கைக்குப் பின்னாலிருக்கும் அமெரிக்க உளவு நிறுவனமான சீ.ஐ.ஏ தாய்வானுக்கும் சீனாவுக்கும் இராணுவ மோதலை ஏற்படுத்துவதன் மூலம் சீனாவின் முகத்தில் கரி பூச திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

மேலும் ஜப்பானின் பிரபல இலத்திரனியல் துறை நிறுவனமான SONY கம்பனியின் முன்னாள் தலைவர் Akio Morita எழுதிய The Japan that Can say no என்ற புத்தகமும் தற்போது வெளிவந்துள்ளது சீன இளைஞர்களின் வெளியீடும் ஆசியாவில் உருவாகி வரும் மேற்குலகத்திற்கெதிரான "அடிப்படை சிந்தனை மாற்றம்" என விமர்சிக்கப்படுகின்றது.

# ஈராக்கில் சீ.ஐ.ஏ அதிகாரிகள் கொலை பலர் தப்பி ஓட்டம்

ஈராக் மீது அமெரிக்கா கடந்தவாரம் நடாத்திய றொக்கட் தாக்குதல்களுக்குப் பின்னணியில் சதாமைக் கவிழ்க்க எடுக்கப்பட்ட முயற்சியில் பல சீ.ஐ.ஏ அதிகாரிகள் ஈராக்கிய படைகளால் வட ஈராக்கில் கொல்லப்பட்ட சம்பவமும் உள்ளதாக வோஷிங்டன் போஸ்ட் பத்திரிகை 08.09.96 ஞாயிறன்று செய்தி வெளியிட்டுள்ளது. அமெரிக்காவின் செயல் சர்வதேசமட்டத்தில் கணிசமான எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளது. ஈராக்கின் தென்பகுதியில் உள்ள 32 வது சமாந்தரக் கோடு வரையான சர்வதேச கண்காணிப்பு எல்லையை 33 ஆவது சமாந்தரக் கோடு வரைவிஸ்தரிப்பதற்கான அமெரிக்காவின் தீர்மானத்தை பிரான்ஸ் பகிரங்கமாக நிராகரித்துள்ளது. ஈராக்கின் தலைநகர் பாக்தாத்துக்கு தெற்கே 112 கிமீ வரை சர்வதேச கண்காணிப்புப் பிரதேசத்தை விஸ்தரிக்கும் அமெரிக்காவின் தீர்மானம் அந் நாட்டின் இறைமையை மீறும் செயல் என பிரான்ஸ் கண்டித்துள்ளது. மேலும் ஈராக் தொடர்பான அமெரிக்காவின் கொள்கைகளை எதிர்க்கும் ஐரோப்பிய நாடுகள் மாற்றுக் கொள்கை ஒன்றை முன்வைக்கத் தயாரா என பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் கடந்த 07.09.96 சனிக்கிழமை சவால் விடுத்துள்ளார்.

# பெல்ஜியத்தில் முன்னாள் மந்திரி கைது குழந்தைகள் கடத்தல் விசாரணையில் திருப்பம்

குழந்தைகளைக் கடத்தி பாலியல் நோக்கங்களுக்காக வியாபாரம் நடத்தப்பட்டது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வரும் பொலிசார் பெல்ஜிய அரசின் முன்னாள் மந்திரியான Alain Vanderbiest ஐ கடந்த 06.09.96 வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளனர். இவருடன் வேறு மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளவர்கள் வழங்கிய தகவல்களின்படியே மேற்படி கைது இடம் பெற்றுள்ளது. மேலும் 1991-ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ம் திகதி இடம்பெற்ற சோசலிசக் கட்சி உதவிப் பிரதமர் Andre Cools இன் கொலைக்குப் பின்னணியிலும் இக் கும்பலே இருந்ததாக பொலிசார் சந்தேகிப்பதோடு இக் கொலைக்குப் பாவிக்கப்பட்ட சிவப்பு நிற மோட்டார் சைக்கிளையும் மீட்டுள்ளனர்.

"நான் பலரைக் கைதுசெய்ய உத்தரவிடவுள்ளேன், பல திடுக்கிடும் விடயங்கள் வெளியாக உள்ளன, உங்களுக்கு எழுதுவதற்கு நிறைய செய்திகள் கிடைக்கப் போகின்றன" என பத்திரிகையாளர் ஒருவருக்குத் தெரிவித்த சில நாட்களில் மேற்படி பிரதமர் கொலை செய்யப்பட்டிருந்தார். அவர் குறிப்பிட்ட விவகாரங்கள் பின்னர் வெளியாகமலே போயிருந்தன.

# பாலஸ்தீனம் உருவாக விடமாட்டேன் இஸ்ரேலியப் பிரதமர் கர்ச்சனை!

கடந்த 04.09.96 புதன்கிழமை பாலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தைச் சந்தித்த இஸ்ரேலியப் பிரதமர் இஸ்ரேல் பாலஸ்தீன சமாதான ஒப்பந்தம் பற்றிய பேசசுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது பற்றிய ஊகங்களை உருவாக்கியிருந்தார்.

ஆனால், கடந்த 05.09.96 வியாழக்கிழமை லீக்கூட் கட்சிப் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றிய பிரதமர் நெட்டன்யாகு "நீங்கள் கனவு காணலாம்" "காலையில் நீங்கள் துடித்தெழுந்து பார்க்கலாம் பாலஸ்தீன அரசு இருக்காது, இன்னும் இன்னும் பல தடவைகள் நீங்கள் கனவு காணலாம் பாலஸ்தீன அரசு இருக்காது" "பாலஸ்தீனம் ஒருபோதும் இருக்கவும் மாட்டாது" இவ்வாறு அவர் தெரிவித்தபோது அவரது வலதுசாரி லீக்கூட் கட்சியினர் ஆரவாரித்து கரகோசம் செய்தபோது, அதற்கு முன்தினம் யசீர் அரபாத்தைச் நெட்டன்யாகு சந்தித்த போது உருவான சமாதானம் மீது பற்றுக் கொண்டவர்கள் மௌனமாய் பார்த்திருந்தனர்.

இது ஒரு புறமிருக்க இதே தினம் பாலஸ்தீனத தலைவர் கத்தோலிக்க மத தலைமையக நாடான வத்திக்கானில் வத்திக்கான் பிரதிநிதிகளைச் சந்தித்தார். வத்திக்கானில் அவர் பிரார்த்தனை நடாத்தினரா என்பது தெரியவரவில்லை.

# பிரான்சில் தேர்தல் முறையில் மாற்றம் சிறிய கட்சிகளுக்கு பிரதிநிதித்துவம் ?

பிரான்சில் வளர்ந்து வரும் வெளிநாட்டவர்களுக்கு எதிரான ஜோன் மரி லுப்பெனின் இனவாதக் கட்சி உட்பட சிறிய கட்சிகளிற்கும் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் கிடைக்கும் வகையில் பிரெஞ்சுப் பாராளுமன்ற தேர்தல் முறையில் மாற்றம் செய்வது தொடர்பான சட்டத் திருத்தம் பற்றி ஆராயப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை அமுல்படுத்துவதே இந்த திட்டத்தின் பின்னணி என் மேலும் தெரிய வருகின்றது. இத் திட்டம் அமுலுக்கு வந்தால் 15 வீதத்துக்கும் சற்று அதிகமான தேசிய ஆதரவைப் பெற்ற, தற்போது எந்த ஆசனமும் அற்று இருக்கும் தேசிய வாதக் கட்சி பாராளுமன்றத்தில் இடம் பிடிக்க வாய்ப்பு ஏற்படும் என அஞ்சப்படுகின்றது. சிறிய கட்சியான சம உடமைக் கட்சியும் இம் மாற்றத்தால் பலன் பெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஈரான் - ஜேர்மனி உறவு துண்டிக்கப்பட வேண்டும்

ஈரானிய அரசு, எதிர்க் கட்சித் தலைவர்களை கொல்லத் திட்டமிட்டது உண்மையானால் இராஜ தந்திர உறவுகள் துண்டிக்கப்பட வேண்டும் என ஜேர்மனிய எதிர்க் கட்சிகள் கோரிக்கை விட்டுள்ளன. ஈரானின் முன்னாள் ஜனாதிபதி பேர்லின் நீதிமன்றத்தில் சாட்சியமளித்ததைத் தொடர்ந்தே மேற்படி சர்ச்சை எழுந்துள்ளது.

20- 1996.09.12.jpg

# ஜேர்மன் அரசின் புதிய பொருளாதாரக் கொள்கை தொழிற்சங்கங்கள் பலத்த எதிர்ப்பு

ஜேர்மன் அரசு சமர்ப்பித்துள்ள புதிய பொருளாதாரக் கொள்கை தொடர்பாக தொழிற்சங்க மட்டத்தில் பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இதன் ஒரு கட்டமாக கடந்த 07.09.96 சனிக்கிழமை ஜேர்மனியெங்கும் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடைபெற்றுள்ளன.

ஜேர்மன் பொருளாதார அமைச்சர் Gunter Rexrodt நிதி அமைச்சர் Theo Waigel இருவரும் விடாப்பிடிக் கொள்கையை கடைப்பிடிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது முன் வைக்கப்பட்டுள்ள புதிய கொள்கைப்படி வேலை செய்பவர் ஒருவர் நோயுற்றால் வழங்கப்படும் நோய்க்கால சம்பளம் குறைக்கப்படும். மேலும் ஒருவரை வேலை நீக்கம் செய்வதற்கு பல இலகு வழிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. ஓய்வு பெறும் வயதெல்லையும் உயர்த்தப்பட இருக்கின்றது.

கடந்த 16 ஜூன் மாதம் நடாத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் 3 இலட்சம் பேர் கலந்து கொண்டனர். கடந்த சனியன்று நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்டுள்ளனர்.

மக்களின் பலத்த எதிர்புக்கு மத்தியில் எதிர்வரும் 13.09.96 வெள்ளிக்கிழமை இத்திட்டம் Bundestag இல் நிறைவேறும் என எதிர்பார்கப்படுகின்றது.

# மின்டானோ சாதானத்துக்கு உடன்பாடு சர்வசன வாக்கெடுப்புக்கு இணக்கம்

1970 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் ஆரம்பமான மின்டானோ தீவில் உள்ள மொறோ சுதந்திரப் போராளிகள் கடந்த 02.09.96 அன்று சமாதான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டனர். மொறோ தேசிய விடுதலை இயக்கத்தின் சார்பில் அதன் தலைவர் Nur Misuari ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.

இவ் ஒப்பந்தப்படி மின்டானோவில் உள்ள 14 மாகாணங்களுக்குமான அபிவிருத்தித் திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் 1998 இல் மின்டானோவின் அரசியல் அந்தஸ்து (சுதந்திரம்) தொடர்பாக கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடாத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும் செல்வத்துடன் அமெரிக்காவுக்குத் தப்பியோடிய மார்க்கோசின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டத்தில் ஒன்றரை இலட்சம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஒப்பந்தப்படி MNLF இன் 20 ஆயிரம் போராளிகள் பிலிப்பைன்ஸ் இராணுவத்துடன் இணைக்கப்படுவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 20 மில்லியன் (2 கோடி) மக்கள் தொகையைக் கொண்ட மின்டானோ தீவில் 50 இலட்சம் இஸ்லாமியர்களுக்கு கிடைத்த இவ் வெற்றி கத்தோலிக்கர்கள் மத்தியில் எதிர்ப்பைக் கிளப்பியுள்ளது. மின்டானோ தீவிற்கான இத்தகைய சமாதான ஒப்பந்தமொன்று 1976 இல் திரிப்போலியில் கைச்சாத்தாகியபோதும் பின்னர் அது அமுல் செய்யப்படவில்லை.

# நெல்சன் மண்டேலா மறுமணம் ?

தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா மறுமணம் செய்ய உள்ளார் என்ற செய்தி படிப்படியாக உத்தியோக பூர்வமாகி வருகின்றது.



விழாவொன்றின்போது...

கடந்த வாரம் அவர்கள் இருவரும் நெருக்கமாக பழகி வருவதையும் ஒருவரை ஒருவர் நேசிப்பதையும் அவரது அலுவலகம் ஊர்ஜிதம் செய்துள்ளது.

மொசாம்பிக் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி சமோரா மைக்கல் இன் மனைவியை இவர் விரும்புவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இவர் 1986-ம் ஆண்டு விமான விபத்தில் காலமானார். இவரது 7 பிள்ளைகளையும் மனைவியையும் தென்னாபிரிக்க காங்கிரஸ் தலைவர் ஒலிவர் தம்போ பராமரித்து வந்தார். 1990-ம் ஆண்டில் இருந்து இவர்களை நெல்சன் மண்டேலாவே பராமரித்து வருகின்றார். 78 வயதான நெல்சன் மண்டேலாவுக்கும் 50 வயதான கிரசாவுக்கும் இடையிலான திருமணம் தொடர்பான செய்தி பற்றி வின்னி இதுவரை கருத்தெதையும் தெரிவிக்கவில்லை.

இத் திருமணம் நிறைவேறினால் இது மண்டேலாவின் மூன்றாவது திருமணமாகும்.

## பிரான்சில் 96-97 கல்வியாண்டுக் கொடுப்பனவுகள்

பிரான்சில் கல்வி பயிலும் குழந்தைகளின் பாடசாலை உபகரணங்கள் மற்றும் செலவுகளுக்காக கடந்த ஆண்டு வழங்கப்பட்ட 1500 பிராங் கொடுப்பனவு இவ்வாண்டு 1000 பிராங் ஆக குறைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. CAF எனப்படும் அலோக்கேசன் பமிலியல் ஆல் வழங்கப்படும் இத் தொகை குழந்தைகளின் 16 வயது வரை வழங்கப்படுகின்றது.

16 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் இன்னமும் பாடசாலக்குச் சென்றால் பாடசாலையில் இருந்து பெறப்படும் அத்தாட்சியை சமர்ப்பிப்பதன் மூலம் 18 வயது வரை இத் தொகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் சில விசேட நிபந்தனைகளுக்கமைய 20 வயது வரை இத் தொகையைப் பெற வாய்ப்புக்கள் உள்ளன.

## தவறுக்கு வருந்துகின்றோம்

ஈழமுரசு 09.08.96 வெள்ளிக்கிழமைக்கான வாரக் குறிப்பில் 1928 இல் ஜெட் விமானத்தைக் கண்டு பிடித்த Frank Whittle தனது 89 ஆவது வயதில் காலமானார் என்பது 69 வயதில் காலமானார் எனத் தவறுதலாக வெளியாகியுள்ளது. தவறைச் சுட்டிக்காட்டிய வாசகர்களுக்கு நன்றி.

# பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியின் வருடாந்த விழா ஆரம்பம்

பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சியின் வருடாந்த விழா எதிர்வரும் செப்டம்பர் 13, 14, 15 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய மூன்று தினங்களாக நடைபெற உள்ளது.

வெளியிடப்பட்டுள்ள நிகழ்ச்சி நிரலின் படி நடைபெறும் பல்வேறுபட்ட நிகழ்வுகளில் பின்வரும் முக்கிய நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன.

ஞாயிறன்று 11.30 மணிக்கு மார்க்சியம் பற்றிய புதிய பரிமாணம் என்ற விவாதம் Espace Humanite இல் நடைபெறுகின்றது.

# வாரக் குறிப்பு

### 01.09.96 ஞாயிற்றுக்கிழமை

- நெதர்லாந்தில் கட்டாய இராணுவ சேவை முடிவுக்கு வந்துள்ளது. ஏற்கனவே பிரெஞ்சு அரசும் கட்டாய இராணுவ சேவையை நீக்கப் போவதாக அறிவித்துள்ளது.
- ஜேர்மன் பிரதமர் ஹெல்மட் கோலும் பிரெஞ்சு அதிபர் ஜக் சிராக்கும் பொன் நகரில் சந்தித்து 1999 ஆம் ஆண்டு ஐரோப்பிய நாணய உருவாக்கம் தொடர்பாக தமது திட சங்கற்பத்தை வெளியிட்டுள்ளனர்.

### 02.09.96 திங்கட்கிழமை

- பர்மிய செய்தித்துறை அமைச்சர் Aye Kyaw பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் அமெரிக்க பிரசைகள் சிலர் எமது நாட்டில் குழப்பத்தை விளைவிக்க முனைகின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.
- ஆர்ஜன்டீனாவில் 1976 காலப் பகுதியில் ஆட்சியில் இருந்த ஆட்சியாளர்கள் மனித உரிமைகளை மீறினார்களா என்பது பற்றி அமெரிக்காவில் விசாரணை ஆரம்பம்.
- ரோமேனியாவைச் சேர்ந்த தத்துவவியல் மாணவனான Roman Regman வயது 21 புளோரிடா விமான நிலையத்தில் வெடி பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.
- பசுப் பைத்திய நோய் எனக் கருதப்படும் நோய் தொடர்பான தகவல்களை ஐரோப்பிய ஆணைக்குழு வெளியிடாமல் மறைத்தது என்ற செய்தி வெளியாகியுள்ளது.

### 03.09.96 செவ்வாய்க்கிழமை

- Olivetti எனும் சர்வதேச கணனித் துறை நிறுவனத்தின் தலைவர் Benedetti தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.
- இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் காலம் சென்ற ஷ்ஜாத் ரபினின் மகன் Yuval அரசியலில் ஈடுபட உள்ளதாக அறிவித்துள்ளார்.
- எகிப்திய அரசின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் சமாதானத்துக்கு பங்கமாக செயற்பட வேண்டாம் என இஸ்ரேல் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 04.09.96 புதன்கிழமை

- புருண்டியின் தலைநகர் புஜும்புராவில் தரையிறங்கிய அமெரிக்க விமானம் அங்கிருந்து அமெரிக்க பிரஜைகள் சிலரையும் பல ஐரோப்பியர்களையும் அழைத்துச் சென்றது.
- பம்பாயில் மூன்றுமாடிக் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்த இடத்தில் இருந்து மேலும் 11 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இது வரை 17 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. விபத்துக்கான காரணம் அறியப்படவில்லை.
- தென்கொரியாவில் இராணுவச் சதி செய்ய முயன்றார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் 6 சீனர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.
- பிரான்சில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் கோடைகால நேர மாற்ற நடைமுறையைக் கைவிடுவது தொடர்பாக பிரான்ஸ் ஆராய்வதாக அதிகார பூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இம் மாற்றம் பொருளாதாரக் காரணத்துக்காக அமுல் படுத்தப்பட்டு வந்த போதிலும் மருத்துவக் காரணங்கள் இதனை நிறுத்தவேண்டிய அவசியத்தை உருவாக்குகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 05.08.96 வியாழக்கிழமை

- ஜேர்மன் டெனிஸ் வீராங்கனை ஸ்டெபி கிராப் இன் தந்தையின் வரி ஏய்ப்பு வழக்கு தொடர்பாக நீதி மன்ற விசாரணைகள் ஆரம்பம்.
- ஜேர்மன் பிரதமர் ஹெல்மட் கோல் ரஷ்ய வெளிநாட்டமைச்சர் பிறிமிக்கோவை பொன் நகரில் சந்தித்தார்.
- சுவிஸ் அரசு நேட்டோ படையணியுடன் இணைவது தொடர்பான தனது பூர்வாங்க இணக்கத்தை வெளியிட்டுள்ளது.
- இத்தாலிய ஜனாதிபதி விடுத்துள்ள அறிக்கையில் இத்தாலிய மக்கள் தேசிய ஒற்றுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். வட இத்தாலியை மையமாகக் கொண்டு செயற்படும் Umberto Bossi இன் கட்சி விரைவில் தனிநாட்டுப் பிரகடனம் செய்ய உள்ள வேளையில் இச் செய்தி வெளியாகியுள்ளது.

### 06.09.96 வெள்ளிக்கிழமை

- பொஸ்னியாவுக்கு அமெரிக்க ஆயுத விநியோகம் தொடர்பாக போலந்து தனது கவலையை தெரிவித்துள்ளது.
- அன்னை திரேசா குணமடைந்து வைத்தியசாலையில் இருந்து வெளியேறினார். அவர் மேல் மதிப்பு வைத்துள்ளவர்கள் நிம்மதிப் பெரு மூச்சு. அவருக்கு தற்போது 86 வயது.
- பிரெஞ்சு அரசு திட்டமிட்டுள்ள விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் திட்டத்தால் சோசலிசக் கட்சியின் பிரதிநிதித்துவம் பாதிக்கப்படும் என அக் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

### 07.09.96 சனிக்கிழமை

- வட ஈராக்கில் உள்ள குர்திஸ் போராளிகளின் (PKK) நிலைகள் மீது தமக்கு தாக்குதல் நிகழ்த்தும் நோக்கம் இல்லை என துருக்கி அறிவித்துள்ளது.
- பெல்ஜியத்தில் குழந்தைகள் கடத்தல் விவகாரம் அரச மட்டம் வரை விரிவடைந்து செல்கின்றது.
- பிரித்தானியாவில் நாளை நடைபெற இருந்த இஸ்லாமியர்களின் ஊர்வலம் இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. அநாமதேய தொலைபேசி அச்சுறுத்தல்கள் உட்பட பல பாதுகாப்புக் காரணங்களுக்காக இதனை இரத்துச் செய்வதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

21- 1996.09.12.jpg

# அமெரிக்காவின் அவசரத் தாக்குதல்கள்... விளைவு ?

வளைகுடாவில் 1991ம் ஆண்டு குவைத்துடன் நடந்த யுத்தத்தின் பின் அமெரிக்காவினால் ஈராக்கின் மேல் பல அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டது. அதன் பிரகாரம் வட ஈராக்கில் குர்திஸ் இன மக்களுக்கு ஒரு பாதுகாப்புப் பிரதேசமும், தென் ஈராக்கில் விமானப் பறப்புத் தடைப் பிரதேசமும் ஏற்படுத்தப்பட்டது. இதேவேளை துருக்கியிலும், சவுதியிலும் அமெரிக்கா தனது தளங்களை அமைத்து ஈராக்கைக் கண்காணித்து வந்தது.

ரிக்கா வளைகுடா யுத்தத்தின் பின் மாத்திரம் அவர்களைப் பற்றி கவலைப்பட வேண்டிய அவசியம் என்ன? ஈரானுடனான யுத்தத்தின்போது இதே அமெரிக்காவும் ஏனைய மேற்கு நாடுகளும்தான் ஈராக்கிற்கு ஆயுதங்களை அள்ளிக்கொட்டின. ஆனால் அவற்றையெல்லாம் பெற்றுக்கொண்ட 'சதாம்', குவைத்துடனான யுத்தத்தின் போது அவற்றை அவர்களுக்கெதிராகவே பாவித்தார். இதனைப் பொறுத்துக் கொள்ளாத அமெரிக்கா சதாமைக் கட்டுப்

படுத்தாலும் செயல்முறை நடவடிக்கைக எதனையும் எடுக்கவில்லை இதேவேளை துருக்கியப் படைகளினால குர்திஸ் தொழிலாளர் கட்சியின் போராளிகள் மேல் தாக்குதல் நடத்தப்பட்டபோது இந்த அமெரிக்கா எதையுமே கூறாமல் அமைதியாகவே இருந்தது காரணம் அங்கிருக்கும் தனது விமானத தளத்துக்கு ஆபத்து வந்துவிடும் என்பதாலேயே. இதேபோல் கடந்தமாதம் குர்திஸ்தான் தேசிய முன்னணிப் போராளிகளுடன் இணைந்து 'கலைமா

**குர்திஸ் இன மக்கள் 91-க்கு முன்னரும் ஈராக்கிய அரசின் தாக்குதல்களால் பெரும் பாதிப்புக்களை எதிர் நோக்கியுள்ளார்கள். ஆனால் அப்போதெல்லாம் மௌனமாக இருந்த அமெரிக்கா வளைகுடா யுத்தத்தின் பின் மாத்திரம் அவர்களைப் பற்றி கவலைப்பட வேண்டிய அவசியம் என்ன?**



இந் நிலையில் கடந்த வாரம் வட ஈராக்கிற்குள் உள்ள குர்திஸ் போராளிகள அமைப்புகள் ஒன்றின் வேண்டுகோளின் பேரில் அங்கு ஈராக்கியப் படைகள் நகர்ந்தபோது அமெரிக்கா வெகுண்டெழுந்து இரண்டு நாட்களுக்குள் தென் ஈராக்கில் 44 ஏவுகணைகளை வீசியது. இதன் மூலம் அங்கிருந்த ஈராக்கின் ராடர் மற்றும் விமான எதிர்ப்பு பிரிவு போன்றவற்றை அழித்ததாகக் கூறி விமானப் பறப்புத் தடைப் பிரதேசத்தையும் மேலும் விரிவுபடுத்தியது. ஆனால் அமெரிக்கா ஏவுகணை

படுத்த வேண்டிய நிலையில் அவர்களுக்கு அகப்பட்டது குர்திஸ் இன மக்கள் பிரச்சினை தான். வட ஈராக்கில் குர்திஸ் போராளிகளின் மூன்று அமைப்புக்கள் குறிப்பிடத் தக்கவை. அவற்றில் ஜலால் தளபானி தலைமையிலான குர்திஸ்தான் தேசிய முன்னணி ஈரான் சார்பு கொண்டது. மசூர் பர்சானி தலைமையிலான குர்திஸ்தான் ஜனநாயக முன்னணி ஈராக் சார்புடையது. அத்து

னியா' பகுதியூடாக ஈரானியப் படைகள் ஈராக்கிற்குள் ஊருடுவி குர்திஸ் மக்களை தாக்கிய போதும் அமெரிக்கா வாய்திறக்கவேயில்லை. ஈரானைப் பயங்கரவாத நாடு என்று பிரகடனப்படுத்திய அமெரிக்கா இச் சம்பவத்தை கண்டுகொள்ளவேயில்லை. இந் நிலையில் கடந்த வாரம் மசூர் பர்சானியின் குர்திஸ்தான் ஜனநாயக முன்னணியின் கோரிக்கையின்படி அங்கு நகர்ந்த ஈராக்கியப் படைகள்

சில சாதகமான பலன்களை அளித்துள்ளது. ஈராக் மீதான தாக்குதல்களை அமெரிக்காவில் 10-க்கு 8 பேர ஆதரித்துள்ளனர். எதிர்க்கட்சி வேட்பாளர்கூட ஜனாதிபதியின் நடவடிக்கையை ஆதரித்துள்ளார். இதன் மூலம்

தவிர்ந்த வளைகுடா நாடுகள் தமது வேற்றுமைகளை மறந்த நிலையில ஈராக்கிற்கு சார்பாக குரல் கொடுத்ததானது. அப் பிரதேசத்தில் ஈராக்கின் முக்கியத்துவத்தின் அவசியத்தை தெளிவுபடுத்துகின்றது. மேலும் வட ஈராக்கில் குர்திஸ் பகுதி

## உலகக் கண்

**உதயன்**

களை ஏவுவதற்கு முன்னதாகவே ஈராக் தனது படைப் பிரிவுகளை வட ஈராக்கிலிருந்து வெளியேற்றிக் கொண்டது.

நடந்த சம்பவங்கள் மூலம் அமெரிக்கா அடைந்த லாபங்கள் என்ன? ஈராக் என்ன லாபமடைந்தது? இவற்றை உலகம் எவ்வாறு கணிப்பிட்டது.

டன் துருக்கிக்கெதிராகப் போராடும் குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியும் ஈராக் சார்பு கொண்டது. இவ்வளவையும் நன்கு அறிந்து கொண்டிருந்த நிலையிலேயே அமெரிக்கா அவர்களுக்கு பாதுகாப்பு பிரதே




என்று அலசினோமானால் பல விடயங்கள் வெளிச்சத்துக்கு வருகின்றன.

குர்திஸ் இன மக்கள் 91-க்கு முன்னரும் ஈராக்கிய அரசின் தாக்குதல்களால் பெரும் பாதிப்புக்களை எதிர் நோக்கியுள்ளார்கள். ஆனால் அப்போதெல்லாம் மௌனமாக இருந்த அமெ

சத்தை அமைத்துக் கொடுத்தது. ஆனால் இந்த மூன்று அமைப்புக்களும் தொடர்ந்து போரிட்டுக்கொண்டிருந்த வேளையில் குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி தவிர்ந்த மற்றைய இரண்டு அமைப்புக்களின் தலைவர்களையும் உடன்பாட்டுக்கு வருமாறு பேச்சளவில் தொடர்ந்து அமெரிக்கா கேட்டுக் கொண்

மற்றைய அமைப்பின் கட்டுப்பாட்டில் இருந்த 'அர்பில்' நகரைக் கைபற்றி பர்சானியின் போராளிகளிடம் ஒப்படைத்தன. இதன்மூலம் இதுவரை அங்கு நிலவிவந்த அதிகாரச் சமநிலை அகற்றப்பட்டு ஈராக்கின் மேலாதிக்கம் கொண்டுவரப் பட்டுள்ளது. இந்த அதிகாரச் சமநிலையைப் பாவித்தே அமெரிக்கா அங்கு இதுவரை காலூன்றியிருந்தது. ஆகவே தற்போதைய நிலை அமெரிக்காவிற்கு சாதகமற்றது என்பதை உணர்ந்த நிலையில் தனது இயலாமையை தென ஈராக்கில் காட்டியுள்ளது. அத்துடன் 91-இல் வளைகுடா யுத்த காலத்தில் ஈராக்கிற்கு எதிராக வைத்திருந்த நிலைப்பாடுகளை பல நாடுகள் இன்று மாற்றிக் கொண்டுள்ளன. இம் முறை தாக்குதலை ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் பலமாக எதிர்த்த நிலையில் பிரான்ஸ், ஸ்பெயின் போன்றவை தூர நின்று அவதானித்தனவே அன்றி ஆதரிக்கவில்லை. ஆக பிரிட்டன், ஜேர்மனி போன்ற நாடுகள் மாத்திரம ஆதரவு தெரிவித்தன. முன்னர் பிளவுபட்ட நிலையில் இருந்த அரபு லீக் நாடுகள் இம் முறை ஒட்டுமொத்தமாக அமெரிக்காவைக் கண்டித்துள்ளன. ஆக உள்நாட்டில் தேர்தல் பிரச்சாரத்தில் மட்டும் இத் தாக்குதல் சம்பவம்

குறைந்தளவு எண்ணிக்கை வித்தியாசத்தில் முன்னணியில் நின்ற கிளின்டன் தனது வெற்றி வாய்ப்புக்களை அதிகப் படுத்திக் கொண்டுள்ளார். இதற்காக நிச்சயம் அவர் சதாமுக்கு நன்றி தெரிவித்தேயாக வேண்டும். ஆனால் இச் சம்பவத்தினால் சதாம் அதிக லாபமடைந்துள்ளார் என்றே கூற வேண்டும். ஐரோப்பாவை அமெரிக்காவிடம் இருந்து பிரிந்தது. வளைகுடா நாடுகளை தமது பக்கம் திருப்பிக் கொண்டது. தனது எதிரிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தியது போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அமெரிக்காவின் ஈராக் மீதான தாக்குதல்களை ஆதரிக்காத நிலையில் பிரான்ஸ் தனது நிலைப்பாட்டை வெளிப்படையாகவே கூறியிருந்தது. குர்திஸ் பிரச்சினையை அம் மக்கள் ஈராக்கிய அரசுடன் பேசித் தீர்க்க வேண்டும் என்பதனையும் ஈராக்கின் மேல் விதிக்கப் பட்டுள்ள புதிய அழுத்தங்களை தாம் ஆதரிக்க மாட்டாது என்பதையும். ஈராக்கின் உள் விவகாரங்களில் தாம் தலையிட முடியாது என்பதையும் அது தெளிவு படுத்தியிருந்தது. இதன் மூலம் ஐரோப்பிய நாடுகளிடையே தனக்கு சாதகமான ஒரு நிலையை சதாம் தோற்றுவித்துள்ளார் என்பது வெளிப்படை. மற்றும் குவைத்

யில் இருந்தே ஈராக்கிய எதிர்க் குழுக்கள் தமது எதிர்ப் பிரச்சாரங்களை மேற்கொண்டு வந்துள்ளன. அர்பில் நகருக்குள் ஈராக்கிய படைகள் நுழைந்த வேளை அங்கிருந்த பல எதிர்க் குழுக்களின் அலுவலகங்களும் தாக்கியழிக்கப் பட்டுள்ளன. இதன்போது அமெரிக்காவின் ஏஜன்டுக்கள் பலரும் கொல்லப் பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதன் மூலம் எதிரிகளின் நடவடிக்கைகளை வெகுவாக கட்டுப்படுத்தியுள்ளார். அடுத்ததாக அமெரிக்கா ஏவுகணைகளை வீசிய மறுதினம் சர்வதேச பத்திரிகையாளர்களை அப் பகுதிக்கு அழைத்துச் சென்று உண்மையில் ஏவுகணைகள் வீழ்ந்து வெடித்த இடங்களை அவர்களுக்குக் காட்டியபோது அமெரிக்கா இராணுவத் தளமற்ற பல பொதுமக்கள் பகுதிகள் மீது தாக்குதல் நடத்தியது உலகிற்கு அம்பலப்படுத்தப்பட்டது.

அமெரிக்காவினால் பாதுகாப்புப் பிரதேசம் என அமைக்கப்பட்ட வறண்ட பிரதேசத்தில் வளங்கள் ஏதுமற்ற நிலையில் உதவி நிறுவனங்களின் தயவில் வாழ்ந்து வரும் குர்திஸ் மக்கள் இனி வரும் காலத்தில் யாருடன் பேசித் தமது எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும் என்பதையும் இத் தாக்குதலகள தெளிவுபடுத்தியிருக்கின்றன.



# சிறுவர் முற்றம்

இவ் வாரம் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வி [illegible] பல்கலையும் கற்று சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## உங்கள் கை வண்ணம்

### இவ் வாரக் கைவண்ணம்



அண்மையில் சுவிசில் நடைபெற்ற பேரணியில் கலந்து கொண்ட சிறுவர்முற்ற சகோதரி

**செல்வி**
**செ.சிவாஜினி**

வயது: 10 (15.07.1986)
இடம்: 5436 WURENLOS, SWISS

ஐ.நா. வை நோக்கி அமைதிப் பேரணி



1. நான் ஐ.நா. வை நோக்கி அமைதிப் பேரணி [illegible]
2. ஐ.நா. வை நோக்கி அமைதிப் பேரணியில் [illegible]
3. ஐ.நா. வை நோக்கி அமைதிப் பேரணியில் [illegible]
4. ஐ.நா. வை நோக்கி அமைதிப் பேரணியில் [illegible]
5. ஐ.நா. வை நோக்கி அமைதிப் பேரணியில் [illegible]

## பல்சுவை



**செல்வி.**
**யே.சுயாதா**

வயது: 8 (01.04.88)
இடம்: 6600 Vejen, DENMARK

கரும்பு இனிக்கும்
மிளகாய் உறைக்கும்
பாகற்காய் கசக்கும்
மாங்காய் புளிக்கும்
உப்பு கரிக்கும்
பாக்கு துவர்க்கும்



## குட்டிக் கதை படிப்போம்...

அம்மா சொன்ன கதையை எழுதி அனுப்பியவர்

**செல்வி.**
**சுகி திருச்செல்வம்**

வயது: 9 (26.07.87)
5600 Faborg, DENMARK

### யானையும் பன்றியும்

ஒரு கோயிலில் யானை ஒன்று வளர்ந்துவந்தது. அந்த யானையை கோயில் யானை என்று அழைப்பார்கள். அந்த யானை எப்பொழுதும் சுத்தமாகவும் அமைதியாகவும் இருக்கும்.

ஒரு நாள் அந்த யானை கோயில் குளத்தில் குளித்துவிட்டு சுத்தமாக தெருவில் வந்துகொண்டு இருந்தது. எதிர்ப்பக்கத்தில் இருந்து ஒரு பன்றி சேற்றில் விழுந்து புரண்டுவிட்டு அழுக்காக வந்து கொண்டு இருந்தது. அதை பார்த்த யானை தெருவில் ஓரமாக போனது.

அப்பொழுது அந்த பன்றி சொல்லியது "பார்த்தீர்களா! யானை என்னைப் பார்த்து பயந்து எனக்கு மரியாதை கொடுத்து தெருவின் ஓரமாக போகிறது" என்று.

## அறிந்து கொள்ளுங்கள்

### ஐஸ்கிரீம் சாப்பிடும் கிளி.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

என்ன வியப்போடு பார்க்கிறீர்கள். கிளி ஐஸ்கிரீம் சாப்பிடுவதை நம்பமுடியாமல் உள்ளதா. உண்மைதான் பிள்ளைகளே! இஸ்ரேல் என்ற நாட்டில் ஒருவர் தனது வீட்டிலே வளர்க்கும் கிளி ஐஸ்கிரீம் விரும்பிச் சாப்பிடுகிறதாம். லோலா என்ற இந்தக் கிளிக்கு தேசிக்காய் (Citron) ஐஸ்கிரீம் என்றால் அலாதிப் பிரியமாம். உங்கள் எல்லோருக்கும் விருப்பமான



ஐஸ்கிரீமில் பங்குபோட கிளிகளும் புறப்பட்டு விட்டதா என்றா எண்ணுகிறீர்கள்?



**செல்வி.**
**யுவாணி**
**குணாளன்**

வயது: 7 (08.09.89)
இடம்: 71638 Ludwigsburg, Germany

நாய்

1. நாய் ஒரு செல்லப் பிராணி.
2. இது வீட்டைக் காக்கும்.
3. இதில் பல இனங்கள் உண்டு.
4. நாய் [illegible]
5. இது [illegible]
6. இது வள் வள் என்று குரைக்கும்.
7. நாய் ஒரு நன்றி உள்ள மிருகம்

## கவிதை பாடுவோம்

அம்மா சொல்லித்தந்த கவிதைக்கு படம்வரைந்து அனுப்பியவர்

**செல்வி. செல்வநேசன் சாருமதி**

வயது: 4 (20.01.1992)
இடம்: HAMBURG, Germany



### மீசைக்கார பூனை



மியா! மியா! பூனையார்
மீசைக்காரப் பூனையார்
ஆளில்லாத நேரத்தில்
அடுப்படிக்கு செல்லுவார்,
பாலிருக்கும் சட்டியை
பார்த்து, பார்த்து, நக்குவார்,
இரவில் எல்லாம் சுற்றுவார்
எலிபிடித்து தின்னுவார்,
நாயின் சத்தம் கேட்டதும்
ஓடி ஒளிந்து பதுங்குவார்.

# புகலிட நிகழ்வுகள்

## பிரான்சில் மாவீரர்நாள் போட்டிகள் - 1996

1996 மாவீரர் நாளை முன்னிட்டு பேச்சு, ஓவியம், பாட்டுத்திறன், கவிதை, சிறுகதை போன்ற போட்டிகள் நடத்தப்பட உள்ளன. போட்டிகளில் முதலிடத்தைப் பெறும் போட்டியாளர்களுக்கு மாவீரர் நினைவு தங்கப்பதக்கம் வழங்கப்படுவதுடன், தரமான ஆக்கங்கள் மாவீரர் நாள் சிறப்பிதழ் 1996 மலரில் இடம் பெறும்.

**பேச்சுப் போட்டி:**
10 வயதிற்குட்பட்டோர்,
11-13 வயதிற்குட்பட்டோர்,
14 - 16 வயதிற்குட்பட்டோர்.

**ஓவியப் போட்டி:**
12 வயதிற்குட்பட்டோர்,
13-15 வயதிற்குட்பட்டோர்,
16-18 வயதிற்குட்பட்டோர்.

**பாட்டுத்திறன் போட்டி:**
7 வயதிற்குட்பட்டோர்,
8-10 வயதிற்குட்பட்டோர்,
11-13 வயதிற்குட்பட்டோர்.

**சிறுகதை, கவிதை போட்டிகள்:**
வயதெல்லை கிடையாது.

### போட்டி விதிகள்

1. பேச்சுப் போட்டிகளில் பங்குபற்றுவோர் தாய்மொழி, தாய்மண், தாய்நிலத்து மாவீரர்களை நினைவு கொள்வதாக தமது பேச்சினை ஆக்கிக் கொள்ள வேண்டும்.
2. பாட்டுத்திறன் போட்டியில் தமிழீழ எழுச்சிப் பாடல்கள் மாத்திரமே பாடப்பட வேண்டும்.
3. ஓவியம், சிறுகதை, கவிதை என்பவற்றின் உள்ளடக்கம் சுயாதீனமாகத் தீர்மானிக்கப்படலாம்.
4. ஓவியம், சிறுகதை போன்ற ஆக்கங்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். பேச்சு, பாட்டுத் திறன் போட்டிகளுக்கான 'தெரிவுத் திகதி' பின்னர் அறிவிக்கப்படும். அனைவரும் விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை நேரடியாகவோ, ஒருங்கிணைப்புக் குழுப் பிரதிநிதிகள் மூலமாகவோ, தபால் மூலமாகவோ பெற்று, பின்னர் அனுப்பி வைக்கலாம்.
   (பேச்சு, பாட்டுத்திறன் போன்ற போட்டிகளில் பங்கெடுப்போரை தயார்படுத்துவதற்கு பெற்றோர்கள் உதவிபுரியவும்)
5. பிரான்சில் இருந்து மட்டுமே போட்டியாளர்கள் பங்குபற்ற முடியும்.
6. விண்ணப்ப முடிவுத் திகதி: 30.09.1996

மேலதிக விபரங்களுக்கு 43 58 11 42 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## ஜேர்மனியில் நடந்த சர்மிளாவின் பரதநாட்டிய அரங்கேற்றம்

(ஜேர்மன்)

சென்ற சனியன்று 24.08.96 வூப்பெற்றால் நகரின Theater Saal மண்டபத்தில் திருமதி சாவித்திரி இம்மாநுவல் அவர்களின் மாணவி சர்மிளா சிவபாலன் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் நடந்தேறியது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக யேர்மனிக்கிளைப் பொறுப்பாளர் திரு அனந்தராஜா அவர்கள் விளக்கேற்றிவைக்க வெற்றிமணி ஆசிரியர் சிவகுமாரன் அவர்கள் தலைமை தாங்கினார். விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழக யேர்மனிக்கிளைப் பொறுப்பாளர் கா. சிவநாதன் அவர்கள் பிரதமவிருந்தினராகவும், உலகத் தமிழர் இயக்கம் யேர்மனியின் கல்விப்பணிப் பொறுப்பாளர் திரு நாகலிங்கம் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாளராகவும் கலந்து கொண்டனர். திரு.சிவபாலன் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

ஏற்கனவே அங்கயற்கண்ணியாக மேடைகளில் தோன்றி, விடுதலை உணர்வை வெளிப்படுத்தி, மக்கள் மனதில் நிறைந்திருந்த சர்மிளா, பரதத்தின் சுத்தமான அடவுகளை விடுதலைப் பாடல்களுக்குள் கொணர்ந்து ஆடியது ஒரு சிறப்பு அம்சமாகும்.

நவரசபாவங்களை வெளிப்படுத்திய நேர்த்தியும், தாளசுத்தத்துடன் ஆடப்பட்ட பாதப்பதிவுகளும் துரித ஆட்டத்தின் வீச்சும் ரசிக்கத்தக்கதாக அமைந்தன.

இறுதியில் சேர்க்கப்பட்ட குறத்தி நடனம் புதுமையாக தமிழர் வரலாற்றையும் விடுதலை தாகத்தையும் சொல்லி, எதிர்கால விடிவை குறி சொல்லும் பாவனையில் காட்டிச் சென்றது. வித்தியாசமாக இருந்தது.

கலை பண்பாட்டுக் கழக துணைப் பொறுப்பாளர் கண்ணனின் இசைப் பாடலும், சிவசங்கரின் வயலினும், பிரணவநாதன் அவர்களின் மிருதங்கமும் சரியான இசைப் பொருத்தம் என்னும்படி சிறப்பித்தது.

கலைபண்பாட்டுக் கழக அறிவிப்பாளர் திரு. எல். வலன்ரையின் நிகழ்ச்சியை சிறப்பாக தொகுத்து வழங்கினார்.

# தியாகதீபம் திலீபனின் நினைவுடன் தொப்புள்கொடி உறவுக்காக 15 நாட்கள்

## பிரித்தானியா வாழ் தமிழீழ மக்களே

### உங்களுடன் ஒரு நிமிடம்!

உங்களுக்கு எவ்வளவு தான் வேலைகள் இருப்பினும் நேரம் ஒதுக்கி இம் மடலை ஒரு தடவையேனும் படியுங்கள்.

படிப்பதற்கு முன் உங்கள் கண்களை ஒரு கணம் இறுக மூடிக் கொள்ளுங்கள். எமது தாயகத்தின் நிகழ்வுகளை உங்கள் மனக்கண் முன் கொண்டுவந்து நிறுத்துங்கள்.

இப்போது பேரிரைச்சலோடு எதிரிப்படை விமானங்கள் நடாத்தும் குண்டுவீச்சுத் தாக்குதல்களின் முழக்கங்கள் உங்கள் காதுகளில் கேட்கும். எதிரி வீசும் எறிகணைகள் கூவிக்கொண்டு சென்று மக்கள் குடியிருப்புப் பகுதிகள் மீது விழும். கொல்லப்பட்ட மக்களின் சடலங்கள் சிதைந்து போய்க்கிடக்கும். படுகாயமடைந்த மக்கள் குருதி கொட்டக் கொட்ட உரிய வைத்திய வசதியின்றி அவலப்படுகையில் உயிர் மெல்ல மெல்லப் பிரியும். தமது உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ள கிளிநொச்சிப்பகுதியிலிருந்து 200,000 ற்கு மேற்பட்ட மக்கள் உடுத்த உடுப்புடன் வெளியேறி அகதிகளாக அலையும் அவலம் தெரியும். உணவு - மருந்து வகைகளை போர் ஆயுதமாகப் பயன்படுத்தும் நோக்குடன், அவற்றிற்கான தடைகளை சிறீலங்கா அரசு விதித்திருப்பதால் உரிய உணவின்றி, பால் வகையின்றி குழந்தைகள் வீரிட்டு அழும் ஓசை காதினில் கேட்கும். பசிக்களையுடனான பெரியவர் முன் கல் மனதை வாட்டும். உரிய மருந்து, வைத்திய வசதிகளின்றி கண்முன்னால் மெல்ல மெல்ல உயிர்கள் பிரிவதை தடுக்க வழிபோதுமின்றி பார்த்துக் கொண்டு நிற்கும் போது உள்ளம் நடுங்கும்.

### ஆம் சகோதர சகோதரிகளே!

எமது தாயகத்தில், எமது உடன்பிறப்புக்கள் இத்தகைய அவலத்தின் மத்தியில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இவ்வளவு துன்பத்தையும் எதிர் கொள்வதற்கு இவர்கள் தமிழர்களாகப் பிறந்துவிட்டமையும் தமிழர்களாக வாழத் துடிப்பதுவும் தான் காரணம். சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் கீழ் அடங்கி, இரண்டாம் தரக் குடிமக்களாக, அடிமைகளாக வாழவிரும்பாமல் சுதந்திர மனிதர்களாக வாழவிரும்பியமைதான் காரணம். மக்களைக் கொடுமைப்படுத்துவதன் மூலம் அடிமைச் சாசனம் ஒன்றை எழுதிவிட சிறீலங்கா அரசு துடியாய்த் துடிப்பதே இத்தகைய இன்னல்களை எம் மக்கள் அனுபவிக்கக் காரணம்.

### அன்பான மக்களே!

எமது மக்கள் மீது சுமத்தப்படும் துன்பங்களைத் துடைத்துவிட நாம் ஆதரவுக்கரம் நீட்ட வேண்டாமா? எமது மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டாமா? அவர்களுக்கான இருப்பிட, உணவு, மருந்து வசதிகள் கிடைத்துவிட வேண்டாமா? மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசித்தவாறு மகிழ்வுடன் வாழ வேண்டாமா?

இதற்கு உதவவேண்டியது புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களாகிய எமது தார்மீகக் கடமை என்பதனை நாம் மறந்து போகலாமா? தாயகத்தில் வாழும் மக்கள் படும் வேதனைகளும் சிந்தும் குருதியும் தான் இங்கு நம்மில் அநேகர் அரவணைக்கப்படுவதற்குப் பிரதான காரணமாய் அமைந்தது என்பதை நாம் மறந்துவிடத்தான் முடியுமா? எமது மக்கள் சொல்லொணாத் துயரத்தில் வாடும்போது கல்மனம் படைத்தவராய் உதவி செய்யாது விட்டோம் என்ற அவப் பெயர் எமக்கு ஏற்பட நாம் அனுமதிக்கப் போகிறோமா? எவர் என்ன கேடு கெட்டுப் போயினும் எமக்கென்ன என்னுடைய குடும்பம் மட்டும் நன்றாய் இருந்தால் போதும் என்ற நினைவுடன் சுயநலக் காரராய் வாழப் போகிறோமா?

'இல்லை' என்பதுதான் இதற்கு உங்கள் பதிலாய் இருக்கும். இப்போது உங்கள் முன் சில உரிமைகளும் கடமைகளும் காத்திருக்கின்றன.

மக்களின் துன்பங்களைத் தீர்ப்பதற்குரிய செயற்பாடுகளில் இறங்குவது எமது கடமையாகின்றது. எவ்வெவ் வழிகளில் இச் செயற்பாடுகளை அமைக்கலாம் எனும் ஆலோசனைகள், கருத்துக்கள் வழங்கி இச் செயற்பாட்டை வழிநடத்துவது உரிமையாகின்றது. 'இவர்கள் எமது மக்கள். இது எமது போராட்டம்' என்ற உரிமையுடன் போராட்டம் தொடர்பான செயற்பாடுகளில் இறங்குவதும், அப் போராட்டத்தின் தேவைகளுடன் எம்மை இணைத்துக் கொள்வதும் காலத்தின் தேவையாக இருக்கின்றது. நாம் எவருமே இன்றைய காலகட்டத்தில் விலகி நிற்க முடியாது. மக்களின் ஒன்றுபட்ட எழுச்சி கிளம்பவேண்டிய நேரம் இது!

### இரண்டுவார மக்கள் தொடர்புத் திட்டம்

நாம் அனைவரும் போராட்ட ஆதரவுச் செயற்பாட்டுடன் எம்மை இணைத்துக் கொள்ளும் நடைமுறையினை விரிவுபடுத்தும் நோக்குடன் லண்டன் வாழ் மக்கள் அனைவரையும் இருவாரங்களிற்குள் வீடு வீடாகச் சென்று சந்திப்பதென நாம் முடிவு செய்துள்ளோம். இச் சந்திப்பு 15.09.96 முதல் 29.09.96 வரை இடம்பெறும். போராட்டத்துடன் மக்கள் அனைவரும் இணைக்கப்பட வேண்டும் என்பதில் மிகத் தீவிரமாகச் செயற்பட்ட லெப்.கேணல் திலீபனின் நினைவுடன் இத் திட்டத்தினை நாம் செயற்படுத்துகிறோம். இதனால் திலீபன் தனது நீர்கூட அருந்தாத, சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தினை ஆரம்பித்த தினத்தின் (15.09.87) 9வது வருட நினைவு நாளில் இத் திட்டத்தினை ஆரம்பிக்கிறோம்.

- ❒ 15.09.96 காலை 10 மணி முதல் எமது தொண்டர்கள் வீடு வீடாக வந்து உங்களைச் சந்திப்பார்கள்.
- ❒ தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் சர்வதேசச் செயற்பாடுகளை விரிவு படுத்துவது தொடர்பாகவும், விடுதலைப்புலிகளின் பிரித்தானியக்கிளையின் செயற்பாடுகளை விஸ்தரிப்பது தொடர்பாகவும் உங்கள் கருத்துக்களை - ஆலோசனைகளை எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வருகை தரும் தொண்டர்களிடம் தெரிவியுங்கள்.
- ❒ போராட்ட ஆதரவுச் செயற்பாடுகளுடன் இணைந்து செயற்பட விரும்புபவர்கள் எத்துறையில் இணைந்து செயற்பட விரும்புகிறீர்கள் என்பதையும், ஒரு வாரத்தில் எவ்வளவு நேரத்தினை ஒதுக்க முடியும் என்பதையும் தெரிவியுங்கள்.
- ❒ எமது மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும் துன்பங்களைப் போக்கவும், உங்கள் வீடுகளுக்கு வருகைதரும் தொண்டர்களால் விற்பனை செய்யப்படும் பங்களிப்புச் சீட்டுக்களை 100 பவுண்களுக்கு குறையாத தொகைக்குப் பெற்று எமது மக்களின் எதிர்கால வாழ்வுக்கு பங்களியுங்கள்.

தமிழ் மக்கள் மீது சிங்கள பௌத்த மேலாண்மையைத் திணிக்கும் நோக்குடன் சிறீலங்கா அரசு நடாத்தும் அதர்ம யுத்தத்திற்கே, பெரும்பாலான சிங்கள மக்கள் ஆதரவளிக்கும் ஒரு சூழ்நிலையில், தமிழ் மக்களின் விடிவிற்கான விடுதலைப் போருடன் இணைந்து நிற்க வேண்டியது எம் ஒவ்வொருவரதும் கடமையல்லவா!

எமது தேசத்தின் விடிவிற்காக ஒரு சிறுதுளி நீர்கூட அருந்தாது தன்னுயிரை ஆகுதியாக்கிவிட்ட தியாகதீபம் திலீபனின் நினைவோடு, போராட்ட ஆதரவுச் செயற்பாடுகளோடு எம்மை இணைத்துக் கொள்வோம்.

**இவர்கள் எமது மக்கள் இது எமது போராட்டம்.**

**நன்றி**

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

UTO, 211, Katherine Road, London E6 1BU

| | | |
|---|---|---|
| 0181-503 42 94 | 0956-329 660 | 0956-314 370 |
| 0956-168 794 | 0956-970 392 | 0956-256 098 |

## எங்கள் பிரதிநிதி முரளிதரனை விடுதலைசெய்!!

# ஓர் பிரச்சாரப் போர்!!



இலங்கை அரசின் அரசியல் சதி நடவடிக்கை காரணமாக சுவிஸில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் பிரதிநிதி நடராஜா முரளீதரனை விடுதலை செய்யக் கோரி பேர்ன், ஜெனீவா நகரங்களில் பல்லாயிரக்கணக்கில் கூடி கோரிக்கை விடுத்தது மட்டுமன்றி பல்லாயிரம் கையெழுத்துக்களுடன் கூடிய மகஜர்கள் போன்றவற்றையும் சுவிஸ் அரசுக்கு அனுப்பியுள்ளோம். இதே போன்று திரு முரளிதரன் விடுதலை செய்யப்பட வேண்டியதன் நியாயத்தையும் அவசியத்தையும் சுவிஸ் மக்களுக்கு விளக்கும் வகையில் புதிய முறையில் சில பிரச்சார நடவடிக்கைகள் எடுக்க உள்ளோம். இதன் ஓர் அங்கமாக திரு முரளிதரனின் படம் தாங்கி, அவரை விடுதலை செய்யக் கோரும் சுலோகம் அச்சடிக்கப்பட்ட ரீ சேர்ட்டுக்களை அணிந்து எதிர்வரும் 10.09.96 செவ்வாய்க்கிழமை முதல் 16.09.96 திங்கட்கிழமை வரை சுவிஸ் மக்களுக்கு விளக்கும் ஒரு பிரசாரப் போரை சூரிச் நகரெங்களும் நடத்துகின்றோம். காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை நடைபெறும் இப் பிரசாரப் போரில் அனைத்து தமிழ் பேசும் மக்களும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தமிழீழ ஒருமைப்பாட்டு அமைப்பு
Postfach 319, 8172 Niederglatt.

### தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளையினரால் நடாத்தப்படும் மண்மீட்பு நிதிக்கான மாதாந்த அதிஸ்டலாபச் சீட்டிழுப்பில் (H) ஆவணி மாதத்தில் பரிசுபெறும் 100 அதிஷ்டசாலிகளின் பற்றுச் சீட்டு இலக்கங்கள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 0009 | 0942 | 1888 | 2871 | 3519 | 4442 | 5242 | 6182 |
| 0011 | 1021 | 1928 | 2875 | 3582 | 4445 | 5332 | 6331 |
| 0051 | 1116 | 1941 | 2877 | 3621 | 4642 | 5431 | 6332 |
| 0096 | 1200 | 2016 | 2880 | 3748 | 4644 | 5496 | 6486 |
| 0102 | 1241 | 2121 | 2921 | 3891 | 4666 | 5681 | 6512 |
| 0121 | 1316 | 2198 | 3001 | 3900 | 4742 | 5700 | 6671 |
| 0281 | 1391 | 2221 | 3016 | 3958 | 4844 | 5702 | 6769 |
| 0336 | 1428 | 2362 | 3221 | 4021 | 4896 | 5896 | 6816 |
| 0482 | 1482 | 2412 | 3306 | 4206 | 4958 | 5898 | 6896 |
| 0518 | 1586 | 2432 | 3322 | 4292 | 5002 | 5906 | |
| 0661 | 1648 | 2551 | 3401 | 4321 | 5016 | 5942 | |
| 0713 | 1712 | 2678 | 3446 | 4322 | 5108 | 6108 | |
| 0891 | 1882 | 2758 | 3500 | 4441 | 5122 | 6116 | |

## தமிழருவி இசைவிழா 96 போட்டி முடிவுகள்

**கடந்த 31.08.96 அன்று ஜேர்மனி எசன் மாநகரில் தமிழ் அருவிப் பத்திரிகை நடாத்திய ஐரோப்பா ரீதியிலான மாபெரும் இசைப் போட்டி முடிவுகள்.**

சிறந்த இசைக்குழு : 1. சுப்பர் பிறின்ஸ் – ஜேர்மனி
2. யாழிசை – நோர்வே
3. யங்ஸ்ரார்ஸ் – முன்சன்கிளட்பாக்

சிறந்த பாடகி: 1. செல்வி வனஜா கிறேகர் (யங்ஸ்ரார்ஸ்)
2. செல்வி கருணயா (பேர்லின் சஹானா)
3. செல்வன் சுதன் (சுப்பர் பிறின்ஸ்)

சிறந்தபாடகர் 1. திரு அன்ரன் டேவிட் (யாழிசை – நோர்வே)
2. செல்வன் எமிலியானுஸ் (பாட்டு)
3. செல்வன் சுதன் (சுப்பர் பிறின்ஸ்)

சிறந்த கீபோட் : செல்வன் பிறின்ஸ் ராஜா (சுப்பர் பிறின்ஸ்)
சிறந்த கிற்றார் : திரு கணேஷ் (யாழிசை)
சிறந்த தபேலா : திரு.ராஜா (சுப்பர் பிறின்ஸ்)
சிறந்த ட்றம்மர் : திரு வி.சி. டானியல் (யுலாண்ட் டென்மார்க்)

சிறந்த பக்கவாத்தியம்: செல்வன் மதன் (யங் ஸ்ரார்ஸ்)

சுயமாக இசையமைத்துப் பாடிய இசைக்குழுக்களில் சிறந்த இசைக்குழுவாக யுலாண்ட் டென்மார்க் தெரிவானது.
பாடியவர்களில்...

சிறந்த பாடகர் 1. செல்வன் உதயன் (யங்ஸ்ரார்ஸ்)
2. திரு பாக்கியராஜ் (யுலாண்ட டென்மார்க்)
3. செல்வன் அசோக் குலதாசன் (முத்துக்கள் மூன்று)

சிறந்த குழந்தைப் பாடகர்கள்
1.செல்வன் அசோக் குலதாசன் (முத்துக்கள் மூன்று)
2. செல்வி பிறஷ்லா ராஜா (சுப்பர் பிறின்ஸ்)
2. செல்வன் ஆனந்த் குலதாசன் (முத்துக்கள் மூன்று)

வெற்றியீட்டிய கலைஞர்களுக்கு தமிழருவிக் கேடயங்களும், பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.
ஆயிரத்துக்கும் அதிகமான ரசிகர்கள் கலந்து கொண்ட இந் நிகழ்ச்சிகளில் பலதரப்பட்ட நிகழ்ச்சிகளும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.
தமிழீழத்தில் யுத்தத்தினால் காயமுற்ற சிறுவர்களுக்காக நாலாயிரம் டொச் மார்க் கையளிப்பதாக அறிவிக்கப்பட்டது.

# தமிழர் புனர்வாழ்வுக் கழக மருத்துவ நிதி சேகரிப்பு



### வன்னிப் பிரதேசத்தில் உடனடி மருத்துவத் தேவைகள்

சத்ஜய என்ற குறியீட்டுப் பெயருடன் சிறீலங்கா அரசு கிளிநொச்சிப் பிரதேசத்தில் நடாத்திய எறிகணைத் தாக்குதல்களினால் வன்னிப் பிரதேசத்தின் முக்கிய வைத்தியசாலையான கிளிநொச்சி வைத்தியசாலை முற்றாக சேதமுற்றதுடன் அப் பிரதேசத்தில் வாழும் மக்களின் மருத்துவ தேவைகளுக்குப் பெரும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. தற்போது இடம்பெயர்ந்து வாழும் மக்களின் மருத்துவ தேவைகள் அப் பிராந்தியத்திலுள்ள சிறு மருத்துவ நிலையங்களிலும் மல்லாவி, தர்மபுரம் மற்றும் அக்கரையான் போன்ற இடங்களிலுள்ள சிறிய வைத்திய சாலைகளிலுமே ஓரளவேனும் பூர்த்தி செய்யப்பட்டு வரப்படுகின்றது. விரைவாக அதிகரித்து வரும் மருந்துத் தட்டுப்பாடும் மருத்துவ வசதியின்மையும் ஏற்கனவே வசதி குறைவான இவ்வைத்திய நிலையங்களை தேவையின் விளிம்பிற்குத் தள்ளியுள்ளன. உதாரணமாக மல்லாவி வைத்தியசாலையில் இருநூறு படுக்கைகள் மாத்திரமே இருந்தும் எண்ணூறுக்குமதிகமான நோயாளிகள் தினமும் இவ் வைத்திய சாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப் படுகிறார்கள்.

கிளிநொச்சியிலிருந்து வெளியேறிய 250 000ற்கும் அதிகமான தமிழ் மக்களில் பெரும்பான்மையோர் இன்னமும் மரநிழல்களிலும், தெருவோரங்களிலும் வாழ்ந்துவரும் வேளையில் குடிப்பதற்கும், சுகாதாரத்திற்கும் சுத்தமான நீரற்ற நிலையில் பல்வேறுபட்ட நோய்களினால் ஆட்கொள்ளப்பட்டு சொல்லிலடங்கா வேதனைகளை அனுபவித்து வருகிறார்கள். மலேரியா, மஞ்சட் காமாலை, செப்ட சீமியா (நச்சு இரத்தம்) போன்ற கொடிய தொற்று வியாதிகளினால் இடம்பெயர்ந்தோர் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளார்கள். மேலும் வவுனியாவின் எல்லைத் தடை முகாமில் மருந்து வகைகளை வடபகுதியினுள் எடுத்துச் செல்ல அரச படைகள் விதித்து வரும் தடை, சீரான மருத்துவ சேவைகளுக்கு தடங்கல்களை ஏற்படுத்தியுள்ளது.

வன்னிப் பெருநிலப் பரப்பில் பாதிக்கப் பட்டுள்ள மக்களுக்கு மருத்துவ, குடிநீர் வசதிகளை செய்து கொடுக்கும் முயற்சிகளுக்கு உடனடியாக பெருமளவு நிதி தேவைப்படுகிறது. இம் முயற்சியில் முன்னோடி நடவடிக்கைகளை எடுத்துவரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், உலகளாவிய ரீதியில் பரந்து வாழும் தமிழ் மக்களினதும், தமிழர் நலன்புரி அமைப்புக்களினதும் உதவியைப் பணிவுடன் நாடி நிற்கிறது. மேலதிக விபரங்களுக்கு உங்கள் நாட்டின் தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கிளையுடன் தொடர்பு கொள்ளவும்.

**ஒருங்கிணைப்பாளர்**
**அனைத்துலக ஒருங்கிணைப்புச் செயலகம்**
**தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - அவுஸ்திரேலியா.**

# டென்மார்க்கில் நடந்த கரும்புலிகள் நினைவு உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

கடந்த 31.08.96 அன்று கரும்புலிகள் நினைவாக 7 தபர் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி டென்மார்க் ஈகாஸ்ட் நகரில் நடை பெற்றது. மூன்றாவது முறையாக நடைபெற்ற இச் சுற்றுப்போட்டியில் டென்மார்க்கிலிருந்து 12 கழகங்களும், நோர்வேயிலிருந்து 4 கழகங்களும், சுவீடன், ஜேர்மனி ஆகிய நாடுகளிலிருந்து தலா ஒரு கழகங்களும் கலந்து கொண்டன.

இறுதிப் போட்டியில் டென்மார்க் ஸ்ருவர், வீபோ விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின. ஸ்ருவர் விளையாட்டுக் கழகம் 3/1 கோல் அடிப்படையில் வீபோ கழகத்தை தோற்கடித்து வெற்றி பெற்றது மூன்றாவது இடத்தை கிரீன்ஸ்டட் யங்ஸ்டார் விளையாட்டுக் கழகம் பெற்றுக் கொண்டது.

சிறந்த பந்துக் காப்பாளராக ஸ்ருவர் கழகத்தைச் சேர்ந்த சுதாஸ் அவர்களும், சிறந்த விளையாட்டு வீரராக வீபோ கழகத்தைச் சேர்ந்த சிவாஸ்கரன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இச் சுற்றுப் போட்டியில் அதிக கோல்களை போட்டதற்கான பரிசை கால் இறுதிப் போட்டிவரை கலந்து கொண்ட நிபோ கழகத்தைச் சேர்ந்த குகன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

## சுவிஸ் லுட்சேர்ன் மாநிலத்தில் புதிய கணனி வகுப்புக்கள்

தமிழ் மக்களின் நலன் கருதி தமிழ் மன்றத்தில் புதிதாக கணித வகுப்புக்கள் எதிர்வரும் 14.09.96 சனிக்கிழமை ஆரம்பமாகின்றன. அனுபவம் உள்ள ஆசிரியர்களால தமிழ் மொழியில் விளக்கங்கள் கொடுக்கப்படும் இவ் வகுப்புக்கள் 6 பேர்களைக் கொண்ட குழுக்களாக ஒழுங்கு செய்யப்படும்.

மேலதிக விபரங்களுக்கு மில்லர் அங்காடி 041 210 63 67 அல்லது 041 210 76 16 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

Tamil Mandram, Tribschen Strasse51, 6005 Luzern.

## ஜேர்மனியில் நடந்த பரதநாட்டிய அரங்கேற்றம்



கடந்த 01.09.96 அன்று உலகத் தமிழர் இயக்க ஸ்ருட்காட் தமிழாலய மாணவியும், வானதி வாணி நர்த்தனாலயத்தின் அதிபர் நாட்டியதாரகை திருமதி வானதி தேசிங்குராஜா அவர்களின் சிஷ்யையும் திரு, திருமதி அருளானந்தம் தம்பதிகளின் புதல்வியுமான செல்வி மீரா அருளானந்தத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம் வெகுசிறப்பாக நடைபெற்றது.

## தமிழ்ச்சிறார் பாடசாலை ஆரம்பம்


ரூர்மொண்ட் Roermond நகரில் எதிர்வரும் 15.09.96 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு புலம் பெயர்ந்து வாழும் தமிழ் சிறார்களின் நலன் கருதி இப பாடசாலை ஆரம்பிக்கப் படுகின்றது. இப் பாடசாலை ஆரம்பத்தில் பெற்றோர் தமது பிள்ளைகளுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விபரங்களுக்கு லோகன் 077 373 2061 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

தமிழர் ஒருங்கிணைப்புக்குழு - நெதர்லாந்து.

# இதோ விற்பனையில் VIDEO CD DECK

முதல் முறையாக ஐரோப்பாவில் இறக்குமதி செய்து விநியோகிக்கிறோம்!




PHILLIPS Video CD Player

* 5 CDக்கள் ஒரே முறையில் போடக்கூடியது,
* துல்லியமான ஒலி,
* மிகத் தெளிவான படங்கள்,
* சாதாரண Audio, CD க்கள் பாவிக்கக்கூடியது

**விலை: 3950 Frs***

ஒரு Video CD போடக்கூடிய
சிறிய கருவியும் விற்பனைக்குண்டு
(Walkman வடிவம் கொண்டது)

**விலை: 2950 Frs***

இலகு தவணைமுறை வசதிகள்
செய்து கொடுக்கப்படும்

ஐரோப்பாவிற்கான ஏக விநியோகஸ்தர்கள்:

Frs* = பிரெஞ்சு பிராங்குகள்

## LUNE International

5, Rue Perdonnet, 75010 Paris. M°: La Chapelle ou Gare du Nord - Tel: 42 09 21 43

(ADV)

## ரசிகப் பெருமக்களுக்கு Ramy Record Swiss இன் முக்கிய அறிவித்தல்

Ramy CD க்களில் இதுவரையிலும் வெளிவந்த சுகமான ராகங்கள், கீதங்கள் அனைத்துமே நிறைந்த சுமைகளுடன் தான் வெளிவந்துள்ளன. இருந்தும் நாம் எடுக்கும் அத்தனை முயற்சிகளும் எம் மக்களிடம் போய்ச் சேரும்போது அனைத்துத் துன்பங்களும் தூசாய்ப் பறந்து போய்விடுகின்றன. விளம்பரங்களை விடுத்து தரம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வளர்ந்த எமது நிறுவனம் இந்த முக்கிய அறிவித்தலை விடுக்கின்றது.




## காதல் தேசம்

இசை: ரகுமான் இயக்கம்: கதிர்

இத் திரைப்படத்தின் பாடல் உரிமைகளை ஐரோப்பாவிற்கும் கனடாவிற்கும் பெற்றிருந்த நிறுவனத்திடம் 10,500 SFr உரிமைப் பணமாகச் செலுத்தியதன் பேரில் அதன் உரிமைப் பத்திரத்துடன் 20 நாட்களின் பின் வெளியீடு செய்ய எமது நிறுவனத்திற்கு உரிமை வழங்கப்பட்டது. ஆனால் இந் நிறுவனம் சூழ்ச்சியில் எம்மை சிக்க வைக்க முனைந்தது. ஆனால் சகல தடைகளையும் மீறி இவ் இசைத் தட்டை அனைத்து நாடுகளிலும் வெளியீடு செய்துள்ளோம்.

சகல நிறுவனங்களுக்கும்!
இந்த இசைத் தட்டினை விநியோகம் செய்வதில் வரும் இடையூறுகளுக்கு நாமே பொறுப்பானவர்கள் என்றும் உறுதி கூறுகின்றோம். இது சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கு

Ramy Reco R.E.I., Sivakanthan S.V.
Kasernen Str-123, 7007 Chur, Switzerland. - Tel: 081-2525013

(ADV)

# பெண்கள் பலவிதம்

# மார்பகப் பாதுகாப்பும் ஆடைத் தெரிவும்

அழகாக, கவர்ச்சியாக இருக்கின்றதென்பதற்காக பெண்கள் மிக இறுக்கமான ஆடைகளை அணிவது உடல் நலத்திற்கு கேட்டினையே விளைவிக்கின்றது. உடலினை இறுக்கக் கூடிய ஆடைகளையும் இடுப்பில் கூடியமான பாவாடைகள் இறுக்கமான மார்பு உள்ளாடைகளையும் அணிவதனால் இடுப்பு வலியும் முள்ளந்தண்டுடன் தொடர்பான முதுகு வலியையும் கொண்டுவரும்.

இறுக்கமான இடுப்பில் ஏற்படும் அழுத்தத்தின் காரணமாக இரைப்பை, கல்லீரல், குடற்தொகுதி ஆகிய உறுப்புகளில் பாதிப்புகள் ஏற்படுகின்றன. அதுமட்டுமல்ல கருப்பைக் கோளாறுகளையும், நரம்புக் கோளாறுகளையும் கூடத் தோற்றுவித்துவிடும்.

சிலர் தமது மார்பகங்கள் எடுப்பாகத் தெரிய வேண்டும் என்பதற்காக கம்பிகள், பிளாஸ்திக்கு பட்டிகள் என்பவற்றை வைத்துத் தைத்த மட்டமான மார்பு உள்ளாடைகளை அணிகின்றனர். தொடர்ச்சியாக இவ்வாறு அணிவதனால் தசை இறுக்கம், மரத்துப்போதல், மார்புக் கட்டிகள், உடலினுள் ரத்தக் கட்டிகள் போன்ற தீய விளைவுகள் ஏற்படுகின்றன. எனவே உடல் நலத்தைக் கருத்திற் கொண்டு உள்ளாடைத் தெரிவில் கவனம் செலுத்துவது நல்லது.

மார்பகங்களில் தோன்றும் கட்டிகள் எல்லாம் புற்று நோயாகத்தான் இருக்க வேண்டும் என்று வீணான பயப்பிராந்தியை தோற்றுவிக்கக் கூடாது. அவை தீங்கு விளைவிக்காத நார்க் கோளையாக (Fibroadenoma) கூட இருக்கலாம். தீங்கு விளைவிக்காது விடினும் அறுவை மூலம் எடுக்கப்பட்ட பின்னரும் மீண்டும் மீண்டும் தோன்றும் இயல்புடையன.

இவ்வாறான கோளைகளை அறுவை மூலம் அகற்றிய பின்னரும் தோன்றுமானால் முறையாக வைத்திய சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக மார்பினைப் பரிசோதனை செய்யும் மார்பு ஊடுகதிர்ப்படம் (Mammography), மார்பக நுண்ணொலி அலகீட்டுச் சோதனை (Ultrasound breast) ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும்.

பல பெண்களுக்கு மாதவிலக்குத் தோன்றுவதற்கு ஓரிரு வாரங்களுக்கு முன்னர் மார்புகள் கனத்து வலி ஏற்படலாம். இதற்கு இயக்கு நீர்ச் சுரப்பியின் தொழிற்பாடே காரணமாகிறது. மார்பகச் சுரப்பியின் முடிவு முனை அக்குள் பக்கம் அமைந்திருப்பதால் இவ் வலியானது தோள், உட்கைப் பகுதி ஆகிய இடங்களிலும் ஏற்படும்.

எனவே இவ்வாறான வலியினைக் குறித்து பீதியடையத் தேவையில்லை.

**தொகுப்பு:**
**வர்ஷிகா - வைஷ்ணவி**

## பெண்ணியல்வாதிகளால் கலங்கிய தமிழக சட்டப்பேரவை

"மாதர்தம்மை இழிவு படுத்தும் மடமையை கொழுத்துவோம்" என்று முழங்கிய புரட்சிக் கவிஞன் தோன்றிய தமிழகத்திலே பெண்கள் மீதான அடக்குமுறைகள் வகைதொகையின்றி தொடர்வது வேதனைக்குரிய நிகழ்வு.



போராடும் பெண்ணுரிமைக் கழகத்தினர்

பெண்களை இழிவு படுத்தியும், கிண்டல் செய்தும், இரட்டை அர்த்த வசனங்களை விவாதங்களில் எடுத்துவிடுவதும் தமிழக சட்டப் பேரவைக்கு ஒன்றும் புதிதான விடயமல்ல. ஆனால் இத்தகைய இழிசெயல்களை நிறுத்தக் கோரி புயலென நுழைந்துள்ளார்கள், தமிழக பெண்ணுரிமைக் கழகத்தைச் சேர்ந்த எட்டுச் சகோதரிகள்.

கடந்த மாதம் பேரவையினுள் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இந்த எட்டுப் பேரும் பெண்ணுரிமைக் கோஷங்களை முழங்கியவாறு பார்வையாளர் பகுதியிலிருந்து எழுந்து கையிலிருந்த துண்டுப் பிரசுரங்களை பேரவைக்குள் வீசி எறிந்தார்கள். அவர்கள் அழகு ராணி போட்டிகளை தடை செய்யக் கோரியும் ஆபாச ஒளியிழை, திரைப்படங்களையும் தடை செய்யக் கோரியும் கோஷங்களை எழுப்பினர்.

சட்ட மன்றத்தின் பாதுகாவலர்களால் கைது செய்யப்பட்ட இவர்கள் பேரவையை அவமதித்த (?) குற்றச்சாட்டின் பேரில் இரண்டு நாட்கள் சிறையில் அடைக்கப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டபோதும் பொலிசாரால் பழிவாங்கும் முகமாக மீண்டும் கைதாகியுள்ளனர். கிராமமொன்றில் இளம் பெண்ணொருவரை பாலியற் பலாத்காரம் செய்த பொலிசாரை நீதிமன்றினுள் வைத்தே செருப்பால் அடித்ததற்காக பொலிசார் வஞ்சம்தீர்க்க முயல்வதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்தவேளையில் இச் சங்கத்தின் தலைவி கலா அழுத்தமாக கேட்பது "பெண்கள் போராட்டப் புறப்பட்டால்திசை மாறிவிடுமா?" என்ற கேள்வியையே.

பெண்களுக்கு முறையான சமூகப் பங்கீட்டை கொடுக்காது போனால் அதைப் போராடித்தான் பெற வேண்டும் என்பதை தமிழகம் விரைவில் உணரப் போகின்றது.

## வானிலிருந்து இறங்கிய பிரெஞ்சு நட்சத்திரம்

இரு வாரங்களாக ரஷ்ய விண்வெளி ஆய்வு கூடமான மீர் (MIR) இல் தனது ஆய்வுகளை முடித்துக் கொண்டு பிரான்ஸ் நாட்டின் முதலாவது பெண் விண்வெளியல் ஆய்வாளர் குளூடியா ஆந்ரே கடந்த வாரம் மீண்டும் பூமிக்குத் திரும்பியுள்ளார்.



முப்பத்தொன்பது வயதான குளூடியா மருத்துவத்துறையில் நரம்பியல் விஞ்ஞானத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர். கடந்த இரு தசாப்தங்களாக விண்வெளிப் பயணத்திற்கான ஆயத்தங்களை செய்து வந்தவர். இவரது விண்வெளிப் பயணத்திற்கு பிரெஞ்சு தேசிய வான் ஆராய்ச்சி நிறுவனம் ரஷ்யாவிற்கு 137 மில்லியன் அமெரிக்க டொலர் பணத்தை வழங்கி இவரது முயற்சிக்கு ஊக்கமளித்தது.

விண்வெளியில் குளூடியா தங்கியிருந்த காலத்தில் மனித உடலியற் கோட்பாட்டில் எடை கூடுவது குறைவது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார்.

ஆய்வுகளை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு பூமிக்குத் திரும்பிய இவருக்கு, பிரெஞ்சு மக்களின் சார்பில் மலர்க்கொத்து வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. தற்போது பிரெஞ்சு மக்களின் மனத்தில் ஒரு மங்காத நட்சத்திர அந்தஸ்தினை குளூடியா கொண்டுள்ளார்.


மேற்கு இலண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The BROADWAY, Southall, Middx.
T.P: 0181 / 813 9126
(ADV)

லண்டன் மாநகரில்
ஸ்ரீ லட்சுமி என்ரபிறைசஸ்
கன்னியர் முதல் சிறுவர் வரை
முதல் தர புடவை மாளிகை
SREE LAKSHMI ENTERPRISES
IMPORTER & EXPORTER, WHOLESALER & RETAILER
Large Collection of Wedding Sarees, Silk Sarees & Barathanatya Costumes
50 THE BROADWAY, SOUTHALL, MIDDLESEX, UB1 1QB
TEL: 0181-843 9495 / 01831-662 824
· FAX: 0181-606 9709
(ADV)

இலண்டனில் நகைத் தெரிவுகளுக்கு...
ராஜூ பட்னி அன் சன்
PATTNI HOUSE
58-60 EALING ROAD WEMBLEY, MIDDX HA0 4TQ
TEL: 0181-903 6677 / 2859, 0181-902 0577
FAX: 0181- 903 4887
(ADV)


27- 1996.09.12.jpg

# சாளரம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

புற நிலைகளின் பாதிப்பேயில்லாத மனித இருப்பு எங்காவது இருக்க முடியுமா? இல்லைத்தானே...! மறைந்த சித்தார் இசை மேதை ரவிசங்கர், பேராசிரியரின் இசை வாழ்வில் ஏற்படுத்திய பாதிப்பினை அறிய விரும்பினோம். மகிழ்வோடு கூறத் தொடங்கினார் பேராசிரியர்.

'நான் அவரின் இசையை நேசித்தேன்; அவரின் ஒவ்வொரு சிருஸ்டிப்பிலும் என்னைப் பதிவு செய்து கொண்டேன். அந்தப் பதிவுகளின் வெளிப்பாடே இன்றைய எனது இசையின் சிருஸ்டிப்பு.'

இவ்விடத்தில் பேராசிரியர் இசை மேதை ரவிசங்கருடனான தனது நாட்கள் பற்றியும் நினைவு கூர்ந்தார்.

அனூப்குமார் பனார்ஜியிடம் அவரின் குரு பேராசிரியர் லால்ஜீ சிறீவஸ்தவவின் பாதிப்புப்பற்றிக் கேட்டோம்

'கந்தர்வவேத இசைக்கும் எனக்குமிடையில் பாலமாக விளங்கியவர் தான் என் குரு. அவரின் முன் நான் பெற்ற பயிற்சியே இன்று என்னை வித்தியாசமாக சிருஸ்டிக்கவைக்கிறது. எல்லா மாணவர்களுக்கும் நல்ல ஆசிரியர்கள் கிடைப்பதில்லை; எல்லா ஆசிரியர்களுக்கும் நல்ல மாணவர்களும் கிடைப்பதில்லை. நான் அதிஷ்டசாலி!'

உலகம் இன்று மாற்றத்தினை வேண்டிநிற்கிறது. இந்த மாற்றமானது புதியனவற்றை வேண்டி ஒரு ஆரோக்கியமான சமூக வாழ்விற்கு வழிசமைப்பதாக இருக்கவேண்டும். அன்றும் இன்றும் இசையானது நடனம், நாடகம், சினிமா போன்ற துறைகளில் முக்கியவிடத்தினை வகிக்கிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த இசையென்னும் ஊடகத்தினை நுண்கலை Fine Arts என்பதிலிருந்து. பயன்கலையாக மாறவேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். பேராசிரியரிடம் அபிப்பிராயம் கேட்ட போது....!

"இந்த உலகில் எதுவுமே நிலையானதல்ல; எல்லாமே மாற்றத்தினை கண்டுவருகிறது. இசையென்பது ஒரு பயன்கலையாக இருக்க வேண்டுமாயின் அது அத்துறை சார்ந்தோரைப் பொறுத்தே அமைகிறது. நாங்கள் இசையை எப்படிப் பார்க்கிறோம்? எப்படி அணுகுகிறோம்? என்பதிலிருந்துதான் இதனை நாம் பார்க்க வேண்டும். கந்தர்வவேத இசையில் நாம் புதியனவற்றினைத் தேடுகிறோம்; அதனைப் பிரயோகிக்கிறோம். இது பக்திவழியைச் சார்ந்தது. இந்தப் பக்தி வழி நமக்கு சில நாகரிகங்களைக் கற்றுத் தருகிறது. நான் எதனையும் முற்பயிற்சி செய்து, பின்னர் இசைப்பதில்லை. அந்த விடத்தில், அந்தச் சூழலில் எனக்குள் பிறக்கின்ற உணர்வு, என் இசையை சிருஷ்டிக்கிறது. இவ் விடத்தில் நானடையும் திருப்தியும், ரசிகர்களடையும் திருப்தியும் அவரவருக்கு ஒரு அமைதி நிலையினை உருவாக்குகிறது. இந்த மன அமைதி என்பது வாழ்வில் முக்கியம்."

ஒவ்வொரு மனிதனது வாழ்விலும் மறக்க முடியாத கணங்களும், நிகழ்வுகளும் பல. இவர்கள் வாழ்வில் மறக்க முடியாத ஒரு நிகழ்வு பற்றிக் கேட்டோம்.

போராசிரியர் சற்று யோசித்துவிட்டு, எம்மைப் பார்த்து புன்முறுவல் செய்தார்.

"நிறையவே இருக்கின்றன. குறிப்பாக, 1960 காலப் பகுதியில் எனது தோற்றத்தினைப் பார்த்து என் திறமையில் நம்பிக்கை கொள்ளாத பலர், எனது இசையைக் கேட்டு வியப்படைந்த நிகழ்வுகளை என்னால் மறக்க முடிவதில்லை."

அனூப் குமார் பனார்ஜியை நோக்கினோம். வெட்கத்துடன் சிரித்துக்கொண்டு கூறத் தொடங்கினார்.

"எனது இசை வாழ்வின் தொடக்ககாலம் அது. அப்போது எனது குரு ஸ்ரீ சிறீராம் சிங். நான் மிகவும் துடிதுடிப்பாக இருந்த காலம் அது. ஒருநாள் வீட்டுப் பயிற்சியை செய்து முடிக்காமல் இசை வகுப்பிற்குச் சென்றிருந்தபோது எனது குரு தபேலாவுக்கு உபயோகிக்கும் சுத்தியலால் என் கையில் அடித்து என் விரல்கள் வீங்கியதை என்னால் மறக்க முடிவதில்லை. அந்த நிகழ்வுதான் இன்று எனது முன்னேற்றத்திற்கு காரணமாக இருக்கிறது."

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்வு சார்ந்த அனுபவங்கள் வித்தியாசமானவை. இவர்கள் இருவருடைய கந்தர்வவேத இசைக்கல்லூரியுடனான நாட்கள் பற்றிக் கேட்டோம்.

மிகவும் நல்ல நாட்கள்; நல்ல அனுபவங்கள் நிறைந்த ஆர்வமுள்ள, திறமையான மாணவர்கள். குறிப்பாக, நோர்வேஜிய மாணவர்கள் சித்தார், தபேலா, வயலின் போன்ற இசைகளை கற்றுவருவதில் காட்டும் ஆர்வத்தினைக் கண்டு வியந்தோம் என இருவரும் ஒருமித்துக் கூறினார்கள். கூடவே, மகரிஷி கந்தர்வவேத இசைக் கல்லூரி உலக அமைதி வேண்டி ஆற்றும் பணியை அனூப் குமார் பனார்ஜி பாராட்டினார்.

இசை என்பது அமைதிக்காக.; விறுவிறுப்புக்காக அல்ல. இது அனூப் குமார் பனார்ஜியின் வார்த்தைகள்.

விருப்பங்களும், தெரிவுகளும் ஒவ்வொரு தனிமனிதனையும் பொறுத்தது. இசைத்துறையைப் பொறுத்து, எங்களுக்கு புல்லாங்குழல் ஹரிபிரசாத் சௌராசியா (Hariprasad Chaurasia) வைப் பிடிக்கும்; வீணை சிட்டிபாபுவைப் பிடிக்கும்; சன்தூர் (Santoor) சிவ் குமார் சர்மா (Shiv Kumar Sharma) வைப் பிடிக்கும்; எல்லாவற்றிற்கும் மேலாக ஈழத்தின் இசைமேதை கண்ணனைப் பிடிக்கும்.

உங்களுக்கு...! எனக் கேட்டு அவர்களை நோக்கினோம்.

அப்பாடா... வாய்ப்பாட்டு (Vocal), சித்தார், தபேலா, வீணை, புல்லாங்குழல், நடனம் என ஒவ்வொரு பிரிவையும் சார்ந்த நிறையப் பெயர்களைச் சொன்னார்கள். ஒருவர், இருவரைத் தவிர மற்றவர்கள் எல்லோரும எமக்குப் புதியவர்கள். எல்லோருமே இந்தியாவின் புகழ்பெற்ற கலைஞர்களாம்.

நான் சின்மயனைப் பார்த்தேன். சின்மயன் அமைதியாகக் கண்ணை மூடி, மீண்டும் என்னை நோக்கி தலையை ஆட்டினார். நாங்கள் இன்னும் கற்றுக்குட்டிகள்தான், சொல்லாமற் சொல்லியது அவரின் பார்வை.

நேரம் போனதே தெரியவில்லை. நன்றி தெரிவித்து அவர்களிடமிருந்து விடைபெற்றுத் தெருவில் இறங்கி நடந்தோம். காற்று தன் கரங்களால் எம்மை அரவணைத்துச் சென்றது.

காற்றின் அரவணைப்பில், உள்ளார்ந்து எனக்குள் ஒரு ஆசை தோன்றிற்று. என்ன தெரியுமா? எப்படியாவது செப்டெம்பர் 8-ம் திகதி மாலை 7 மணிக்கு, பேர்கன் நகரிலுள்ள Troldhaugen, Troldsalen மண்டபத்தில் நடைபெறவிருககும் இவர்களின் இசை நிகழ்ச்சியினைப் பார்த்துவிட வேண்டும் என்பதுதான!

*"கீழைக் காற்று*
*சுழன்றடிக்குது.*
*ஆயிரம் காடுகள்*
*அடர்ந்து இருள்கின்றன.*
*போர் மூட்டம்*
*ஆகாயத்தை கண் மறைக்கிறது.*
*கலைஞனிடமிருந்து*
*புதிய வார்ப்புகளைக் கேட்கிறோம்!*
*அந்த வசந்தகால மலைகள்*
*ரத்த நிறத்தில் வரையப்படட்டும்!*

- லூ சூன்

தொகுப்பு: வர்மன்


## லிங்கம்ஸ் ஆசியன் மாக்கற்

**மலிவு விற்பனை 01.09.96 தொடக்கம் 31.09.96 வரை**



காதல் தேசம் CD 9.90Dm
மற்றும் மலிவு CDக்கள் (Pyrmid, Ramy) உட்பட6.50 முதல் 9.90 வரை
திரைப்படங்கள் மலிவு விலையில்
சிறுவர்களுக்கான USA பாட்ஷா கோட் சூட்
சிறுவர்களுக்கான USA சூட்
சிறுமிகளுக்கான USA சட்டைகள்
USA உடுப்புகள் எல்லாம் 20% தள்ளுபடி
காஞ்சிபுரம் பாவாடை சட்டை 30% தள்ளுபடி
மாபிள் பஞ்சாபிகள் 30% தள்ளுபடி
சிறுவர்களுக்கான சூட் 30% தள்ளுபடி

மங்கையர்களை மகிழ்வூட்டும் பட்டுப் புடவைகள், புதிய டிசைன் றங்கோளி சாறி, அபுர்வாசாறி, ராசுக்குட்டி சாறி, பனாறிஸ் சாறி எம்மிடம் உண்டு. புதிய டிசைன் பட்டர்பிளை சாறி பிளவுஸ் உடன் 23.90, இந்தியன் சேட் 26.90, சிங்கப்பூர் சேட் 29.90

யாழ்ப்பாணத்துக் கறிப்பவுடர் .............3.99DM
பலாப்பழ ரின் ....................................1.99DM
அமெரிக்கன் அரிசி 10Kg ..................22.50DM
பசுமதி அரிசி உடைசல் 20Kg ..........24.90DM
தரமான GH அரிசிமா .........................2.60DM
தரமான முத்துச்சம்பா அரிசி ............2.60DM
கோர்லிக்ஸ் பெரியது ..........................8.50DM
கோர்லிக்ஸ் சிறியது ...........................4.60DM

**LINKAMS ASIAN MARKET**

*Adler Str-5, 44137 Dortmund - Tel: 0231-143811*

# எதிரொலிகள் எதிரொலிகள் எதிரொலிகள்

## ஆசைத்தம்பியர் ஒழுங்காக எழுதினால் என்ன?

94110 ARCUEIL
FRANCE

ஆசிரியருக்கு

ஒவ்வொரு வாரமும் வெளியாகும் ஈழமுரசு பத்திரிகையில் ஆசைத்தம்பியின் யாருக்கு சொல்லி அழ என்ற கட்டுரை எல்லோராலும் விரும்பி படிக்கப் படுகிறது. இக் கட்டுரையின் மூலம் புலம் பெயர்ந்த தமிழர்கள் விடும் பல பிழைகளை சுட்டிக் காட்டுவதன் மூலம் பலர் திருத்தப் படுகிறார்கள். இது ஓர் புலம் பெயர்ந்த தமிழர்களின் சீர்திருத்த கட்டுரையாகவே அமைகிறது.

இக் கட்டுரை ஒரு ஒழுங்கு மயமாக அமையவில்லை லாச்சபலில் தொடங்கி திடீர் என்று சுவிஸ், இத்தாலிக்கும் இடையில் உள்ள தீவாகிய பிறிசங்கோ போய் பின் லாச்சப்பல் வந்து இப்பிழைகளை தவிர்த்து இக் கட்டுரையை தொடர்ந்து ஒரு ஒழுங்கு மயமாக பிறப்பிக்க வேண்டும் என்று அன்புடன் ஆசைத்தம்பியாரை கேட்டுக் கொள்கிறேன்.

M. ஜெயவேல்

## வவுனியா பழிய மாணவர் சங்கத்தின் விளக்கம்

லூசான்ட், சுவிஸ்
01.09.96

ஆசிரியர் அவர்கட்கு

08-14.08.96 ஈழமுரசு பத்திரிகையில் நண்டாரின் பகுதியில் வெளியாகிய தவறான தகவல்களின் அடிப்படையில் அமைந்த கருத்து சம்பந்தமாக எமது விளக்கத்தை தங்களுக்கு தெரியப் படுத்துகிறோம்.

தமிழ் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் வவுனியா மாவட்டம் பல ஆண்டுகளாக கல்வியிலும், பொருளாதாரத்திலும் பின்தங்கியுள்ளதை அறிவீர்கள். தற்போதைய போர்க்கால சூழ்நிலைகளால் இது மேலும் மோசமடைந்து வருவதையும் நடைமுறையில் காணலாம். இத்தகைய நிலைமைகளில் உள்ள வவுனியா மாவட்டத்தின் பின்தங்கிய பகுதி பாடசாலை, மாணவர்களின் அடிப்படைச் சிறு தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டும், மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு உதவும் முகமாகவும், சுவிஸ் வாழ் வவுனியா பகுதி பழைய மாணவர்களால் உருவாக்கப் பட்டதே வவுனியா கல்வி அபிவிருத்தி ஒன்றியம். எமது ஒன்றியம் எந்த ஒரு அரசியல் கட்சியுடனோ அல்லது விடுதலை அமைப்புக்களுடனோ சார்ந்து நிற்கவில்லை. நாம் அரசியலுக்கு அப்பாற்பட்ட அமைப்பாகவே செயல்பட்டு வருகிறோம்.

எமது உதவிகள் வவுனியா மாவட்டத்தின் சகல பின்தங்கிய பகுதிகளுக்கும் சென்றடைய வேண்டும் என்பதே எமது குறிக்கோள். அரச கட்டுப்பாட்டு பகுதி கட்டுப்பாடு இல்லாத பகுதி என நாம் பிரித்துப் பார்க்கவில்லை.

நன்றி

வவுனியா கல்வி அபிவிருத்தி ஒன்றியம்.
நிர்வாகசபை சார்பாக தலைவர்

## வக்கிரமாக உருமாறும் இளைஞன் சமுதாயம்

93420 Villepinte, France
12.08.96

அன்புள்ள ஆசிரியருக்கு

வணக்கம்

சில விடயங்களை யாருடனாவது பகிர்ந்து கொள்ளாவிட்டால் மனது ஆறுதலடையாது. உங்களுடன் பகிர்ந்த கொள்வது கூடியளவு ஆறுதலைத்தரலாம் என்பதால் இதை எழுதுகிறேன்.

பாரிஸில் தொலைபேசித் தொல்லைகள் பற்றி அறிந்திருப்பீர்கள். இது புதிய விடயமில்லைத்தான். ஆனால் சாவீடொன்றுக்குள்ளும் இப்படி ஒரு தொல்லை!

தயார் இறந்து ஒரு வாரம் தான். இன்னும் உடல் அடக்கம் பண்ணவில்லை.

உடல் வைத்தியசாலையில்.

சாவீடொன்றின் நிலையை கற்பனை பண்ணிப் பாருங்கள். நான் விபரிக்க வேண்டிய அவசியம் இல்லை. இப்படியான ஒரு சூழ்நிலையிலும் கூட இந்தத் தொலைபேசித் தொல்லை.

நேரம் நள்ளிரவு 12.30.

தொலைபேசி மணி அடிக்கிறது.

யாராவது அம்மாவின் செய்திகேட்டு அனுதாபம் தெரிவிக்க அடிக்கிறார்கள் என்று கலக்கத்துடன் அந்தயுவதி றிசீவரை கையிலெடுக்கிறார்.

'ஹலோ...'

மறுமுனையில் நீண்ட நேரம் மௌனம்.

யுவதி விம்முகிறார்.

மறுமுனையில் 'ஆ... ஆ.... க்ஆ... ம்... ம்.... ம்ஊ....' என விரசமான ஒலிகளைத் தொடர்ந்து

'அக்கா சனல் நாலில ஒருக்கா விட்டுப்பாருங்கோ சிலோன் நியூஸ் போய்க் கொண்டிருக்கு' என்றகுரல்.

யுவதி தொடர்ந்து விம்மிக்கொண்டிருக்கிறார்.

'அக்கா உங்கடை ரெலிபோன் நம்பர் செத்தவீட்டு நோட்டிசில தான் எடுத்தனான். நீங்கள் சனல் நாலைப் பாருங்கோ எல்லாம் சரியாப் போயிடும்'

தொடர்ந்தும் விசாரமான ஒலிகள் தொடர யுவதி விம்மி வெடித்தபடி றிஸீவரை வைக்கிறார்.

பாருங்கள் நிலைமையை!

இந்த தொலைபேசியில் விரசமாடி தங்கட ஆதங்கங்கள வடிச்சுவிடுகிற இளைஞர்கள் உண்மையில் பரிதாபத்துக்குரியவர்கள் தான்.

பாலியல் உணர்வு, கிளர்ச்சி இவைகளை வடித்துவிடுவதற்கு வேறு ஏதாவது அறிவு பூர்வமான வழிகளும் இந்த இளைஞர்களுக்குத் தெரிவதில்லை. யாரும் சொல்லிக் கொடுக்கவும் முன்வருவதில்லை அல்லது தெரிவதில்லை. இந்த விஷயத்தில் மட்டுமல்ல பல்வேறு விடயங்களிலும் கூட தங்கள் அறியாமையை வெளிப்படுத்துகிறார்கள். யாரும் இவர்கள் மேல் கோபித்துப்பலன் இல்லை. என்ன செய்வது... அவர்கள் நிலை பரிதாபத்துக்குரியது.

அதிலும் பாலியல் பிரச்சினை மிகவும் சிக்கலானது. அனுதாபத்துடன் நோக்க வேண்டியது.

ஆனால் சாவீடு ஒன்றுக்குள் இப்படி வடிகால் தேடுவது கொஞ்சமும் ஜீரணிக்க முடியாத விடயம்.

பெற்ற தாயையே புணரக்கூடிய காட்டுமிராண்டித் தனத்துக்கும் இவை போன்ற செயல்களுக்கும் வேறுபாடு கிடையாது.

என்ன? அவ்வளவுக்கு வக்கிரமாக எங்கள் சமூகம் உருமாறி கொண்டிருக்கிறதா?

ஓம்! என்ன பிரச்சினையாயினும் என்வீட்டுக் கதவைத் தட்டும்வரை அது எனக்கில்லைத்தானே!

நிம்மதியாக தூங்குவோம்.

சி.பாலசுப்பிரமணியம்

# முதலாம் ஆண்டு வீர அஞ்சலி

மண்ணிலே
மலர்வு:
11.05.1976

மண்ணுக்காக
உதிர்வு:
10.09.1995



கடற் கரும்புலி
கப்டன் அருள்ஜோதி

முத்துலிங்கம்
சியாமளா (தீபா)

வெள்ளத்தில் இறப்பது ஈரமரணம் - ஒரு
விபத்தில் இறப்பது கோர மரணம்
வெட்டுண்டு இரத்தத்தில் இறப்பது தீர மரணம்
நாட்டுக்காக ஓர் யுத்தத்தில் இறப்பது வீரமரணம்
ஆம் மகளே!
செருக்களத்திலே நீ சதைக் கொத்தாய் சிதறிப் போனாய்
அஞ்சலி செய்வதற்குக் கூட - உன்
ஆகுதி கிடைக்கவில்லையானாலும்
புலம்பாது இத் தாய் நெஞ்சம் - ஏனென்றால் நீ
விதைக்கப் பட்டுள்ளாய் மகளே மறுபடியும்
விருட்சமாய் புறப்பட்டுவரவே!

நீ நேசித்த தயகத்திலிருந்து
உன் தாய்.

29- 1996.09.12.jpg

ஈழமுரசு
Eelamurasu Weekly

# மாய மான்களும் மீண்ட சொர்க்கமும்

இராணுவ படைகள் மூலம் போரைநடத்தி அழிவு நடவடிக்கைகளை மேற் கொண்டும் தமிழீழப் பிராந்தியங்களையோ, தமிழ் மக்களின் மனங்களையோ வெல்ல முடியாத அரசு இப்போது பொய் பிரச்சாரத்தின் மூலம் அதனை வென்றெடுக்க முடியுமென நம்பத் தலைப்பட்டுள்ளது.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை மூலம் இலட்சக்கணக்கான மக்கள் யாழ் குடாநாட்டைவிட்டு வெளியேறிய போது அவர்கள் வாழ்வின் அடிப்படை வசதிகள் அனைத்தையும் பறிகொடுத்து விட்டு மரங்களின் கீழும் தெருக்களின் ஓரத்திலும் நோய்க் கொடுமையுடனும் பட்டினிச் சாவுடனும் போராடிக் கொண்டிருந்த போது, சிறீலங்காவின் மனிதாபிமானமற்ற அச் செயலை உலக நாடுகள் கண்டித்தன. ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பூட்ரோஸ் பூட்ரோஸ் காலி சிறீலங்கா அரசின் இம் மனித உரிமை மீறலை கண்டித்த போது, அவருக்கு சிறீலங்காவின் உண்மை நிலவரம் தெரியாது உளறுகிறார் என வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அறிக்கை விட்டதும் நமக்கெல்லாம் தெரிந்துதான்.

சந்திரிகா அரசின் சமாதான வேடத்தை நம்பிவழிமொழிந்த வெளிநாடுகளே படிப்படியாக சிறீலங்கா அரசின் கபடத்தனத்தை புரிந்து கொண்டு அழுத்தங்கள் பிரயோகிக்கத் தொடங்கிவிட்டனர். இந்த அழுத்தங்களில் இருந்த மீள்வதற்காகவும் தொடர்ந்தும் தமிழினப் படுகொலையை மேற்கொள்வதற்காகவும் மாற்றுவழி தேடிய சிறீலங்கா அரசு தற்போது பிரச்சார யுத்தத்தை ஆரம்பித்துள்ளது.

20 மில்லியன் ரூபாவை ஒதுக்கி ஆரம்பிக்கப்பட்ட இப்பிரசார நடவடிக்கையானது, சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கான பிரச்சாரமாகவும், வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர்வதற்கான பிரச்சாரமாகவும் அது அமையும் எனக் குறிப்பிட்டிருந்தாலும், அடிப்படையில் போராட்டத்துக்கு எதிரான ஒரு பிரச்சாரத்தை மேற்கொள்வதையே நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றதென்பதே உண்மை நிலவரமாக உள்ளது.

இரண்டு ஆண்டுகால பதவிக்காலத்தை நிறைவு செய்த பின்னரும் எந்தவிதமான உருப்படியான தீர்வுத் திட்டத்தையும் இதுவரை முன்வைக்காத இந்த அரசாங்கம், தாம் ஒரு நிரந்தரமான சமாதானத் திட்டத்தை முன்வைக்கத் தயாரா இருப்பதாகவும் அதனை விடுதலைப் புலிகளே ஏற்காமல் இருப்பதாகவும் தமது பிரசாரத்தை முடுக்கிவிட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாவே இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் உள்ள தமிழ் மக்கள் அடிப்படை உதவிகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதுடன் அவர்கள் ஒரு மகிழ்வான சுபிட்சமான வாழ்க்கையை நடத்துவதாக வெளி உலகத்துக்கு அறிவிக்க தனது பிரச்சார இயந்திரத்தினை முடுக்கிவிட்டுள்ளது. ஆனால் யாழ் குடாநாட்டு மக்களின் நிலை என்ன என்பது தெரியாதல்ல. வீட்டைவிட்டு வளவுக்கு வருவதற்குக்கூட சிறீலங்கா இராணுவத்தின் அனுமதி கோரவேண்டிய நிலை; வன்னிக் காட்டுப் பகுதியில் எந்த உதவியும் இல்லாமல் நிராதரவாக இருக்கும் மக்களைவிட மிகமோசமான துயரங்களைச் சுமந்தபடி, வெளி உலகத் தொடர்பு துண்டிக்கப்பட்டு முடக்கப்பட்டுள்ளதே உண்மைநிலை.

இந்த உண்மைகளை தனது அடக்குமுறைக் கரங்கொண்டு மறைக்கின்ற அரசு, நிதர்சனமான உண்மைகளுக்கு மாறாக தனது சக்திவாய்ந்த தொடர்பு சாதனங்கள் மூலமும், பிரச்சாரத்துக்காக பெருந்தொகை பணத்தை செலவிடுவதன் மூலமும், யாழ் குடாநாடு ஒரு சொர்க்கமாக திகழ்வதாக வலியுறுத்தி நம்பவைக்க முனைகிறது. இந்த நடவடிக்கைக்கு சமூக அந்தஸ்து வாய்ந்த சில பிரமுகர்களையும், கல்விமான்களையும் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது. இவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களையும் அந்நாட்டு அரச பிரதிநிதிகளையும் வேறுபல சமூகசேவை அமைப்புக்களையும் சந்தித்து 'யாழ்ப்பாணத்தில் மீண்டும் சொர்க்கம்' என்ற அரசு தயாரித்த நாடகத்தை இவர்கள் மூலம் ஆங்காங்கு அரங்கேற்ற முயற்சித்து வருகின்றது. இந் நாடகத்தின் பல்வேறு காட்சிகளை புலம்பெயர்ந்த நாடுகளில் அவ்வப்போது காணக்கூடியதாக உள்ளது.

யாழ்பாணத்தில் உண்மையில் என்ன நடக்கின்றது என்பதை சரிவர அறியாமல் தடுமாறிக் கொண்டிருப்பவர்கள் இந்த மாயமான்கள் விரிக்கும் வலைகளுக்குள் சிக்கிவிழுந்துவிடும் அபாயம் உள்ளது. ஆகவே உண்மை எது பொய் எது என்பதை நாம் நுணுக்கமாக ஆராய்ந்து இனங்காணுவதுடன் கண்ணுக்குத் தெரியாத அந்த மாயவலைக்குள் விழுந்துவிடாமல் இருக்க வேண்டிய பொறுப்பும் புலம்பெயர்ந்து வாழும் தமிழீ மக்களாகிய எமக்கு உண்டு.

# புலிகளுக்குத் தடை அரசின் யோசனை குறித்து அமெரிக்கத் தூதுவர் தமிழ் குழுக்களுடன் ஆலோசனை

(கொழும்பு)

சிறீலங்கா அரசு புலிகளைத் தடை செய்வது தொடர்பாக ஆலோசனை நடாத்திவரும் நேரத்தில் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் பீட்டர் பேர்ளின், கொழும்புத் தமிழ் குழுக்களை அழைத்து அது தொடர்பான அவர்களின் அபிப்பிராயத்தை கேட்டறிந்ததாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

கடந்த வாரம் சிறீலங்கா அரசு விடுதலைப் புலிகளை தடைசெய்யும் விவகாரம் தொடர்பாக தீவிரமாக ஆராய்ந்து வந்தபோது வாஷிங்டன் நிர்வாகம் கொடுத்த ஆலோசனையின் பெயரிலேயே அந்த ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், சிறீலங்காவில் அரசு புலிகளை தடை செய்தால் அமெரிக்காவில் அவர்களது செயற்பாடுகளை தடை செய்ய தாம் நடவடிக்கை எடுப்போம் என்று அமெரிக்க அதிகாரிகள் கொடுத்த உறுதிமொழியின் பேரிலேயே சந்திரிகா அரசாங்கம் இந்த முயற்சியில் இறங்கியதாக கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்த நிலையில் கடந்த 03.09.96 செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் EPRLF, PLOT, EPDP, TELO சங்கர் ராஜியின் EROS ஆகிய தமிழ் குழுக்களை தமது அலுவலகத்திற்கு அழைத்து இது தொடர்பான அவர்களது அபிப்ராயங்களை கேட்டுத் தெரிந்து கொண்டதாக சொல்லப்படுகின்றது.

இந்தச் சந்திப்பின் போது இனப் பிரச்சனைத் தீர்வுக்கு அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வுத் திட்டம் தொடர்பாகவும் ஆலோசிக்கப் பட்டதாகவும் புலிகளை தடை செய்யும் கோரிக்கைக்கு EPDP ஐ தவிர மற்றக் குழுக்கள் எதிர்புத் தெரிவித்ததாகவும் கொழும்புச் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

## ஷெல் வீச்சுக்குப் பலியானவரின் சடலம் வயலில் மீட்பு

சித்தாண்டியைச் சேர்ந்த கந்தையா கனகன் என்ற 60 வயது விவசாயியின் சடலம் உருக்குலைந்த நிலையில் கடந்த வாரம் வயல் வெளியில் கண்டு பிடிககபபடடுளளது.

கடந்த 02.09.96 திங்கட்கிழமை வயலுக்குச் சென்ற இவர் மீண்டும் வீட்டிற்குத் திரும்பி வராததையடுத்து இவரது உறவினர்கள் தேடிச் சென்ற போதே அவரது சடலம் வயல் வெளியில் அநாதரவாகக் கிடந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் சிறீலங்கா படையினரின் ஷெல் வீச்சினால் கொல்லப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# தமிழர்களை பயங்கரவாதிகளாக காட்ட அரசு முயல்கிறது

(கொழும்பு)

அரசாங்கம் தமிழர்களை பயங்கரவாதிகளாகக் காட்ட முயற்சிக்கிறது. இந்த நாட்டில் தமிழர்கள் மட்டும்தான் பயங்கரவாதிகளா? சிங்களவர்களுக்கு பயங்கரவாதத்தில் தொடர்பு ஏதும் இல்லையா என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் இராசரட்ணம் சிறீலங்காப் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

டென்சில் கொப்பேகடுவா, லலித் அத்துலத்முதலி ஆகியோரின் கொலைகளுக்குப் பின்னணியில் புலிகள் இருந்ததாக பாதுகாப்பு அமைச்சு முன்பு கூறியது. இதன் காரணமாக பீதிக்கும் அச்சுறுத்தலுக்கும் உள்ளானார்கள். ஆனால் இன்று இந்தக் கொலைகளின் பின்னணியில் சிங்களவர்களே இருந்ததாக செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

தற்போது தெஹிவளை ரயில் குண்டு வெடிப்பு பின்னணியில் லோகநாதன் என்ற தமிழ் இளைஞரை சம்பந்தப்படுத்தி செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. முன்பு ரகுநாதன் என்பவர் பற்றியும் அவரே லலித்தைக் கொன்றவர் என்றும் சொல்லப்பட்டது. இப்போது அதன் பின்னணியில் புலிகள் இல்லை சிங்களவர்களே இருந்ததாக தெரிவிக்கப் படுகிறது. இத்தகைய நிலைதான் தற்போது கைது செய்யப்பட்டிருக்கும் லோகநாதன் விடயத்திலும் நடைபெறுமோ தெரியாது.

பயங்கரவாதம் என்பது தமிழர்கள் மட்டும் ஈடுபாடு கொண்ட சம்பவம் அல்ல. பெரும் பான்மை இனத்தவர்களுக்கும் அதில் பங்குண்டு. ஒரு இனத்தை அடிமையாக வைத்துக் கொண்டு ஜனநாயகத்தை முன்னெடுத்துச் 'செல்ல முடியாது. என்று அவர் அங்கு பேசியபோது குறிப்பிட்டார்.

## யாழ் செல்லும் அகதிகள்

வவுனியாவிலிருந்து யாழ்பபாணம் செல்ல விரும்பிய 270 அகதிகள் விசேட புகையிரத மூலமாக திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் இவ்வார இறுதியில் கப்பல் மூலம் காங்கேசனுக்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்கிருந்து அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப் படுவார்கள் எனச் சொல்லப்படுகிறது.

வவுனியாச் செயலகத்தில் யாழ் செல்ல விருப்பம் தெரிவித்துப் பதிவு செய்யப் பட்டவர்களே இவ்வாறு அனுப்பி வைக்கப் பட்டதாக வவுனியா அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

# தொலைபேசிகள் ஒட்டுக் கேட்பதற்கு தமிழ் குழுக்கள் ஆதரவு

(கொழும்பு)

சிறீலங்காவில் முக்கியமான அரசியல்வாதிகள், பிரமுகர்கள் பத்திரிகையாளர்கள், வர்தகர்கள் ஆகியோர்து தொலைபேசிகள் ஆட்சியாளர்களால் ஒட்டுக்கேட்கப் படுவதாக புகார் கிளம்பியதையடுத்து எதிர்ககட்சியான ஐ.தே.கட்சி சிறீலங்கா பாராளுமன்றத்தில் அதைத் தடைசெய்யக் கோரி சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவந்தது. இந்தச் சட்டமூலத்திற்கு ஆளும் கட்சியுடன் சேர்ந்து கொழும்புத் தமிழ் குழுக்களும் எதிர்த்து வாக்களித்துள்ளன.

இது குறித்து ஐ.தே.கட்சி கண்டிப் பாரதளுமன்ற உறுப்பினர் சரத்ஹேரங்கசே பாராளுமன்றத்தில் பெசுகையில் மனித உரிமைகள் மீறப்படுவதாகவும், தமத இனத்தின் உரிமைக்காகப் போராடுவதாகவும் கூறிக்கொள்ளும் தமிழ கட்சிகள் இத் திருத்தத்தை எதிர்ததலை குறித்து கவலைப்படுகிறேன் என்றார்.

## வன்னியில் 2 போராளிகள் வீரமரணம்

வன்னிப் பெருநிலப்பரப்பில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் 2வது லெப்டினன்ட் தமிழ்ரூபன் (யோகநாதன் நாமகரன், யாழ்ப்பாணம்), 2வது லெப்டினன்ட் சிவகீர்த்தி (தெய்வேந்திரன், ரகுநாதன், திருமலை) ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

# 31ம் நாள் நினைவாஞ்சலி

## கப்டன் தமிழ் நெஞ்சன்
## விஸ்வலிங்கம் கமலநாதன்

13.08.96 அன்று மணலாற்றில் நடந்த நேரடி மோதலில் வீரச்சாவடைந்துள்ளார்.

*பெற்றோருக்கும் உற்றார்க்கும் கமலனாய் வாழ்ந்து வேங்கைகள் அணியில்*
*தமிழ் நெஞ்சனாய் வாழ்ந்து எதிரியின் குகைக்குள் தேடிப் புகுந்து நேரடியாகப்*
*போரிட்டு வரலாறு படைத்து மாவீரர் ஆகிவிட்டாய்*
*மக்கள் மனங்களில் என்றும் நிலைத்து நிற்பாய்*
*சோகத்தால் சொக்கிப்போய் சொல்லுமொழி ஏதுமின்றி உன் செல்லமொழி தேடி*
*நிற்கும் சகோதரரைப் பாராயோ*

பாசத்தால் துடிக்கும் அண்ணன் வி.பத்மநாதன் அண்ணி
குழந்தைகள் ஜீவ சாந்தினி, கிஷோர், கார்த்திகா, தர்மிகா

மேலதிக தொடர்புகட்கு
0794161145 - சுவிஸ்

(ADV)

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## ஆனந்தகுமார் வையாபுரி (ஆனந்தன்)

4ம் வருட பொறியியல் பீடம் ஒட்டாவா பல்கலைக்கழகம் கனடா.

(வீரமாணிக்கன் தேவன்துறை, மயிலிட்டி, காங்கேசன்துறை தமிழீழம்.)

தாயின் மடியில் 17.05.73

தமிழ் அன்னையின் மடியில் 16.08.96

கண்ணகியாள் தந்த களஞ்சியம் காற்றாகிப் போனதென்ன!
அன்னையவள் இசைந்தாளோ எமைவிட்டு உனை கூட்டிச்செல்ல!
எல்லோரும் தூயில்கையிலே நீ மட்டும் தனியாக நீண்ட பயணம் போனதெங்கே.
பெற்றோர்கள் துடிதுடிக்க, உடன் பிறந்தோர் துவண்டுவிழ, அக்காள்மார் அதிர்ந்து விழ, அண்ணிமார் அலறி விழ,
பெறா மக்கள் பொருமியழ, மருமக்கள் மயங்கிவிழ, நீ மட்டும் தனியாக ஒடித்தான் மறைந்ததெங்கே.
தமிழ்த்தாய் விடுதலைக்காய் நீ செய்த சேவைகளைக் கண்டு அகம் மகிழ்ந்த உன் இனிய தோழர்கள், கனடா வாழ்
தமிழ் மக்கள் ஏங்கித்தான் தவிக்கிறார் உன் இழப்பைத் தாங்க முடியாமல்.
கல்வியில் ஓர் வித்தகனாய் கணணிப் பொறியியலில் வல்லுனராய் ஏற்றந்தான் பெற்றாயே ஐயா!
'தமிழே' உன் மூச்சாய், தமிழினமே உன் உயிராய், தமிழீழ விடுதலைக்காய் அரும்பாடு பட்டாயே.
'கணனி பொறி' திட்டத்தால் எதிரிகளை வீழ்த்தி விட எண்ணம்பல கொண்டிருந்தாய்.
'தமிழின் தேசியத்தலைவரைக்' கண்டு உன் தாகம் தணிப்பதற்காய் காத்திருந்தாய்
உன்தாகம் தணியுமுன்னே உன்சேவை போதுமென்றோ
காலன்தான் சதிசெய்து உனை கவர்ந்து சென்றானோ.
'தமிழ்த்தாய் மண்ணுக்காய்' பிறந்த மகன் நீ என்று ஆறத்தான் முடியவில்லை.
பாசத்தின் வலைதனில் சிக்கித்தான் தவிப்பதனால்
'என்நோற்றான் கொல்' என்று பெருமை தந்த செல்வமே நீ
நோயென்று படுத்தாயில்லை நொந்துதான் போனாயில்லை
உனக்கு வந்த விதிதானென்ன விளங்கவில்லை ஐயா எமக்கு
அனலிடை புழுவானோம், நெருப்பிடை மெழுகாய் நாம் உருக்குலைந்து போகிறோம்
விதியென்று சொல்வதற்கு இது நீதியில்லை ஐயா!
காலன் இட்ட சதியினால் மானிடர் நாங்கள் இங்கு மறுகி மறுகி சாகிறோம்.
ஆழ்கடலும் வற்றலாம், வானமும் தான் மறையலாம், எம் துயரோ மறையாது ஐயா உமை காணும்வரை
தீராத தாகத்தால் உனை வலிந்து அழைத்துச் சென்றதனால் உன் தாகம் தணிப்பதற்காய்
நிச்சயமாய் நீ வருவாய் மீண்டும் நீ எம்மிடமே

உன் வரவுக்காய் காத்திருக்கும்
உன் ஐயா, அம்மா, பெரியண்ணா, பெரியக்கா, சின்னக்கா, சின்னண்ணா, குமாரண்ணா, அருமை தங்கை, அருமை தம்பி, பெரியத்தான், சின்னத்தான், பெரியண்ணி, சின்னண்ணி, பெறாமக்கள், மருமக்கள்.

*இச் செய்திகளைக் கேட்டு நேரடியாகவும் கடிதமூலமும் தொலைபேசி மூலமும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்க்கும் ஆறுதல் கூறியவர்களுக்கும் நன்றிகள்.*

*அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் 15.09.96 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் ஸ்காபுரோவில் (கனடா) உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம். அத்தருணத்தில் அனைவரும் கலந்து அவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.*

தகவல்
ஐ.அமிர்தலிங்கம்
73, Muirkirk Road, Catford London, SE6,1BJ
Tel: 0181 47 39 627

சுப்பிரமணியம் வையாபுரி
United Square, Scarborough, Ontario
Mib: 2B9 CANADA
Tel: 416 28 79 391 / 416 28 79 852

(ADV)

**சென்ற 27ம் திகதியன்று மணலாற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலிலும், முல்லைப் பெருஞ்சமரில் காயமடைந்து பின்னர் வீரமரணமடைந்த போராளிகளின் விபரம் வருமாறு:**

கப்டன். சஞ்ஜெயன் / இசைவாணன் (கணைமுத்து இளங்குமரன், அராலி மேற்கு வட்டுக்கோட்டை)

கப்டன் ராஜசிங்கம் / பாபு (மாணிக்கப்போடி ஜீவானந்தம், மட்டக்களப்பு)

வீரவேங்கை ராவணன் (மாணிக்கம் மகேந்திரன், புத்தூர்)

முல்லைப் பெருஞ்சமரில் காயமடைந்து பின்னர் வீரமரணமடைந்த பத்துப் போராளிகள்:

1. மேஜர் வளவன் (சபாரட்ணம் சிறீஸ்கந்தராஜா (ராசம்மா), ஜெயந்திநகர், கிளிநொச்சி)

2. இரண்டாம் லெப்டினன்ட் வரதராஜன் (இளையவர் நிமலேந்திரன் (சூட்டி), மட்டக்களப்பு)

3. இரண்டாம் லெப்டினட் சபேசன் (செல்வராஜா சத்தீசன், வவுனியா - த.மு. சாவகச்சேரி)

4. வீரவேங்கை கலைமோகன் (முருகன் ரமேஷ்குமார், பரந்தன் - த/மு. மட்டுவில்)

5. வீரவேங்கை முத்து செல்வன் (செல்வராஜா சிவகுமார், கோண்டாவில் மேற்கு)

6. வீரவேங்கை குருவேலன் (சுப்பிரமணியம் லக்ஷ்மணன், வசாவிளான்)

7. வீரவேங்கை இனியவன் (கனகரத்தினம் செல்வகுகன் தெல்லிப்பளை - த/மு மல்லாகம்)

9. வீரவேங்கை தமிழ் மகன் (தர்மலிங்கம் சந்திரட்ணம், பன்குளம் திருமலை - த/மு செல்லக்கிளி, அம்மான் குடியேற்றத்திட்டம்)

10. வீரவேங்கை கமலன் (சதாசிவம் திருச்செல்வன் திருமலை - த/மு. செல்லக்கிளி அம்மான் குடியேற்றத்திட்டம்)

இம் மாதம் 1ம் திகதி முல்லை மாவட்டத்தில் சிறிலங்கா படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த போராளிகள்:

1. கணேஷ் கௌரி (குளப்பிட்டி ஆனைக்கோட்டை)

2. அல்போன்ஸ் சசிஸ்டா (யாழ் நகர் தண்ணீர் தாங்கிபடி)

3. நிலாமதி (கொண்டையன் சாந்தி, திருமலை - த/மு. சுதந்திரபுரம், உடையார்கட்டு)

த/மு. = தற்போதைய முகவரி

# இடிதாக்கி இருவர் பலி

மட்டக்களப்பு நகரத்திலுள்ள திருப்பெருந்துறை கிராமத்தில் கடந்த புதன்கிழமை 04.09.96 அன்று இடி தாக்கியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் பலியாகியுள்ளார்கள்.

நாகலிங்கம் என்பவரது மனைவியும் (50), அவரது 15 வயதுடைய பேரனுமே பலியாகியுள்ளனர். நாகலிங்கம் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

# மூன்று போரராளிகள் வீரமரணம்

கடந்த 02.09.96 திங்கள்கிழமை சித்தாண்டியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் கப்டன் சுகுமார் (நடராஜா முரளீதரன் - அம்பாறை), 2வது லெப்டினன் லோகநாதன் (வீரப்போடி ஜெயசுந்தரம் - அம்பாறை), வீரவேங்கை நம்பி (அம்பாறை) ஆகிய மூன்று போராளிகள் வீரமணம் அடைந்துள்ளனர்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழகத்துக்கு....

பின்பு அவ்வாறு அகதிகள் அங்கு செல்வதை தான் எந்தக் கரணத்தைக் கொண்டும் தடுக்க மாட்டேன் என்று சிறிலங்கா பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை கூறியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## வில்பத்து....

தாக்குதலுக்கு உள்ளாகியது. இதில் ஒரு இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டு ஒருவர் காயமடைந்துள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைச் செயலகத்தின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.


## ஈழமுரசு சந்தா விண்ணப்பப் படிவம்

பெயர்: ................................................

முகவரி: ................................................

................................................

தொலை பேசி எண்: ................................................

பிரான்சுக்கான சந்தா (தபாற் செலவுடன்)

6 மாதம் → 250 பிரெஞ்சு பிராங் ☐

12 மாதம் → 500 பிரெஞ்சு பிராங் ☐

பிரான்ஸ் தவிர்ந்த ஏனைய நாடுகளுக்கான சந்தா (தபாற் செலவுடன்)

6 மாதம் → 270 பிரெஞ்சு பிராங் ☐

12 மாதம் → 540 பிரெஞ்சு பிராங் ☐

*காசுக்கட்டளை, காசோலையை, 'ஈழமுரசு' என்ற பெயருக்கு அனுப்பவும்.*

*நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:*

"EELAMURASU"

22, Rue Perdonnet, 75010 Paris.

TEL: 40 37 63 63 / FAX: 40 37 64 64



உங்கள் சகலவிதமான அச்சுத்தேவைகளையும் பூர்த்திசெய்ய

தமிழ் அச்சகம்

60, Rue Louis Blanc,
75010 Paris.
Metro: La Chapelle
Tel: 42 09 60 64


# 7ம் ஆண்டு நினைவாஞ்சலி

மலர்வு 16.10.1946



உதிர்வு 31.08.1989

## திருமதி சூசை அல்பேட் எட்வீனம்மா

இன்பமான வாழ்கை வாழ்ந்து
இறைவனின் பாதத்தில்
இரண்டறக் கலந்த
எமது குடும்பத் தலைவியே
இல்லையென்று சொல்லாது
இன்முகத்துடன் இனியவை செய்து
தாய்க்குத் தயாய், சேய்க்குச் சேயாய்
பத்தாவுக்குப் பத்தினியாய்
உடன் பிறந்தாருக்கு உடலாய்
நாட்டிற்கு நல் மேய்ப்பனாய்

மொத்தத்தில் தெய்வமாய் திகழ்ந்து
உங்களை உருக்கி எங்களை
ஆளாக்கிய அம்மா
எம்மனைவரையும் விட்டகன்று
ஏழாண்டுகள்
ஓடி மறைந்தாலும்
என்றும் உம் நினைவில்
வாழுகின்றோம் அம்மா.
உம் ஆன்ம சாந்திக்காய் தினம்
இறைவனை வேண்டுகின்றோம் அம்மா.

வேண்டுகோள்: அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக வேண்டி 15.09.96 ஞாயிற்றுக்கிழமை பகல் 02.45 மணிக்கு புனித மாக்கிறற் மரிதேவாலயத்தில் திருப்பலி பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

Eglise Sainte Marguerite,
8, Rue de la Cascade, Le Perreux Sur Marine.

அன்னாரது பிரிவால் துயருறும் தாய், கணவன், மகன்மார், மகள்மார், அண்ணன்மார், தம்பிமார், தங்கைமார், மச்சான்மார், மச்சிமார், மருமக்கள்மார், உற்றார் உறவினர்.

தகவல்: அன்புமொழி (பிரான்ஸ்) 43 24 84 47.

# 45ம் நாள் நினைவாஞ்சலி

அன்னை மடியில் 25-12-1975



மண்ணின் மடியில் 04-08-1996

## வீரவேங்கை திருமாறன்

தெய்வேந்திரம் பகீரதன் (பாபு)

வைத்தீஸ்வரா வித்தியாலய பழைய மாணவன்

உன்பிரிவால் வாடும் அன்புள்ள அப்பா, அம்மா, அண்ணாமார், அக்காமார், அத்தான்மார், அண்ணி, மகன், மருமக்கள் மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள்.

ஓட்டுமடம்
யாழ்ப்பாணம், தமிழீழம்.

தகவல் தெ.சிறிதரன்
தொலைபேசி இல: 021 729 0353 (சுவிஸ்)


விற்பனைக்கு

நல்ல நிலையில் இயங்கி வரும் இந் நிலையம் விற்பனைக்குண்டு

SATINTER Telephone International Call Back

62 Rue Louis Blanc, 75010 Paris.

M°: La Chapelle ou Gare du Nord ou Louis Blanc

Tel: 46 07 47 56 / Fax: 46 07 45 76 (நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம்)

தினந்தோறும் காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை - பதிவு இலக்கம்: R.C.S. N°: Paris B 403506470


31- 1996.09.12.jpg

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 40 37 63 63
Fax: 40 37 64 64

உங்கள் தேவையறிந்து எங்களின் சேவை
Kumars Shop S. A. R. L.
80, Bld. Barbes, 75018 Paris.
M°: Marcadet Poissonniers
Tél: 42 59 35 10
Fax: 42 59 35 00
K.T.C. Jewels
193, Rue du Fg. S'.Denis,
75010 Paris.
M°: Gare du Nord / La Chapelle
Tél: 42 05 41 36

குமாரர்ஸ்
Kumars Jewels S.A.R.L.
80, Bld. Barbes,
75018 Paris.
M°: Marcadet Poissonniers
Tél: 42 59 11 52
Fax: 42 59 35 00

# டிசம்பருக்கு முன்னர் போர் முடியலாம்

## ரத்வத்தை

யாழ்ப்பாணத்தை ஒரு பகுதி நிலப்பரப்பு என்பதைவிட அரச படைகள் கைப்பற்ற முன்னர் அங்கிருந்த நிலையே வேறு. முன்னைய அரசு ஒரு நாட்டையே புலிகளிடம் ஒப்படைத்திருந்தார்கள். அந்த நிலை தொடர்ந்திருந்தால் விடுதலைப் புலிகள் அங்கு ஒரு இராட்சியத்தை நிறுவியிருப்பார்கள் என சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியொன்றின்போது தெரிவித்துள்ளார்.

மேலும், குறிப்பிட்ட நாளுக்குள் யுத்தத்தை நீங்கள் முடிவுக்குக் கொண்டுவந்து விடுவீர்கள் என முன்னர் தெருவித்திருந்தீர்கள். இன்னமும் முடியவில்லையே. திகதி குறித்து யுத்தம் நடாத்த முடியுமா எனக் கேட்ட போது, சென்ற சிங்கள வருடப்பிறப்புக்கு முன்னர் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்துவிடுவதாக நான் ஒருநாளும் சொன்னதில்லை. ஆனால், அக் காலத்தில் யுத்தத்தில் பெரும்பகுதி முடிவுக்கு வந்துவிடும் எனக் கூறியிருந்தேன். அது தான் நடந்து கொண்டிருக்கிறது. இப்போதெல்லாம் நாம் சத்தம் போடாமல் மறைவிலிருந்தே வேலை செய்கிறோம்.

நாட்குறித்து சண்டை செய்வதானால் அப்படியும் ஒரு முறை உண்டு. அந்த முறையின்படி சண்டையை நடாத்தினால் 24 மணி நேரத்தினுள் சண்டையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். ஆனால் அது முடியாது. நாங்கள் இதுவரை யுத்தத்தில் வெற்றிபெற்றே வந்திருக்கிறோம்.

ஜனாதிபதி சந்திரிகா எதிர் வரும் டிசம்பர் மாதத்துக்கு முன்னர் இந்த யுத்தம் முடிவடைந்து விடும் எனக் கூறியுள்ளார். ஆனால் அதற்கு முன்னதாகவே இது முடிந்தாலும் முடியும் என ரத்வத்தை மேலும் அப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

## தமிழர்கள் சிங்களவர்களாக மாறுவதால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாம் - அரச எம்.பி

சில தமிழர்கள் தங்கள் பெயர்களை சிங்களப் பெயர்களாக மாற்றிக் கொண்டு அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதால் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறதென்று கம்பஹா அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர் ஜினதாசா நந்தசேனா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் பேசிய அவர், வைபாபுரி கணேஷ் என்பவர் தனது பெயரை காமினி கமகே என்றும், கிருஷ்ணகுமார் என்பவர் லொக்குகே என்றும் பெயர்களை மாற்றியுள்ளனர். கிராமசேவகர்கள் பணம் வாங்கிக் கொண்டு இத்தகைய பெயர் மாற்றத்திற்கு சத்தியக் கடதாசி வழங்கிவருகின்றார்கள். இது பாதுகாப்புக்கும் குந்தகமாக அமைகிறது. புலிகளும் இம் மாதிரிச் செய்யக்கூடும் இதையிட்டு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று கூறியுள்ளார்.

## தமிழகத்துக்கு செல்லமுயன்ற 24 அகதிகள் மன்னாரில் கைது

(கொழும்பு)

மன்னார் மாவட்டம் பேசாலையிலிருந்து தமிழகத்திற்கு அகதிகளாகச் செல்ல படகுக்காக காத்திருந்த 24 மன்னார் வாசிகள் சிறீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 29.08.96 வியாழக்கிழமை இரவு பேசாலைக் கடற்கரையோரத்தில் இவர்கள் படகுக்கு காத்திருந்த போது அங்கு ரோந்து வந்த இராணுவத்தினர் இவர்களை மடக்கிப் பிடித்து தள்ளாடி இராணுவ முகாமிற்கு கொண்டு சென்று அடைத்து வைத்துள்ளனர். இவ்வாறு கைதானவர்களில் ஒரே குடும்பங்களைச் சேர்ந்த ஆண்கள்,பெண்கள், குழந்தைகள் அடங்கியிருந்ததாக சொல்லப்படுகிறது.

அண்மையில் தமிழகத்திற்கு அகதிகள் செல்லத் தொடங்கிய

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## சிறீலங்கவில் சிங்களக் கட்சிகள் மோதல்

(கொழும்பு)

சிறீலங்காவின் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தனது 50 வது ஆண்டு நிறைவை கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்திருந்த கூட்டங்களைக் குழப்புவதற்கு ஆளும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசு குண்டர் படையை அனுப்பியதாக ஐ. தே. கட்சித் தலைவர்கள் குற்றம்சாட்டி வருகிறார்கள்.

இதை நிரூபிக்கும் விதத்தில் கடந்த சில தினங்களாக ஐ.தே.கட்சியின் பல கூட்டங்கள் குழப்பப் பட்டு வந்தன. பொலிசார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் துப்பாக்கிப் பிரயோகங்களைச் செய்தும் இக் கூட்டங்களை குழப்பிவந்தனர். இதன் பின்னணியில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை இருந்திருக்கலாம் என்று கொழும்பில் ஒரு ஊகம் அடிபடுகிறது.

இந்த மோதல்களில் உச்சக்கட்டமாக கடந்த வாரம் கட்டுநாயக்காவுக்கு அண்மையிலுள்ள குரான என்ற இடத்தில் ஐ.தே.கட்சி ஆதரவாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். பலர் படுகாயமடைந்தனர். ஐ.தே.கட்சியினர் தமது 50 வது ஆண்டு நிறைவுப் போஸ்டர்களை ஒட்டிக் கொண்டிருந்த போது, ஆளும் கட்சி ஆதரவாளர்கள் அதை உரித்தெறிந்ததனால் பிரச்சினை தோன்றியது. இறுதியில் ஐ.தே.கட்சியினர் திரும்பிச் சுட்டதில் ஆளும் கட்சித் தொண்டர் ஒருவரும் கொல்லப்பட்டார்.

## வில்பத்துக் காட்டில் இராணுவம் மீது தாக்குதல்

கடந்தவாரம் வில்பத்துக் காட்டில் நடந்து ரோந்து சென்ற இராணுவ அணி ஒன்றின் மீது புலிகள் கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றை நடத்தியதாக சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைச் செயலகம் அறிவித்துள்ளது.

இத் தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் படுகாயமடைந்து அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைவிட கிழக்கு மாகாணம் செங்கலடிக்கு 5 கிலோமீற்றர் வடக்கில் உள்ள கறுவங்கேணியில் அமைந்திருந்த இராணுவ காவலரண் ஒன்றும் புலிகளின்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## மகிழடிப்பாலம் தகர்க்கப் பட்டது

கிழக்கு மாகாணம் சித்தாண்டிக்குத் தெற்கேயுள்ள மகிழடிப் பாலமும், ரேடியேற்றர் கேட் எனக் குறிப்பிடப்படும் குளக் கதவும் கடந்தவாரம் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சித்தாண்டிக் கிராமத்தையும், சந்தனமடு ஆறு என்ற வயல் பிரதேசத்தையும் இணைக்கும் வீதியிலேயே இந்தப் பாலம் அமைந்துள்ளது. அதற்கு அண்மையிலேயே உறுகாமம் குளத்துடன் தொடர்புடைய ரேடியேற்றர் கேட் உள்ளது.

## தாக்குதலை நிறுத்தக்கோரி மனு

மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் சிறீலங்காப் படையினர் மேற்கொண்டுவரும் கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்களை நிறுத்துமாறு அரசாங்கத்தை கோரும் மகஜர் ஒன்றை அப்பகுதி மக்கள் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளித்துள்ளனர். பட்டிப்பளை பிரதேசச் செயலாளர் அலுவலகத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்த மனுகையளிக்கப்பட்டுள்ளது.

தமிழ் வீடியோ, ஓடியோ கசட், கொம்பக் டிஸ்க் மற்றும் புடவை வகைகள், மளிகைச் சாமான்களுடன் கடல் உணவுகள், மரக்கறிகள் போன்ற உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
S.K.TRADING
Gasometer Street 31,
8005 Zurich,
Switzerland
Tel: 01-2724336
077-782201
Fax: 01-2732377

32- 1996.09.12.jpg

# தீர்வு யோசனையை ஆதரித்தால் பௌத்த தர்மமும் சிங்கள இனமும் அழிந்துவிடும் - தேரோ எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வுத்திட்ட யோசனையை நாம் ஆதரித்தால் எமது பௌத்த தர்மமும் சிங்கள இனமும் அழிந்துவிடும் ஆபத்து உள்ளது என்று கோட்டை ஸ்ரீ நாகவி காரையைச் சேர்ந்த வலமாது லுவாவே சோபித தேரோ எச்சரித்துள்ளார்.

அரசியல் தீர்வுத் திட்ட யோசனையின் போக்கு, சிறீலங்காவின் உள்விவகாரங்களில் வெளிநாட்டுத் தலையீடு, சிங்களவர்களிடமிருந்து கிழக்குப் பறி போய்விடுமா? ஆகிய தலைப்புகளின் கீழ் கொழும்பிலுள்ள பௌத்த இளைஞர் கழக மண்டபத்தில் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவால் கடந்தவாரம் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தேரோ, இனப்பிரச்சினைத் தீர்வுக்காக முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத்திட்டயோசனை காற்றுப்போன டயர் போன்றது. அந்த டயரில் எஞ்சியுள்ள காற்றையும் வெளியேற்றாவிட்டால் எமது பௌத்த இனம் உட்பட இந்த நாடே அழிந்துவிடும்.

இது தொடர்பாக அமைச்சர் பீரிஸ் காலையில் ஒன்றையும் மாலையில் இன்னொன்றையும் கூறிவருகிறார்.

அதேசமயம், யாழ்ப்பாணத்திலிருந்து மூன்று, ஒன்பது வாக்குகளால் உறுப்பினர்களாகத் தெரிவான டக்ளஸ் தேவானந்தா போன்றோர் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை தக்க வைத்துக்கொள்ள இன்னொன்றைக் கூறி வருகின்றனர்.

இதேவேளை வடக்கு, கிழக்கு பகுதியில் தனி இராச்சியம் ஏற்படுத்தப் படடால், தமக்கும் தனி இராச்சியம் வேண்டும் என்று ஒரு முஸ்லீம் அமைச்சர் எச்சரித்துள்ளார்.

முன்னர் ஐ.தே.கட்சி மகாசபை யோசனையை முன்வைத்தபோது அதற்கு எதிராக சத்தியாக்கிரகம் செய்த சிறீமாவோ பண்டாரநாயக்காவுக்கு இவ்வாறான தீர்வு யோசனை ஒன்றை கொண்டுவருவதற்கு எந்தவித உரிமையும் கிடையாது என்று கூறினார்.

# யாழ் வைத்தியசாலையில் பிரெஞ்சு வைத்தியர்கள்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் 1987 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் எல்லைகள் அற்ற மருத்துவர்கள் அமைப்பின் (MSF) சார்பில் கடமையாற்றி வந்த பிரெஞ்சு நாட்டு வைத்திய நிபுணர்கள் தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும் தமது சேவையை ஆரம்பித்துள்ளனர்.

மேற்படி வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை நிபுணர்களுக்கு பற்றாக்குறை நிலவியதால் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் பிரெஞ்சு சத்திர சிகிச்சை நிபுணர்களே தற்போது இங்கும் தமது கடமையை ஆரம்பித்துள்ளனர். இதன் காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் செவ்வாய்க் கிழமைகளில் இயங்கி வந்த சத்திரசிகிச்சைக் கிளினிக் திங்கட் கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளது.

# பாண் விலை அதிகரிப்பு ஆளும்கட்சி எம்.பி கள் மோதல்

(கொழும்பு)

பாண்விலை அதிகரிப்பு விவகாரம் குறித்து ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களிடையேயும், அமைச்சர்களிடையேயும் மோதல் இடம்பெற்றுள்ளது.

கடந்தவாரம் அரசாங்கப் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம், கல்வி - உயர்கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரண தலைமையில் நடைபெற்றபோது பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் அவருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

சாதாரண மக்களின் வாக்குகளைப் பெற்று தெரிவாகிய நாங்கள், அதுவும் விலைவாசியைக் குறைப்போம் என்று கூறி வாக்குப் பெற்ற நங்கள் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையால் மக்கள் மத்தியில் தலைகாட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கூச்சலிட்டனர்.

அமைச்சர் பத்திரண கூட தமக்கும் இந்தக் கருத்தே உள்ளதென்றும் தான் கூட மந்திரிப்பதவியை துறந்துவிடலாம் என்று யோசிப்பதாகவும் தெரிவித்ததோடு மந்திரிசபை கூட்டத்தில் பாண்விலை அதிகரிப்பு பற்றிய முடிவு எடுக்கப்பட்ட போது தான் அதை கடுமையாக எதிர்த்ததாகவும் கூறியிருந்தார்.

இந்த விவகாரம் அமைச்சர்கள் மத்தியில் பெரும் பிரச்சினையை உண்டாக்கிவிட்டது. ரிச்சாட் பத்திரண அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பினை மீறிவிட்டார் என்று அவர்கள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் முறைப்பாடு செய்தனர்.

உணவுத்துறை அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரட்ண இந்த விடயத்துக்கு முழு அமைச்சரவையுமே பொறுப்பாகும். அந்தப் பொறுப்பை, ரிச்சாட் பத்திரண மீறக் கூடாது என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் அரிசி விலையை, பாண் விலை அதிகரிப்புக்கு மாற்றீடாக தான் 18 ரூபாவாக குறைக்க நடவடிக்கை எடுக்கப் போவதாக உறுப்பினர்களுக்கு சமாதானம் சொன்ன போது, நீங்கள் சந்திர மண்டலத்திலிருந்து அரிசியைக் கொண்டுவந்தாலன்றி அரிசி விலையை கிலோ 24 முதல் 22 ரூபாவிற்கு கீழ் குறைக்க முடியாது என்று அவர்கள் கோபமாக சொன்னதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

# மட்டுநகரில் பெரு மழை

மட்டக்களப்புப் பகுதியில் 04.09.96 புதன்கிழமை அரைமணி நேரம் மட்டுமே பெய்த பெரு மழை வெள்ளத்தால் ஏராளமான மரங்கள் சரிந்து விழுந்தன. அறுவடைக்குத் தயாராக இருந்த நெல் வயல்கள் வெள்ளத்தால் மூழ்கின. விவசாயிகள் பலர் அவசர அவசரமாக நெல்லை அறுவடைசெய்து தோணிகள் மூலம் கரை சேர்த்து வருகின்றனர்.

ஏற்கனவே மட்டக்களப்பு வாவியில் உயர்ந்திருந்த நீர்மட்டம் தற்போது பெய்த மழையினால் மேலும் அதிகரித்துள்ளது. இதே வேளை வாவியின் நீர் மட்டத்தை விட கடல் மட்டம் உயர்ந்திருப்பதால் முகத்துவாரத்தை வெட்டி வாவி நீரை கடலுக்குள் செலுத்துவதற்கு வாய்ப்பில்லாத நிலை உள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஈராக்கிய சூழ்நிலை பற்றி சிறீலங்காவும் கவலை

வட ஈராக்கில் உள்ள குர்திஸ் நகரமான ஈாபில மீது ஈராக்கின் படையெடுப்பு, ஈராக் மீது அமெரிக்கத் தாக்குதல் தொடர்பாக சிறீலங்காவும் தன் கணக்குக்கு அறிக்கை விட்டுள்ளது.

அவ்வறிக்கையில், சம்பந்தப்பட்ட தரப்பினர் பேச்சு வார்த்தை மூலம் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முயல வேண்டும் எனவும், மக்களுக்கு வேண்டாத துன்பங்களை ஏற்படுத்தும் வகையில் நிலைமையை மோசமாக்காமல் இரு தரப்பும் நடந்துகொள்ள வேண்டும் எனவும் உபதேசம் செய்யப்பட்டுள்ளதோடு, ஐ.நா சபை தீர்மானங்கள் சரியாக அமுல்படுத்த வேண்டும் என்று வேண்டுகோளும் விடுத்துள்ளது.

# கொழும்புக் குண்டு வெடிப்பு கிளிநொச்சி இளைஞர் மீது வழக்கு

கொழும்பு ரயிலில் குண்டு வெடித்த விசாரணைகளை மேற்கொண்ட பாதுகாப்புப் படையினர், தமிழ் இளைஞர் ஒருவர் தானே குண்டுத் தாக்குதலை நிகழ்த்தியதாக ஒப்புக் கொண்டுள்ளதாகத் தெரிவித்து அவர் பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

30 வயது மதிக்கத்தக்க இவ் இளைஞர் கிளிநொச்சியைச் சேர்ந்தவர் என்றும் அவரது பெயர் சவரிமுத்து லோகநாதன் என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர். பொலிசார் இவரை விடுதலைப் புலி இயக்க உறுப்பினர் எனத் தெரிவித்துள்ளனர்.

# யாழ்ப்பாணத்துக்கு உணவு அனுப்பாமலே அனுப்பியதாக கணக்குக் காட்டி மோசடி

சிறீலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு சில குறிப்பிட்ட வகை உணவுப் பொருட்களை அனுப்பியதாகக் கணக்குக் காட்டி விட்டு, அந்தப் பொருட்களை கொழும்பில் உள்ள கள்ளச்சந்தையில் விற்று கோடிக் கணக்கான பணத்தை யாழ் மக்களின் பெயரால் கொள்ளையடித்த சம்பவம் சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு 32 கப்பல்களில் உணவுப் பொருட்கள் அனுப்பப்பட்டதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஆனால் 19 கப்பல்கள் உணவை அங்கு எடுத்துச் சென்றதற்கான பதிவுகளே காணப்படுகின்றன. மிகுதி 13 கப்பல்களுக்கும் என்ன நடந்தது. அந்த உணவுகள் எங்கே சென்றன? என்ற கேள்வியை ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்தின கடந்த வாரம் சிறீலங்கா பாராளுமன்றத்தில் எழுப்பினார்.

அவர் அங்கு பேசுகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு உணவு அனுப்பப்பட்டதாக சொல்லப்படும் பட்டியலில் மூன்று கப்பல்களின் பெயரே பலமுறை இடம் பெற்றுள்ளது. அது மட்டுமல்லாமல் அங்கு அனுப்பப்பட்டுள்ளதாக பட்டியலிடப்பட்டுள்ள பல பொருட்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேரவில்லை என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவிக்கின்றது. இந்த விவகாரத்தில் 50 கோடி ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

எலக்றிசிற்றி, பைப் லைனிங், மாபிள் பதித்தல், பேப்பர் ஒட்டுதல், பெயின்ரிங், P.V.C யன்னல்கள் மற்றும் கட்டட வேலைகள், தச்சு வேலைகள் அனைத்திற்கும்,

பகீ என்ரபிறைஸ்

உங்கள் வீடுகளுக்கான இன்சூரன்ஸ், கடன் ஏற்பாடுகளுக்கு தேவையான Devis வழங்கப்படும்

Devis 200Frs - Deplacement 150Frs

புதிய தொலைபேசி இலக்கம்: 48 48 39 64 / 09.27.32.00

(ADV)

# கிளிநொச்சிக்குத் தேவை 4000 மெற்றிக் தொன் உணவு; அரசு அனுப்பி வைத்திருப்பதோ 290 மெற்றிக் தொன்!

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெயர்ந்த அகதிகளுக்கு வழங்குவதற்கு மொத்தம் 4000 மெற்றிக் தொன் உணவு தேவைப்படுகின்றது. ஆனால் அத்தியாவசிய சேவைகள் திணைக்களம் 290 மெற்றிக் தொன் உணவையே கடந்த வாரம் அனுப்பி வைத்துள்ளது என கிளிநொச்சி அரசாங்க அதிபர் தில்லைநடராசா தெரிவித்துள்ளார்.

வன்னியில் வைத்து அவர் பத்திரிகையாளர்களுக்கு தகவல் தருகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் மிகப் பெரிய உணவுத் தட்டுப்பாடு நிலவுகின்றது. அத்தியாவசிய சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற நிவாரண உணவுப் பொருட்கள் எதுவுமே கையிருப்பில் இல்லை. மக்களுக்கான உணவு விநியோகம் கடந்த மே மாதத்திலிருந்து ஒழுங்கான முறையில் வழங்கப்படவில்லை.

கிளிநொச்சியில் இடம்பெயர்ந்த மக்களுக்கு 4000 மெற்றிக் தொன் உணவு தேவைப்பட்ட போதிலும் அத்தியாவசிய சேவைகள் திணைக்களம் 100 மெற்றிக் தொன் அரிசியையும் 190 மெற்றிக் தொன் மாவையும் மட்டுமே அந்த வாரம் அனுப்பி வைத்துள்ளது. இது யானைப் பசிக்கு சோளப் பொரி போடுவதைப் போன்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் நாளாந்த உணவுத் தேவை அதிகரித்துச் செல்வதுடன் மிக மோசமான உணவுத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. குழந்தைகள், சிறுவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரிடையே மிக மோசமான போசாக்கின்மை காணப்படுகின்றது.

உணவுப் பற்றாக்குறை மிகுந்துள்ள கிளிநொச்சி மாவட்டத்தின் வெளிச் சந்தையில் பொருட்கள் விலையும் மிகவும் அதிகரித்துள்ளது. ஒரு கிலோ, அரிசி 38 ரூபாவாகவும், மா 26 ரூபாவாகவும், சீனி 45 ரூபாவாகவும், பருப்பு 47 ரூபா 50 சதமாகவும், தேங்காய்யெண்ணெய் 1 லீட்டர் 150 ரூபாவாகவும், உருளைக்கிழங்கு 220 ரூபாவாகவும், பாவற்காய் 120 ரூபாவாகவும், பீற்றூட் 100 ரூபாவாகவும், கத்தரிக்காய் 80 ரூபாவாகவும் விற்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

## யாழ் வைத்தியசாலையில் இளம் பெண்ணின் சடலம்

நிர்வாணமான நிலையில் இளம் பெண் ஒருவரின் சடலம் கடந்த ஒரு மாதகாலமாக யாழ் போதனா வைத்தியசாலை சவச்சாலையில் உள்ளது. இவர் பல இராணுவத்தினரின் பாலியல் வன்முறைக்குப் பின் கொலைசெய்யப்பட்டவர் என நம்பப்படுகிறது.

கடந்த ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி தென்மராட்சி மந்துவிலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் (தாய், மகள், சகோதரி) இராணுவத்தின் பாலியல் வன்முறைக்கு ஆளாகியிருந்தனர். அப்போது அதைத் தடுக்க முயன்ற ஆண் ஒருவர் இராணுவத்தின் கத்திக் குத்துக்கு இலக்காகி உள்ளார். இம் மூன்று பெண்களும் மந்திகை வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றுவருகின்றனர். அங்கு சென்ற இராணுவத்தினர், புலிகளே இம் மிருகத்தனமான செயலைப் புரிந்ததாக கூறும்படி வலியுறுத்தியுள்ளனர் எனத் தெரிய வருகிறது.

## மகளைத்தேடிச் சென்ற தந்தை சுட்டுக் கொலை

கடந்த மாதம் முதல் வாரத்தில் பருத்தித்துறை பழைய நகர்ப் பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட தமது மகளை மீட்கச் சென்ற தந்தை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கலாம் என்பதால் கைது செய்யப்படும் இளம் பெண்களை ஆடைகளை களையுமாறு இராணுவத்தினர் மிரட்டி வருகின்றனர். இதேவேளை மாலை வேளைகளில் தேடுதலின் போது கைது செய்யப்படும் இளம் பெண்கள் இராணுவத்தினரால் முகாங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப் பட்டு வருகின்றனர். இவர்களில் சிலர் அடுத்தநாள் காலையில் விடுதலை செய்யப்படுகின்றனர். சிலர் பற்றிய தகவல்கள் இல்லை. இதனால் இப் பகுதிகளில் பெண்கள் அச்சத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர்.

## லிங்கம் கூல்பாருக்கு சீல்

யாழ்நகரில் இயங்கிவந்த லிங்கம் கூல்பார் இராணுவத்தினரால் சீல் வைக்கப் பட்டுள்ளது. அதன் உரிமையாளரும், ஊழியர்களும் கைது செய்யப் பட்டுள்ளனர். அங்கு இரண்டு கைக்குண்டுகள் இருப்பதாக அநாமதேய தகவல் கிடைத்ததைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## கடற்படைச் சூட்டுக்கு 12 பேர் படுகாயம்

கடற்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தால் பலர் படுகாயமடைந்து அபாயகரமான நிலையில் இருக்கின்றனர். கடந்த 30.08.96 அன்று காலை 8.30 மணியளவில் சுண்டிக்குளம் கடற்பரப்பில் இச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

சம்பவதினம் 6 பேர் இரு படகுகளில் சென்று கொண்டிருந்த கடற் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 12 பேர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் ஆறு பேரினது நிலை மிக மோசமடைந்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இப்பகுதிகளில் கடற்படையினர் திடீர் திடீரென கரை நோக்கி வந்து துப்பாக்கி பிரயோகம் செய்து வருகின்றனர்.

# பிரார்த்தனை கூடச் செய்ய முடியாத நிலையே நாட்டில் உள்ளது - ரணில் அரசுக்கு கண்டனம்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமாகச் சீரழிந்து விட்டது. மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் எல்லாம் விலையேறி விட்டன. மக்கள் உயிர்வாழக்கூட முடியாத நிலை தோன்றியுள்ளது. இன்னும் சொல்லப் போனால் அமைதியை நாடிப் பிரார்த்தனை செய்ய முடியாத நிலையே நாட்டில் உள்ளது. இதை ஐ.தே.கட்சி வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா சிறீலங்கா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

'அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் கெஸ்பாவ பதோ. கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் மோதல் இடம்பெற்றுள்ளது. அங்கு ஐ.தே.கட்சி ஆதரவாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். அதற்கு பின்னணியில் இருந்த சந்தன கஸ்தூரியாராச்சி என்னும் மாகாண சபை உறுப்பினரை பொலிசார் கைது செய்யவே இல்லை.

25.08.96ல் மத்துகமவில் இடம் பெற்ற ஐ.தே.கட்சிக் கூட்டம் குழப்பப்பட்டது. றொனி டீ மெல் பேசியபோது டயர்கள் எரிக்கப்பட்டன. சரத் அமுனுகம உரையாற்றிய போது கற்கள் வீசப்பட்டன. பொலிசார் கற்களை வீசியவர்களை விட்டுவிட்டு கூட்டத்துக்கு வந்த ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் மீது காரணமின்றி கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்துள்ளனர்.

கட்டானாவில் சமாதானத்திற்காக பிரார்த்தனை நடத்திய ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர். அதில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். நீர்கொழும்பு சென் மேரிஸ் தேவாலய மதகுருவுக்கு சமாதானப் பிரார்த்தனைக்கு இடமளிக்க வேண்டாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இடம்பெறும் உயிரழிவுகளுக்கு ஜனாதிபதியும், அரசுமே பொறுப்பாகும். உயிரழிவுகள் தொடர்பாக அரசாங்கத்தில் உள்ளவர்கள் யாரும் கவலைப்படுவதே இல்லை. அது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த நிலையில் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்ட ஐ.தே. கட்சியினால் வெறுமனே மௌனமாக இருக்க முடியாது என்று கூறினார்.

## எயர் லங்கா கட்டுப்பாட்டு அறையில் கணணியைக் காணவில்லை

கொழும்பில் உள்ள எயர் லங்கா நிறுவனத்தின் கட்டுப்பாட்டறையில் உள்ள பிரதான கணணி காணாமல் போயுள்ளது. எயர்லங்கா விமானங்களின் பறக்கும் பாதைகள், நேரங்கள் குறித்த தகவல்கள் அடங்கிய கணணி காணாமல் போயுள்ளமை பாதுகாப்பு மட்டத்தில் பலத்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

கணணிப் பிரிவில் ஏற்பட்ட காணமல் போன சம்பவத்தால் பயணிகள் அச்சங் கொள்ளக் கூடியளவுக்கு பாதிப்பு ஏற்படவில்லை என எயர்லங்கா நிறுவனத்தினர் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளனர்.

09.07.96 முதல் விற்பனையாகின்றது

125 பிராங்குகள் மட்டுமே




இதோ வெளிவந்துவிட்டது. வூட்லன்ஸ்சின் புதிய தொலைபேசி அட்டை WORLD CALL CARD உங்கள் வீடுகளில் இருந்தோ, அல்லது நீங்கள் நிற்கும் இடத்தில் இருந்தோ எவ்வித செலவுமின்றி N° de Vert பாவித்து எதுவித தடங்கலும் இல்லாமல் Mci நிறுவனத்தால் முதன் முதலாக இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் நாடுகளுக்கு மட்டும் பாவிக்கக்கூடிய விசேட தயாரிப்பு இதுவே.

இலங்கை 15 நிமி. - பாகிஸ்தான் 15 நிமி. - பங்களாதேஷ் 15 நிமி. - இந்தியா 18 நிமி.

குறிப்பு: N° de Vert பாவிப்பதால் ஏற்படும் நன்மை, நீங்கள் முதல் தடவை 5 நிமிடம் பாவித்த பின்பும் மிகுதி 10 நிமிடத்தை பாவிக்கும் போது மேலதிகமாக பணம் செலவிடத் தேவையில்லை.

வர்த்தக ஸ்தாபனங்களுக்கு விசேட விலை உண்டு.

Woodlands Tele communication Centre

70, RUE LOUIS BLANC, 75010 PARIS. Tel: 46 07 76 04 - Fax: 40 07 76 90

மேலதிக விபரங்களுக்கு: 08 24 31 43 – 08 51 90 54

# திருமலையிலிருந்து தமிழரை வெளியேற்ற அரசாங்க அதிபர் தீவிர முயற்சி

தமிழ் மக்களின் பூர்வீக நிலப்பரப்பும் தமிழீழத்தின் தலைநகரமுமான திருக்கோணமலை நகரத்திலிருந்து தமிழ் மக்களை வெளியேற்றுவதற்கு சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டு வருகின்றது.

திருமலை, லிங்கநகர் பகுதியில் வாழும் தமிழ் மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு திருக்கோணமலை அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். அங்கு காணி அதிகாரியாக இருக்கும் பீரிஸ் என்பவரும், மேற்படி அரச அதிபரும் இணைந்து இராணுவத்தினரின் உதவியுடன் அங்கு பரம்பரை பரம்பரையாக வசித்து வரும் தமிழ் மக்களை வெளியேற்றுவதற்கு முயன்று வருகின்றனர்.

அங்கிருந்து தமிழ் மக்களை வெளியேற்றி விட்டு அங்கிருக்கும் இராணுவ முகாமை விஸ்தரித்து அதற்குப் பாதுகாப்பாக புதிய சிங்களக் கிராமங்களை உருவாக்க இவர்கள் திட்டமிட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இதற்கிடையில் வட பகுதியில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து திருக்கோணமலைக்கு வந்துள்ள தமிழ் அகதிகளுக்கு வேண்டிய நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு திருமலை அரசாங்க அதிபர் தடை விதித்துள்ளார். அதே நேரம் வெலி ஓயா எனப்படும் மணலாற்றுப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த சிங்களவர்களுக்கு சகல கொடுப்பனவுகளையும் வேண்டிய உலர் உணவுப் பொருட்கள் உட்பட அனைத்து நிவாரணப் பொருட்களையும் வழங்குவதற்கு இனஅடிப்படையில் செயற்படும் இந்த அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

# சிறிலங்காவில் தமிழன் என்றால் சூதாடக் கூட உரிமை கிடையாது

(கொழும்பு)

கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலான ஹொலிடே இன் இல் தங்கியிருந்த இங்கிலாந்துப் பிரசையான தமிழர் ஒருவர் அருகில் இருந்த சூதாட்டக் கிளப் ஒன்றிற்கு சென்றிருந்தார். அங்கு அவருக்கு எதிர்பாராத விதமாக அதிர்ஸ்டம் கிடைத்துவிட, அவர் தொடர்ந்து பெருந்தொகைப் பணத்துக்கு சூதாட்ட டோக்கன்களை வாங்கினார்.

இதைக் கண்டு தமிழன் ஒருவன் இப்படி வெற்றி பெறுவதா என்று ஆத்திரமடைந்த சிங்கள நிர்வாகம் உடனடியாக புலி ஒருவர் தங்களது சூதாட்டக் கிளப்புக்கு வந்துவிட்டதாக படையினருக்கு தகவல் கொடுத்தார்.

அங்கு விரைந்து வந்த சிறீலங்கா விமானப் படையினர் அவரைப் பெயர் சொல்லி அழைத்து அவரிடம் இருந்த ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பணத்தையும் பறிமுதல் செய்து விட்டு கொள்ளுப்பிட்டி பொலிசாரிடம் அவரை புலி உறுப்பினர் என்று சொல்லி ஒப்படைத்தனர்.

அவர் தான் ஒரு பிரித்தானியப் பிரசை என்று சொல்லி அதற்குரிய ஆவணங்களைக் காட்டியும், "நீ எந்த நாட்டுப் பிரசையாயிருந்தால் என்ன தமிழன் என்றால் எங்களுக்கு எலலோரும் புலிதான்" என்று சொல்லி அவரைச் சிறையில் அடைத்தனர்.

கொழும்பிலிருந்த அவரது பெற்றோர்கள் உடனடியாக பிரபல சட்டத்தரணி ஒருவர் மூலம் பிரித்தானியத் தூதுவரிடம் முறையிட்டனர். பின்னர் பிரித்தானிய தூதரக அதிகாரிகள் பொலீஸ் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு பல மணி நேரத்தின் பின் அவரை விடுவித்தனர்.

22 வருட காலத்திற்குப்பின் இலண்டனிலிருந்து தனது பெற்றோரை பார்க்க கொழும்பு சென்றிருந்த அந்த இளைஞர் மறுநாளே இலண்டனுக்குத் திரும்பி விட்டார்.

# யாழ்ப்பாணத்திலிருந்து திருமலைக்கு கப்பலில் வந்தவர் மரணம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலிருந்து கப்பல் மூலம் திருக்கோணமலைக்கு சென்ற பிரயாணி ஒருவர் திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் மரணமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் உள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் கடமையாற்றும் ஞானமுத்து அருளானந்தம் (66) என்னும் இந்தப் பிரயாணி கடந்த 05.09.96 வியாழக்கிழமை காலை 8.10 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து அவர் வந்த கப்பல், திருமலைத் துறைமுகத்தை அடைந்தபோது திடீரென மாரடைப்பு ஏற்பட்டு மரணமானார்.

இவருடைய குடும்பத்தினர் தமிழ்நாடு தருமபுரியில் இருப்பதால் தானும் அவர்களுடன் சென்று தங்குவதற்காக திருமலைக்கு வந்ததாகச் சொல்லப்படுகின்றது. தற்போது இவரது சடலம் திருமலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# ஆசிரியர் பரீட்சைக்கும் லஞ்சம் அவசியம்

(கொழும்பு)

ஆசிரிய நியமனங்களுக்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளும், பரீட்சை நடாத்துவோர்க்கு லஞ்சமாகப் பணம் கொடுக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

கடந்த வாரம் பெருந்தோட்டப் பகுதிப் பாடசாலைகளுக்கான ஆசிரியர் நியமனங்களுக்காக நேர்முகப் பரீட்சை நடைபெற்றுள்ளது. இப் பரீட்சையை நடாத்திய உயரதிகாரிகளுக்கு லஞ்சமாக குறிப்பிட்ட தொகைப் பணம் கொடுத்தால் மட்டுமே நியமனத்துக்கான சந்தர்ப்பம் கிடைக்கும் எனக் கூறி இவ் உயர் அதிகாரிகள் சார்பில் வேறு சிலர் கட்டாய நிதி வசூல் செய்துள்ளனர்.

உயர் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்காத பட்சத்தில் தாம் நேர்முகப் பரீட்சையில் தோல்வியடைவதுடன் நியமனங்களும் கிடைக்காது போகலாம் என்ற அச்சத்துடனேயே பலர் உள்ளனர். இந்த லஞ்ச நிதி வசூல் வேட்டையை முன்னின்று நடாத்தியவர்கள் அரச அதிகாரிகளே எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நான்காயிரம் ஆசிரியர்கள் தேவையான போதும் 500 பேருக்கு மட்டுமே நியமனம் வழங்கப்பட உள்ளது என்பதுடன் இந்த நியமனங்களில் இந்திய வம்சாவளியினர் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

# முன்னாள் இராணுவத் தளபதி மீது லஞ்ச ஊழல் வழக்கு

(கொழும்பு)

சிறீலங்காவின் முன்னாள் இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்கா மீது லஞ்ச ஊழல் வழக்கொன்று கொழும்பு உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Tamileelam Archive

ஜெனரல் வனசிங்கா 75 இலட்ச ரூபாவை தமது பதவிக் காலத்தில் மோசடியான விதத்தில் சேர்த்துக் கொண்டதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது ஜெனரல் வனசிங்காவை 10 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி எதிர்வரும் நவம்பர் 20, 21, 22 ஆம் திகதிகளில் இந்த வழக்கை மறுவிசாரணைக்கு ஒத்தி வைத்தார்.

ஜெனரல் வனசிங்கா 75 இலட்ச ரூபாவை தமது சட்ட பூர்வமான வருமானத்துக்கு மாறாக எவ்வாறு பெற்றுக் கொண்டார் என்பதை லஞ்ச ஊழல் திணைக்களத்துக்கு நிரூபிக்கத் தவறிவிட்டார் என அரச தரப்பில் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வனசிங்காவினது கைவிரலடையாளத்தை இருவாரங்களுக்குள் பதிவு செய்யுமாறு உத்தரவிட்ட நீதி மன்றம், இவ் வழக்குத் தொடர்பான சாட்சிகளுக்கும் அழைப்பாணை அனுப்ப முடிவு செய்துள்ளது.

# இனப்பிரச்சினை தீர்வுத் திட்டமும் 2000 தொலைபேசி இணைப்பும்

(கொழும்பு)

'யாழ்ப்பாணத்துக்குச் சென்ற அமைச்சர் ஒருவர் அங்கு இரண்டாயிரம் தொலைபேசி இணைப்புக்களை உடன்டியாக வழங்குவதாக வாக்குறுதியளித்திருந்தார். இன்றுவரை அவை வழங்கப்படவில்லை.' என ஐ.தே.க. கட்சி எம்.பி அஸ்வர் கடந்த வாரம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் தொலைத் தொடர்பு திருத்த சட்ட மூலம் மீதான விவாதம் கடந்த வாரம் நடைபெற்றது. அதில் மேற்கொண்டவாறு தெரிவித்த அஸ்வர் எம்.பி. தொடர்ந்து கூறுகையில் 'அமைச்சர்களினதும் பத்திரிகையாளர்களினதும் தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இவை ஜனநாயகத்துக்கு முற்று முழுதாக எதிரான ஒரு செயற்பாடாகவே கருதப்படும்.

ஐ.தே.க ஆட்சிக் காலத்தில் தொலைத் தொடர்புச் சேவை கணிசமான அளவுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளுக்கு நாம் உடனடியாகத் தொடர்பு கொள்ள முடிந்தாலும், இங்கிருக்கும் புத்தளம் நகருக்கு பல நாட்களாகத் தொடர்பு கொள்ள முடியாத நிலையே இருக்கின்றது. பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கூட அவசர தேவைக்கு தொலைபேசி சேவையில் தொடர்பு கொள்ள முடியவில்லை. இணைப்புக்களில் உள்ள தொழில் நுட்பக் கோளாறே இதற்கெல்லாம் காரணம்' எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# போராளிகளை நாடு கடத்தும் ஒப்பந்தத்தை மேற்குடன் செய்து கொள்ள அரசு முயற்சி!

வெளிநாடுகளில் உள்ள புலிகளின் அலுவலகங்களை மூடிவிடுமாறு மேற்குலக நாடுகளைக் கேட்டு வரும் சிறீலங்கா அரசாங்கம் அந் நாடுகளுடன் ஆட்களை நாடு கடத்தும் ஒப்பந்தங்களை செய்து கொள்வதற்கும் விரும்புவதாகத் தெரிய வருகின்றது.

சமீபத்தில் கொழும்புக்கு விஜயம் செய்த பிரித்தானிய வெளியுறவு அமைச்சரிடம் சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் இது தொடர்பாகப் பேசியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக கொழும்பிலுள்ள மேற்குலக நாட்டு தூதுவர்களிடம் அவர் ஆலோசனை கேட்டுள்ளார்.

அகதிகளுக்கான ஜெனீவா சட்டத்தின் கீழ் புலிகளின் நடவடிக்கைகளை சிறீலங்கா அரசு சொல்வது போல் பயங்கரவாத நடவடிக்கையாக கருத முடியாது என்றும், புலிகள் ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்ற நிலையை அடைந்து விட்டதனால் அவர்களது நடவடிக்கைகள் பயங்கரவாத நடவடிக்கைகளாக கணிக்கப்பட முடியாது என்றும், சிறீலங்கா அரசு கடுமையான மனித உரிமை மீறலில் ஈடுபடுவதாக சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ள நிலையில் அரசினது படைகளுக்கும் அதன் நடவடிக்கைகளுக்கும் எதிராகப் போராடுவோரையும் பயங்கரவாதிகளாக கணிப்பிடவோ அதன் அடிப்படையில் அவர்களை நாடுகடத்தவோ ஜெனீவாச் சட்டம் அனுமதிக்கவில்லை என்றும் பல நாட்டு தூதுவர்கள் கதிர்காமரிடம் தெரிவித்துள்ளதாக தெரிய வருகின்றது.

இதற்கிடையில் சுவிஸ் அரசாங்கத்துடன் அவர்களால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளைப் பொறுப்பாளர் நடராஜா முரளீதரனை நாடு கடத்தும்படி கதிர்காமர் பேச்சு வார்த்தை ஒன்றை நடாத்தியதாகவும் 1951 அகதிகளுக்கான ஜெனீவாச் சட்டத்தின் கீழ் அது நடைமுறைக்குச் சாத்தியமற்ற விடயம் என்று சுவிஸ் அதிகாரிகள் அவரிடம் தெரிவித்ததாகவும் கொழும்புப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

# யாழ்.நகரிலிருந்து கொழும்புக்கு 18 நோயாளிகளை அனுப்ப ஏற்பாடு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 18 நோயாளர்கள் அவசர சிகிச்சைக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் முயற்சியில் "யாவா கோல்ட்" என்ற சிறிய கப்பல் மூலம் இவர்கள் திருக்கோணமலைக்கு அழைத்துவரப்பட்டு பின் அங்கிருந்து தரைவழியாக கொழும்புக்கு கூட்டிச் செல்ல ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இவர்களுடன் இவர்களது நலன்களைக் கவனிக்க இரண்டு தாதிமாரும் உடன் செல்ல இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கல்முனையில் படையினர் செய்த கொலைகள்! விசாரணை நடத்துமாறு சந்திரிகாவுக்கு கடிதம்

(கொழும்பு)

கடந்த மாதம் 15ம் திகதி கல்முனையில் வைத்து சிறீலங்கா அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நாகராஜா தமேஸ்குமார், தில்லைநாயகம் சிவானந்தராஜா ஆகிய இரு இளைஞர்களின் மரணம் குறித்து விசாரணை நடத்துமாறு இந்த இளைஞர்களின் பெற்றோர்கள் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவிற்கு கடிதம் எழுதியுள்ளனர்.

கொலையுண்ட தமேஸ்குமாரின் 22 தந்தையான நாகராசா எழுதிய கடிததத்தில், எனது மகன் 24.11.74ல் காரைதீவில் பிறந்தவர். 01.10.93 முதல் பண்டிருப்பு மகாவித்தியாலய தொண்டர் ஆய்வு கூட உதவியாளராக கடமையாற்றியவர். பின்னர் இந்த நியமனத்தை மாகாண சபையினர் ஏற்காததால் சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியில் முதலாண்டு மாணவனாகப் படித்துவந்தார்.

அதனோடு 01.01.94 முதல் சர்வோதய அமைப்பின் உறுப்பினராகவும் கடமையாற்றி வந்தார்.

அண்மையில் கதிர்காமம் சென்று நேர்த்திக் கடனுக்காக முடி இறக்கிவிட்டும் வந்தார். வெளிநாடு செல்வதற்காக கடவுச்சீட்டுப் பெற்றிருந்த அவர் 15.08.96 அன்று காலை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரைச் சந்திப்பதற்காக சைக்கிளில் சென்றார்.

அவர் போகும் போது 16 கிராம் நிறையுள்ள தங்கச் சங்கிலியும், கைக்கடிகாரமும் அணிந்திருந்தார். வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவருக்கு செலுத்துவதற்காக 50 ஆயிரம் ரூபா பணமும வைத்திருந்தார்.

சம்பவ தினம் காலை 10.30 மணியளவில் எனது மகனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்திருப்பதாக கேள்விப்பட்டேன். கல்முனைப் பொலிஸ் நிலையத்திற்கு சென்று விசாரித்த போது யாரும் கைது செய்யப்படவில்லை என்றார்கள்.

பின்னர் எனது மகன் சுடுபட்டு அவரது சடலம் கல்முனை வைத்தியசாலையில் இருப்பதாகக் கேள்விப்பட்டு அங்கு சென்று அவரது சடலத்தை அடையாளம் கண்டோம்.

எனது மகனை புலிகள் இயக்கத்தை சேர்ந்த தற்கொலை குண்டுதாரி என அதிரடிப்படையினர் கூறியுள்ளனர். எனது மகன் ஒரு போதும் புலிகள் இயக்கத்தில் இருந்தது கிடையாது. அவரிடமிருந்து பணத்தைப் பறிப்பதற்காகவே அதிரடிப்படையினர் இந்தக் கொலையைச் செய்துள்ளனர். இது தொடர்பாக நீங்கள் நியாயமான விசாரணை நடத்த உத்தரவிடுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன் என்று எழுதியுள்ளார்.

கொல்லப்பட்ட மற்ற இளைஞரான சிவானந்தராஜா (20) என்பவரின் தந்தை தில்லைநாயகம் எழுதிய கடிதத்தில் எனது மகன் புலிகள் அமைப்பில் ஒரு போதும் இருந்ததில்லை, வேலை வாய்ப்பு முகவரிடம் பணம் கட்டுவதற்கே அவர் தமேஸ்குமாருடன் சென்றார்.

சம்பவதினம் பகல் 11.30 மணிக்கு அவர்கள் கைது செய்யப்பட்டதாக அறிந்தோம். அவர்களைப் பார்ப்பதற்கு சென்ற போது வழியில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது. பின்னர் வைத்தியசாலையில் மகனின் சடலத்தைப் பார்த்தோம். அவரிடமிருந்த பணமும், அவர் அணிந்திருந்த சங்கிலியும் காணாமல் போய்விட்டது. என்று கூறியுள்ளார்.

சிறீலங்கா அரசாங்கமும், கொழும்புப் பத்திரிகைகளும் இந்த இரு இளைஞர்களும் சுட்டுக் கொல்லப்பட்ட விபரத்தை, சைக்கிளில் குண்டு வைக்க வந்த புலிகள் அமைப்பின் தற்கொலைப் போராளிகளை சுட்டுக் கொன்றுவிட்டதாக பெரிதுபடுத்தி செய்தி வெளியிட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

# வீடுகளில் கொள்ளையடித்த இராணுவத்தினரை சிறையில் வைக்க நீதிமன்றம் உத்தரவு

ஆயுதபாணிகளாய்ச் சென்று அக்குறணை முஸ்லீம் கிராமம் பகுதிகளில் பல வீடுகளுக்குள் புகுந்து பணம், நகை என்பவற்றை கொள்ளையடித்த இரண்டு இராணுவக் கப்டன்கள் உட்பட ஏழுபேரை கண்டி நீதிமன்ற நீதிபதியால் விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த யூன் மாதம் 12ம் திகதி அக்குறணைப் பிரதேசத்திலுள்ள முஸ்லீம் மக்கள் அதிகம் வாழும் கிராமத்தில் தானியங்கி துப்பாக்கி கைக்குண்டுகள் சகிதம் பல வீடுகளுக்குச் சென்று துப்பாக்கி முனையில் ஒரு இலட்சத்து 4 ஆயிரத்து 600 ரூபா பணத்தையும் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் மேற்படி இரண்டு இராணுவக் கப்டன்கள் அடங்கிய கோஷ்டியினர் கொள்ளையடித்துள்ளனர்.

கொழும்பு, வாழைச்சேனை, வத்தளை, நுகேகொடை பகுதிகளைச் சேர்ந்த இவர்கள் கூட்டாகச் சேர்ந்து வான் ஒன்றை வாங்கியே தொடர்ச்சியான கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டிருந்தனர்.

அக்குறணைக் கொள்ளைச் சம்பவங்களையடுத்து கண்டிப் பொலிசார் மேற்கொண்ட தீவிர புலன் விசாரணையில் இந்த ஏழுபேரும் பிடிபட்டனர். இவர்களது வானும் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட இராணுவ கப்டன்கள் இருவரும் விடுமுறையில் வந்த காலத்திலேயே இந்தக் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டதாக கண்டிப் பொலிசார் தெரிவித்துள்ளனர். இவர்கள் எவ்வாறு ஆயுதங்களை தங்களது வீடுகளுக்கு எடுத்துச் சென்றார்கள் என்பது பற்றி தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

# சிறீலங்காவில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு

சிறீலங்காவில் ஆகஸ்ட் மாதத்திற்கான வாழ்க்கைச் செலவு ஜூலை மாதத்தைவிட 67 புள்ளிகளால் அதிகரித்துள்ளது. கடந்த ஜூலை மாதத்தில் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் 1960.8 ஆகும். ஆகஸ்ட் மாதம் இது 1967.5 ஆக அதிகரித்துள்ளது.

தற்போது கோதுமை மா பாண் ஆகியவற்றின் விலை உயர்வினாலும் ஏனைய அத்தியாவசிய உணவுப் பொருட்களினதும் விலைகள் அதிகரித்திருப்பதாலும் செப்டம்பர் மாதம் (இம்மாதம்) இவ் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் இன்னும் அதிகரிக்கும் என்று கொழும்பிலுள்ள புள்ளிவிபரவியல் நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# வாகரையில் குண்டுவீச்சு

01.09.96 அன்று சிறீலங்கா கடற்படை பீரங்கிப் படகுகள் வாகரையிலுள்ள மீனவர் குடியிருப்பை நோக்கி குண்டுத் தாக்குதல் நடத்தின.

இத் தாக்குதலில் பாலசிங்கம் வள்ளிப்பிள்ளை என்ற 5 பிள்ளைகளின் தாயான 30 வயதுப் பெண் உடல் சிதறிப் பலியானார்.

# மட்டக்களப்பு மாந்தீவு வைத்தியசாலைக்கு மூடுவிழா

மட்டக்களப்பு மாந்தீவு வைத்தியசாலையை பாதுகாப்புக் காரணங்களைக்காட்டி மூடிவிடுவதற்கு சிறீலங்கா அரசு தீர்மானித்துள்ளது.

கிழக்கு மாகாணத்திலுள்ள ஒரே ஒரு தொழு நோயாளர் வைத்தியசாலையான இதனை மூடுவதற்கு எதிராக அப்பகுதி மக்களிடமிருந்து பலத்த எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இதுதொடர்பாக மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பராராஜசிங்கம் பத்திரிகையாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் பாதுகாப்புப் படையினரின் முகாமொன்றை மாந்தீவில் உருவாக்குவதற்கே அரசாங்கம் இவ் வைத்தியசாலையை மூடுவதற்குத் தீர்மானித்துள்ளது. 50 வருடகாலமாக இயங்கி வரும் இவ் வைத்தியசாலையில் நீண்டகாலமாக தங்கியிருந்து சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளை சிங்களப் பகுதியான ஹெந்தளைப் பகுதிக்கு இடம்மாற்றுவதென்ற அரசின் முடிவு, அவர்களை மனோரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிப்படையச் செய்யும்.

சமாதானத்தை ஏற்படுத்தப் போவதாகச் சொல்லிக் கொள்ளும் அரசாங்கம் யுத்தமுனைப்பிலேயே தீவிரமாக இருக்கின்றது என்பதற்கு இது ஓர் உதாரணமாகும் என்று கூறியுள்ளார்.

Neuss ORIENTAL SHOPPING CENTRE ம்
Dussel dorf INDO - CEYLON HOUSE ம்
இணைந்து வழங்கும்
காலவரையறையற்ற மாபெரும் மலிவு விற்பனை
தரமான பொருட்களை குறைவான விலையில் பெற்றுக்கொள்ள முந்துங்கள்
இதோ மலிவிற்கு இங்கே உதாரணங்கள் சில....

- 100g கடுகு 0.49Pf,100g வெந்தயம் 49Pf, 100g பெ.சீரகம் 0.59Pf, 100g சி.சீரகம் 0.59Pf, 100g மிளகு 99Pf, 200g மல்லி 99Pf 454g புளி (தாய்லாந்து) 99Pf, 500 கிராம் மைசூர் பருப்பு 1.25Dm, 500g கிராம் கடலைப் பருப்பு 1.25Dm, 5Kg பசுமதி அரிசி (No1) 22.50 Dm மட்டும். 500g உ.பருப்பு 1.25 Dm இலங்கை முறைப்படி தயாரிக்கப்பட்ட உடன் றோஸ் பாண், பனிஸ் வகைகளும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
- வீடியோ வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பாக வெளிவந்த அனைத்து வீடியோ பிரதிகளும் அரைக் கட்டண வாடகைக்கு (1Dm) வழங்கப்படும். அத்துடன் நீங்கள் விரும்பும் படத்தின் வீடியோப் பிரதிகளும் மலிவு விலையில் தரப்படும். சிறைச்சாலை, தேவராகம், எஜமான், மன்னன், குருதிப்புனல் பிரதி 6.90Dm மட்டுமே.
- ORIENTAL PARTY SERVICE அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் நீங்கள் விரும்பிய உணவு (சைவ, அசைவ) வகைகளை தயார் செய்து நிகழ்ச்சி நடைபெறும் மண்டபம்வரை விநியோகம் செய்யப்படும். அத்துடன் உணவு பரிமாறுவதற்கான எவர் சில்வர் பாத்திரங்கள் (சில்வர் கோப்பை, ரம்ளர், ஐஸ்கிரீம் கப்) போன்றவை குறைந்த வாடகையில் தரப்படும்.
- உங்களது எந்தவிதமான கொண்டாட்டங்களுக்கும் தேவையான சமையல் பொருட்கள் அனைத்தையும் எம்மிடம் வாங்கினால் காஸ் அடுப்புக்கள், பெரிய RICE COOKER, சமையல் பாத்திரங்கள் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.
- எமது விஷேட சேவைகள்: உலகின் எப்பகுதிக்கும் குறைந்தவிலையில் விமான பயணச் சீட்டு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.(அவசர பயணம் மேற்கொள்வோரின் நலன் கருதி விமான நிலையத்திலும் ரிக்கற்றுகள் விநியோகம் செய்யப்படும்)
- பிறந்தநாள், திருமணம், பூப்புனித நீராட்டு விழா போன்றவற்றிற்கான அழகான அழைப்பிதழ்கள், மண்டப சோடனைகள், மாலை வகைகள், ஐயர், வீடியோ, புகைப்பட பிடிப்பு அனைத்தும் குறைந்த செலவில் ஒழுங்கு செய்து தரப்படும்.

ORIENTAL SHOPPING CENTRE
Meerer Hof-L 11.12, 41460 Neuss.
Tel: 02131/278157 - Fax: 02131/278170

INDO - CEYLON HOUSE
Worringer Str-107, 40210 Dussel Dorf.
Tel: 0211/365317 - Fax: 0211/1649382
(ADV)

# 1997-ம் ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவு 10,000 கோடி

கொழும்பிலிருந்து தமிழரசன்

சிறீலங்கா பொலிஸ் மற்றும், முப்படைகளுக்கு அதிகளவில் ஆட்களை சேர்த்துக் கொள்ளவும், படைப் பிரிவுகளை நவீனப் படுத்தும் வகையிலும் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ள 1997 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் கூடுதலான நிதி ஒதுக்கப்பட இருப்பதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.



னங்கள் வாடகைக்கு அமர்த்தப் பட்டுள்ளன. இந்த விமானங்களை ரஷ்ய விமானிகளே செலுததி வருகிறாரகள. இதற்காக அந்த விமான நிறுவனத்திற்கு மாதாந்தம் பல கோடி

தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறீலங்கா இராணுவ தளபதியின் உத்தியோகபூர்வ வாசஸ் தலமான 'ஜெனரல் ஹவுசில்' பன்னிரண்டரை லட்ச ரூபா பெறுமதியான தளபாடங்கள்,

பின்னர், தனது உத்தியோக பூர்வ வாசஸ் தலமான ஜெனரல் ஹவுஸிற்கு செல்ல முன்னர் அங்கு நடத்தப்பட்ட மதிப்பீடுகளின் போது இந்த பெறுமதியான பொருட்கள் காணாமல்

## 20 கோடி ரூபாவுக்கு பிரிட்டனிலிருந்து 2 விமானங்கள்

சரக்கு விமானங்கள் வாங்கப் பட்டுள்ளன. எல் 100 ஹெர்கியூலஸ் ரகத்தைச் சேர்ந்த இந்த இரண்டு சரக்கு விமானங்களையும் பிரித்தானியா சிறீலங்காவிற்கு ஐந்து வருட காலகடன் அடிப்படையில் வழங்கி

ரூபாவை சிறீலங்கா விமானப் படை வாடகையாக செலுத்தி வருகிறது.

முல்லைத்தீவுப் படைத்தளம் தமிழீழ விடுதலைப் புலிகளால் துவம்சம் செய்யப்பட்டது

மின்சார உபகரணங்கள், மற்றும் பெறுமதியான பொருட்கள் காணாமல் போனது தொடர்பாக மேஜர் ஜெனரல் ஒருவரின் தலைமையில் ஐந்து பேரைக் கொண்ட உயர் இரா

போனது தெரியவந்தது. இதனை அடுத்து இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்



## இராணுவத் தளபதியின் வீட்டில் 12 இலட்சம் பெறுமதியான பொருட்கள் களவு

1996 ஆம் ஆண்டின் பாதுகாப்பு செலவினங்களுக்காக ஆயிரத்து தொளாயிரம் கோடி ரூபா ஒதுக்கப் பட்டிருந்தது. அடுத்த ஆண்டிற்கான செலவீ

விருக்கிறது.

வட பகுதியில் கடந்த ஆண்டு பல விமானங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதை அடுத்து சிறீ

தொடர்பாக விசாரணை செய்து வரும் இராணுவ நீதிமன்ற விசாரணைக் குழுவினர் கடந்த வாரம் முதல் ஆனையிறவு இராணுவ முகாமிற்கு சென்று விசாரணை நடத்தி வருகின்றனர். முல்லைத்திவு படைத்தளம் தாக்கப் பட்ட வேளையில் முல்லைத் தீவு படைத் தளத்திற்கு ஆனையிறவிலிருந்து எந்த வகையில் உதவ முடிந்தது, உதவி வழங்குவதில் ஏற்பட்ட நடைமுறை சிக்கல்கள் போன்ற சமாச்சாரங்கள் குறித்து விசாரிக்கப் பட்டு வருகிறது. விசாரணையின் பின்னர் இராணு வட்டாரத்தில் பல தலைகள் உருளு

ணுவ அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

லெப்டினன் ஜெனரல் ரோஹான் தலுவத்தை இராணுவ தளபதியாகப் பதவி ஏற்ற

துமாறு இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ரோஹான் தலுவத்தை உத்தரவிட்டுள்ளார்.



ளங்களுக்காக பத்தாயிரம் கோடி ரூபாவரை ஒதுக்கப்படலாம் என நிதி அமைச்சின் வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறீலங்கா விமானப்படையை நவீனமயப்படுத்தும் திட்டத்திற்கேற்ப பிரித்தானியாவிலிருந்து நூற்றி இருபது கோடி ரூபா செலவில் இரண்டு பாரிய

லங்கா விமானப்படையின் விமானங்களை வட பகுதிக்கு செலுத்த விமானிகள் தயக்கம் காட்டினர். சில விமானிகள் தமது பதவிகளை ராஜினாமாச் செய்தனர். இதனை அடுத்து வெளிநாட்டு தனியார் விமான கம்பனியான 'லயன் எயார்' நிறுவனத்திடம் இருந்த விமா



மௌ எதிர்பார்க்கப் படுகிறது.

கிளிநொச்சியைக் கைப்பற்றுவதற்காக ஆனையிறவிலிருந்து 'சத்ஜய' என்ற பெயரில் புறப்பட்ட இராணுவத்தினர் பரந்தனில் நிற்கிறார்களா அல்லது ஆனையிறவிற்கே திரும்பிச் சென்றுவிட்டார்களா என்பது இன்னும் மூடு மந்திரமாகவே இருந்து வருகிறது. ஆனால் படையினர், இன்னமும் பரந்தனை கடந்து கிளிநொச்சியில் இருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் தாம் கைப்பற்றிய இடங்களை பலப்படுத்தி வருவதாக கூறுகின்றனர். ஆனால் படையினர் பழைய இடத்திற்கே திரும்பிப் போய்விட்டதாக சுதந்திரமாக கிடைக்கும்


வீட்டுத் தளபாடங்களை ஏற்றி இறக்கவும், உங்கள் மங்கள வைபவங்களுக்கும், ஊர்வ யாத்திரை போன்றவற்றிற்கும் தேவையான வாகன வசதிகளுக்கு;



நித்தி

Tel: 43 03 07 08 / 48 05 02 14 / 49 23 97 32 - பிரயாண வசதி கருதி: 07 34 80 51 (ADV)

ஸ்பெஷல் குரு பீடா

பாரிசில் பிரபல்யமான கடைகளில் கிடைக்கும்!

உங்கள் தேவைக்கு என்றும் கேட்டு வாங்குங்கள்

தொடர்புகளுக்கு:
அம்பாள் வீடியோ -
26, Rue Perdonnet, 75010
Paris. M°: La Chapelle
Tel: 42 09 33 81 (ADV)

டோட்முண்டில்

செந்தூராஸ்

*Super Market Asian*

மொத்த சில்லறை விற்பனை நிலையம்

*Johanna Melzer str. 4, 44137 Dortmund - Tel: 0231/ 881337*
*Fax: 0231/8280301* PVT. Tel: / Fax: 02304 / 789287

**07.09.96 முதல் விசேட விலை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெரும் சீரகம் | 100g | 0.50 | ரசம் மிக்ஸ் | pkt | 1.75 |
| வெந்தயம் | 100g | 0.50 | நெல்லிக்கிரஸ் | btl | 6.55 |
| கடுகு | 100g | 0.50 | செத்தல் மிளகாய் | | 1.40 |
| USA அரிசி | 5Kg | 10.90 | தீட்டிய சிவப்பு அரிசி | 3.20 - | 3.85 |
| மிளகாய்த் தூள் | 500g | 5.00 | சிவப்பு அரிசி | | 3.20 |
| நல்லெண்ணை | 350ml | 4.75 | சம்பா அரிசி | 3.20 - | 3.45 |
| சுப்பர் சோயா | 100g | 1.35 | குத்தரிசி | | 3.20 |
| தோசை மிக்ஸ் | 400g | 2.75 | புட்டு அரிசிமா | | 3.65 |
| அப்ப மிக்ஸ் | 400g | 2.75 | இடியப்ப அரிசிமா | | 2.75 |
| Nikado Noodles | 400g | 2.30 | உழுத்தம்மா | 500g | 3.50 |
| Harischandra Noodles | 400g | 2.30 | பயத்தம்மா | 500g | 3.50 |
| Lime Picke | | 3.90 | உழுத்தம் பருப்பு | 500g | 1.30 |
| Horlicks | 400g | 4.55 | கடலைப் பருப்பு | 500g | 1.30 |
| இடியப்ப அரிசிமா | 20 Kg | 50.00 | மைசூர் பருப்பு | 500g | 1.30 |
| சம்பா அரிசி | 20 Kg | 60.00 | கித்துள் சக்கரை | | 5.00 |
| குத்தரிசி | 20 Kg | 60.00 | குரக்கன் மா | | 2.75 |
| தீட்டிய சிவப்பு அரிசி | 20 Kg | 60.00 | மோர் மிளகாய் | | 2:30 |
| பெட்டிக் கணவாய் | 2.27Kg | 9.50 | இட்டலி செற் | | 22.50 |
| சிவப்பு குரல் | 1Kg | 9.50 | புட்டுக் குழல் செற் | | 18.50 |
| பாரை, விளை, சீலா | 10Kg | 59.00 | இரும்பு சுரல் | | 32.50 |
| கறுப்பு றால் | 1Kg | 18.50 | கோபால் பற்பொடி | | 4.50 |
| Cleaned றால் | 500g | 7.50 | Baby Eau-de-Cologne | 6.50 - | 7.50 |

புதன், சனிக்கிழமைகளில் உடன் ஆட்டிறைச்சிப் பங்குகள்
ஓடர்களுக்கு அரை ஆடு Kilo - 7.90DM

தபால் மூலம் பெற விரும்புபவர்களுக்கு Nachname மூலம் பொருட்கள் அனுப்பி வைக்கப்படும்

Audio 3.50 முதல் C.D. புதியன 12.50 முதல்.
London விலையில் சிறுவர் சிறுமியருக்கு உடுபுடவைகள், பஞ்சாபிகள்,

*Sennthutas, Am Schulpfad 6,*
*58239 Schwerte-Ergste - Tel: & Fax: 02304 / 789287* (ADV)

# எனது குடும்பத்தை திட்டமிட்டு அவமதித்துவிட்டீர் ரத்வத்தைக்கு ஸ்ரீமாவோ காட்டமான கடிதம்

"என்னையும் எனது குடும்பத்தையும் நீங்கள் திட்டமிட்டு அவமதித்துவிட்டீர்கள் என்பதில் எனக்கு எவ்விதமான சந்தேகமும் இல்லை. நான் சிலரால் தவறாக வழிநடத்தப்பட்டுவிட்டேன் என்று நீங்கள் சொல்வது ஏற்றுக் கொள்ள முடியாது" இவ்வாறு சிறீலங்கா பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் அவரது சகோதரருமான அநுருத்த ரத்வத்தைக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

கடந்த 09.08.96 அன்று இரத்தினபுரியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய ரத்வத்தை ஸ்ரீமாவோவின் மகனான அநுராவின் பிறப்புப் பற்றிய சந்தேகம் ஒன்றை எழுப்பியிருந்தார். இதனால் ஆத்திரமடைந்த அனுரா ரத்வத்தை மீது மான நஷ்ட வழக்குத் தொடர முற்பட்ட நிலையில் 25.08.96 அன்று ஸ்ரீமாவோ, எமது குடும்பத்திற்கு அபகீர்த்தி உண்டாக்கும் செயல் எதிலும் ஈடுபட வேண்டாம் என்று கூறி ரத்வத்தைக்குப் பகிரங்கக் கடிதம் ஒன்றை எழுதியிருந்தார்.

அதற்கு ரத்வத்தை 29.08.96-இல் நான் உங்கள் குடும்பத்தின் மீது அபரீதமான மதிப்பு வைத்துள்ளேன். இந்த விவகாரம் தொடர்பாக உங்களுக்குக் கிடைத்த தகவல்கள் தவறானவை. உங்களை சிலர் தவறாக வழிநடத்திவிட்டனர் என்று பதில் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அதற்குப் பதிலளிக்கும் விதத்தில் 05.09.96 அன்று ஸ்ரீமாவோ மீண்டும் ரத்வத்தைக்கு ஒரு பகிரங்கக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அக் கடிதத்தின் விபரம் வருமாறு.

1996 செப்டெம்பர் 5

அன்புடன் அநுருத்தவுக்கு,

1996 ஓகஸ்ட் 29-ம் திகதியிடப்பட்ட உங்கள் கடிதம் கிடைக்கப் பெற்றேன்.

ஒலிப்பதிவு நாடாக்களை தெளிவாகக் கேட்டதுடன் தேவையான சகல ஆவணங்களையும் உன்னிப்பாகப் பரிசீலித்த பின்னரே 1996 ஓகஸ்ட் 25-ல் உங்களுக்கு கடிதம் எழுதினேன். 1996 ஓகஸ்ட் 9-ல் இரத்தினபுரியில் நீங்கள் நிகழ்த்திய உரையின் மூலம் என்னையும் எனது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களையும் நீங்கள் அவமானப்படுத்தியிருக்கிறீர்கள் என்பதில் எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடமில்லை. ஒலிப்பதிவு நாடாக்களும் ஆவணங்களும் என் நிலைப்பாட்டிற்கு வலுவூட்டியிருக்கின்றன.

ஒலிப்பதிவு நாடாக்களும், ஆவணங்களும் உண்மையைக் கூறுகின்றன. எனவே உங்கள் மீது நான் சுமத்திய குற்றச்சாட்டு, சில இனந்தெரியாத வட்டாரங்களினால் இட்டுக் கட்டப்பட்ட ஒன்று அல்லது திரிபுபடுத்தப்பட்ட ஒன்று என்ற கேள்வி எழுவதற்கு எதுவித காரணமும் இல்லை. நான் தவறாக வழி நடத்தப்பட்டேன் என்ற உங்கள் கூற்று எதுவிதத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது.

எனது மகனின் தாய் தந்தை மரபுரிமை குறித்து நீங்கள் சந்தேகம் கிளப்பியதையும் (எனக்கு எழுதிய கடிதத்தில் நீங்கள் குறிப்பிட்டிருப்பதுபோல்) அவரின் அரசியல் நடத்தை குறித்து கருத்துத் தெரிவித்ததையும் ஒருபோதுமே ஒரேவிதமானவையாகச் சமப்படுத்த முடியாது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் உங்களுடன் கடிதத் தொடர்பு கொள்வதற்கு நான் உத்தேசிக்கவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

உங்கள் உண்மையுள்ள
ஸ்ரீமாவோ ஆர். டி. பண்டாரநாயக்க

## பளை கிராமசேவையாளர் தற்கொலை

பளை உதவி அரச அதிபர்பிரிவின் கிராமசேவையாளரான திரு பொன்னையா விக்னேஸ்வரன் தொழு நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். இவர் தனது நோய்க்கு சரியான சிகிச்சை கிடைக்காத காரணத்தாலும், கொழும்பிலோ, அல்லது மட்டக்களப்பிலோ சிகிச்சை தொடர உதவி கிடைக்காததாலும் மனமுடைந்து தற்கொலை செய்துள்ளார்.

## கலிகையில் சடலம்

கடந்த வாரம் கலிகைச் சந்தியில் நடுத்தரவயது மதிக்கத்தக்க ஒருவரின் உடல் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கிடக்கக் காணப்பட்டது. அவர் யார் என்ற விபரம் கிடைக்கப்பெறவில்லை.

## மூத்த விநாயகர் ஆலயம் தகர்ப்பு

வடமராட்சி கரணவாய் பகுதியில் உள்ள மூத்த விநாயகர் ஆலயத்தை அப்பகுதியில் இராணுவக் காவல்நிலை ஒன்றை அமைப்பதற்காக இராணுவத்தினர் இடித்துத் தரைமட்டமாக்கி உள்ளனர். இவ்வாலயத்தின் கூரை ஓடுகள், மரங்கள், கதவுகள் என்பன இராணுவத்தால் ஏற்றிச் செல்லப்பட்டுவிட்டன.

## ஊரணியில் வைத்தியசாலை இயங்கவில்லை

வல்வெட்டித்துறை ஊரணி வைத்தியசாலை தொடர்ந்து மூடப்பட்டுக் கிடக்கிறது. அவ் வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்களை வரவுப் புத்தகத்தில் கையொப்பம் இட்டவுடன் வீட்டிற்கு செல்லுமாறு இராணுவத்தினர் கட்டளையிட்டுள்ளனர்.

## மந்திகையில் ஆண்களுக்கு அனுமதியில்லை

மந்திகையிலுள்ள பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஆண் நோயாளர்களை அனுமதிப்பதற்கு இராணுவத்தினர் மறுத்துள்ளனர். பெண் நோயாளிகளும் கூட மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். வெளி நோயாளர் சிகிச்சையும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இயங்கிவருகிறது.

## குப்பை எரித்தவர் வைத்தியசாலையில்

நல்லூர் செட்டித் தெருவைச் சேர்ந்த 57 வயதுடைய ஆறுமுகம் யோகநாதன் தனது வீட்டிலிருந்த குப்பையை எரித்துக் கொண்டிருந்தபோது அதற்குள்ளிருந்த இனந்தெரியாத பொருள் ஒன்று வெடித்ததில் அவர் படுகாயமடைந்து யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.


அகில உலக கிருஷ்ணபக்திக் கழக ஸ்தாபக ஆச்சாரியார் அருட் திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா அவர்களின் நூறாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சுவிஸ் தமிழ் ஸ்ரீ கிருஷ்ண பக்திக் கழகம் நடாத்தும்

கோலோக கதம்பம்



விழா ஆரம்பத்தின்போது
இந்தியாவில் 1008 புனித
ஸ்தலங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட
புனித தீர்த்தம் வழங்கப்படும்

மந்திரவாதி தீவானின் மாயாஜாலக் காட்சி

பட்டிமன்றம்
திருக்குறளில் விஞ்சிநிற்பது மக்கள் நலனா? தத்துவமா?
ஸ்ரீமான் வை.லோகநாதன் (ஜேர்மனி)
ஸ்ரீமான் அழகு. குணசீலன் (சுவிஸ்)
நடுவர் ஸ்ரீமான் கோடையிடி தமிழ்குமரன்
ஸ்ரீமான் கீழ்க்கரவை பொன்னையன் (பிரான்ஸ்)
ஸ்ரீமான் கா. விவேகானந்தன் (சுவிஸ்)

கோகுலத்தில் கண்ணன்
சிறுவர்களின் வில்லுப்பாட்டு

பிரதம விருந்தினர்
நாடக திரைப்பட கலைஞர்
ஸ்ரீமான் அ. ரகுநாதன்
(இலங்கை)



இந்திய
கலைஞர்களின்
கிராமிய நடனம்
சாஸ்திரிய நடனம்
பரதநாட்டியம்
கதக்களி
குச்சுப்புடி
இன்னும் பல...

* வீணைக் கச்சேரி
* வில்லைப்படக் காட்சி
* நாடகம்
* பரிசளிப்பு

திரைப்படம்
என்றும் உங்கள் நலன் விரும்பி

மதியம் கிருஷ்ண பிரசாதம்
வழங்கப்படும்
Swiss Tamil Krihna Society,
Postfach116, 8030 Zurich
01 461 70 18
01 431 75 08
035 258 69

03 நவம்பர் 1996
ஞாயிற்றுக்கிழமை
காலை 09.00 மணி முதல்
இரவு 09.00 மணிவரை
Schutzenhaus Albisgütli
Uetliberg str-341
8045 Zürich

Zurich புகையிரத நிலையத்திலிருந்து 13ᵐᵉ Tram இல் கடைசி தரிப்பிடம் Albisgutli பக்கம்.

KAIRAVA CANTRIKA
இசைக்குழுவினர் வழங்கும்
MANTRAROCKMUSIC

விழாப் போட்டிகள்
சிறுவர்களுக்கான வர்ணம் தீட்டும் போட்டி (வயது 6–10 வரை)
கிருஷ்ணருடன் ஒரு நிமிடம் சிறுவர்களுக்கான போட்டி (வயது 10–15 வரை)
கேள்வி பதில் பெரியோர்களுக்கான போட்டி (வயது 15 இற்கு மேல்)
போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி 15.10.1996

எல்லோரும்
வரவேற்கப்படுகிறார்கள்
வாகன தரிப்பிட வசதி உண்டு

ஸ்ரீல பிரபுபாதா நூற்றாண்டு விழாக் குழு

தங்க, வெள்ளி, பதக்கங்கள் பரிசில்களாகவும், பங்குபற்றும் சகலருக்கும் வெகுமதிகளும் வழங்கப்படும்.